# செவ்வந்தி

சட்டம், கலை, இலக்கியம்

ஆசிரியர்:-
பா. தவபாலன்.

20
21

- **தினமணிக் கதிர்.** ஆசிரியர் செவ்வந்திக்கு அளித்த விசேட பேட்டி.
- யாழ் குடாநாட்டின் நீர்வளம் (விசேட ஆய்வுக் கட்டுரை)
- **"புதுயுகம்"** இவ்விதழில் ஆரம்பம்
- தனியார்துறை இயக்கமும் நாடுகளில் அரசாங்க நடவடிக்கையின் அவசியம்.
- **பொது எண்ணம்** (சட்டக் கட்டுரை)
- பரிசு பெற்ற கவிதை, சிறு கதை, கிளிநொச்சி கொலை, கண்ணன் பாடல், தீர்ப்புக் கூறமுடியுமா மற்றும் விசேட அம்சங்கள்.

விலை 1-50

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாணவர் கவனத்திற்கு!

G.A. Q . ,B.A. க. பொ த. உயர்தர சாதாரண தர வகுப்பு மாணவர்களுக்கான பின் வரும் கட்டுரைகளை தாங்கிய செவ்வந்தி இங்கே விற்பனையாகிறது.

பொருளியல்
- ★ அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் நாணய மதிப்பு இறக்கமும்
- ★ இலங்கையின் உள்நாட்டு விவசாயத் துறையும் பொருளாதார அபிவிருத்தியும்
- ★ சென்மதி நிலுவையில் பிரச்சனை ஏற்படுவதற்கான காரணங்களும் அதனைத் தீர்ப்பதற்கு கையாளப்படும் வழிகளும்
- ★ நாணயப் பெறுமதி இறக்கமும் சென்மதி நிலுவைப் பிரச்சனையும்
- ★ பல்தேசியக் கம்பனிகள்
  இலங்கையின் கிராமியப் பொருளாதாரமும், அது எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும்
- ★ சுதந்திர வர்த்தக வலயம் — சில பிரச்சனைகள்

புவியியல்
- ★ சனத்தொகையும், அதன் விளைவுகளும்
- ★ நேருருவெறிய விளக்கத்திற்கு நான்கு படங்கள்
- ★ இலக்கியமும், பண்பாடும்
- ★ இலங்கையின் மீன்வளம்
- ★ உற்பத்திக் கைத்தொழில் நிலையங்களின் நிர்ணயிப்புக் காரணிகள்
- ★ இலங்கையில் வளர்ந்த கட்டடக் கலைப் பண்பாட்டின் தோற்றம்
- ★ சனத்தொகையும், அதன் விளைவுகளும்

இலக்கியம்
- ★ 20-ம் நூற்றுண்டுத் தமிழ் இலக்கியம்
- ★ தமிழியல் வளர்ச்சியின் முன்னோடி 'சுவாமி விபுலானந்தர்'
- ★ பாரதியின் 'கண்ணன் பாட்டு'
- ★ ஆரம்பகாலத் தமிழ் நாவலாசிரியர்களின் குறிக்கோள்கள்
- ★ தமிழில் பக்தி இயக்கம்
- ★ பல்லவர் கால இலக்கிய நெறியும் சோழர் கால இலக்கியப் போக்கும்

இவ் வேறுபட்ட கட்டுரைகள் தனித்தனி இதழ்களில் அல்லாது புவியியல்—சட்டம் இலக்கியம்—பொருளியில் கட்டுரைகள் ஒரே இதழில் எழுதப்பட்டுள்ளது.

'செவ்வந்தி'யில் இவை தவிர

● தொடர் கதைகள் ● சிறு கதைகள் ● கவிதை ● சட்ட கலைச் சொற்கள் ● தீர்ப்புக் கூற முடியுமா ● கேள்வி பதில் ★ தொல் பொருள் கட்டுரை

மற்றும் பல்வேறு அம்சங்கள் வெளிவருகின்றன.

★ தொடர் கட்டுரையாக வெளியான
- ஃ கோகிலாம்பாள் கொலை வழக்கு
- ஃ வில்பத்து கொலை வழக்கு

வெளியாகிய 'செவ்வந்தி' இங்கே விற்பனையாகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆண்டு சந்தா | ... | 13-50 |
| 6 | மாத சந்தா | ... | 7-00 |
| 1 | பிரதி | ... | 1-00 |

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: நிர்வாகி, 'செவ்வந்தி'
185/4, கில்னர் லேன், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 1415

உ
சிவமயம்
ஸ்ரீ
ஸ்ரீ மதே இராமானுசாய நம

வெங்கடேஸ்வரா

பச்சை மாமலை போல்மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

செவ்வந்தி வாசகர்களே!

★ பொருட்கள் தட்டுப்பாடு என்ற கவலையா?
★ கட்டுப்பாட்டு விலையில் இடைக்கவில்லையா?

கவலையை விடுங்கள்
விரையுங்கள் வெங்கடேஸ்வராவிற்கு
தற்போது இங்கே

★ பாட்டா பாதணிகள்
★ பருத்தி, சிந்தெட்டிக், சூட்டிங், சேட்டிங்
★ கைத்தறி, பற்றிக் பிடவைகள்
★ உத்தரவாதமளிக்கப்பட்ட தங்க முலாம் பூசிய ஆபரணங்கள்
★ பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான சகலவித பொருட்கள்
★ அழகிய சிலைகள். பொம்மைகள்

மற்றும் நவநாகரிகப் பொருட்களைக் குறைந்த விலையில்
இலகுவாகப் பெற்றுக்கொள்ள

# வெங்கடேஸ்வரா

இல. 25, நவீன சந்தை,
(மேல் மாடி)
யாழ்ப்பாணம்.

தலைமை அலுவலகம்:

நாதன் அன் கோ.,
102/3, முதலாம் மாடி,
3-ம் குறுக்கு வீதி,
கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வந்தி

இதழ்கள்
**20 - 21**

ஏப்ரல் - மே
1978

## சட்டம் - கலை - இலக்கியம்

"SEVVENTHI" PROGRESSIVE MONTHLY MAGAZINE
Editor: B. THAVAPALAN, 185/4, KILNAR LANE, JAFFNA.

## "வேலியே பயிரை மேய்ந்தால் வேலி தேவையில்லை"

வேள்விக்கு ஆடு, கோழி பலியிடப்படுவதுபோல் இலங்கையில் கடந்த சில வருடங்களாக உயிர்கள் பலிகொள்ளப்படுகின்றன. மனித உயிர்கள் பலிகொள்ளப்படுமளவுக்கு அவர்கள் செய்த பாவம்தான் என்ன? ஒன்றுமில்லை. போகிறது, இவ்வாறு பலிகொள்ளப்பட்ட உயிர்களுக்குப் பரிகாரமாவது இதுவரை வழங்கப்படவில்லை. பெயரளவில் விசாரணை, தீர்ப்பு? கடந்த 27-6-78 அன்று வவுனியாவிற்கும் மாங்குளத்திற்கும் இடையில் இரவு புகையிரதத்தில் நடைபெற்ற சம்பவம் மிகவும் கவலைக்குரியதோடு மட்டுமல்லாமல், கண்டனத்துக்குமுரியது.

சாதாரண அப்பாவி மக்களைப் பாதுகாக்கவென அனுப்பப்பட்ட இராணுவத்தினரால் பிரயாணி ஒருவரின் உயிர் பறிக்கப்பட்டது. பலர் காயமடைந்தனர். சாதாரண விவாதம் உயிரைப் பலிகொடுக்கும் அளவுக்கு மாறிவிட்டதென்றால் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எங்கே போய்விட்டது? பொறுப்புவாய்ந்தவர்களின் பொறுமை எங்கே சென்றுவிட்டது? சில மிருகங்களைக்கூடக் கொல்ல அனுமதியில்லாத இந்நாட்டில், பிரயாணம் செய்யக்கூடப் பயப்படும் அளவுக்கு நடந்த சம்பவங்கள் அப்பாவிப் பிரயாணிகளைப் பயமுறுத்திக் கொண்டிருந்த இவ்வேளையில் இப்படியும் ஒரு பயங்கரம். கவனமின்மையாலோ, தற்செயலாகவோகூட பொறுப்புள்ள ஒரு அதிகாரியின் துப்பாக்கி வெடித்தால்கூட சாதாரண சட்டத்தின்படி தண்டனை கடுமையே. இவ்வேளையில் சாதாரண விவாதம் கைகலப்பாக மாறி உயிரிழப்பில் முடியுமானால் இதற்குரிய தண்டனை ?

"பயிரைப் பாதுகாக்கவே வேலி போடப்படுகின்றது
வேலியே பயிரை மேய்ந்தால் வேலி தேவையில்லை"

எனவே இதுபற்றிய பாரபட்சமற்ற விசாரணை மேற்கொள்ளப்படுவதோடு மட்டுமல்லாது உண்மைக் குற்றவாளிக்கு கடும் தண்டனையும் விதிக்கவேண்டும்.

— ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வந்தி நடாத்திய போட்டிகளில்

# பரிசில் பெற்றோரும் பரிசில்வழங்கியோரும்

## குறுநாவல்:-

★ 1ம் பரிசு:- தங்கப்பதக்கம் - பரிசு பெற்றவர் - திரு. கா. ஜெகநாதன்
பரிசினை அன்பளிப்புச் செய்தவர்;- திரு. இ. அரசரெட்ணம், அதிபர். அரஸ்கோ நிறுவனம், யாழ்ப்பாணம்.

★ 2ம் பரிசு:- 100 ரூபா - பரிசு பெற்றவர் - திரு. ஞானிஜெகநாதன்
பரிசு அன்பளிப்புச் செய்தவர்;- திரு. மகேந்திரன் அதிபர், பெனின்சுலா கிளாஸ் வேக்ஸ் யாழ்ப்பாணம்.

★ 3ம் பரிசு:- 75 ரூபா பரிசு பெற்றவர்:- திரு. வி. எம். வி. ராஜப்பன்
பரிசிலை அன்பளிப்புச் செய்தவர்:- திரு. கே. டானியல் அதிபர், ஸ்ரார் யாழ்ப்பாணம்.

## சிறுகதை:-

6 சிறுகதைகளுக்கு தலா ரூபா 50 பரிசு அன்பளிப்புச் செய்தவர்கள் தொகையிலிருந்து பகிர்ந்து வழங்கப்பட்டது.

★ 50 ரூபா - பரிசு பெற்றவர் - திரு. திக்குவல்லை கமால்
★ 50 ரூபா - பரிசு பெற்றவர் - திரு. க. சந்திரன்
★ 50 ரூபா - பரிசு பெற்றவர் - திரு. எம். ஏ. எம். அஜிவாஹிது

இம் மூன்று பரிசிலையும் அன்பளிப்புச் செய்தவர் டாக்டர். சுரேந்திரன் மோத்தா, டலாங்கொடை

★ 50 ரூபா - பரிசு பெற்றவர் - திரு. த. பரமலிங்கம்
பரிசு அன்பளிப்புச் செய்தவர்:- திரு. கே. பாலகிருஸ்ணன்

★ 50 ரூபா - பரிசு பெற்றவர் - பரிபூரணன்
பரிசிலை அன்பளிப்புச் செய்தவர்:- அதிபர், ஜெசிமா பிக்சர் பலஸ், யாழ்ப்பாணம்.

★ 50 ரூபா பெறுமதியான அண்ணா உற்பத்தி பொருட்கள்
பரிசு பெற்றவர்:- திரு. கா. ஜெகநாதன்
அன்பளிப்பு செய்தவர்:- அதிபர் அண்ணா தொழிலகம், இணுவில்.

## கவிதை

▦ 1ம் பரிசு:- 100 ரூபா பரிசு பெற்றவர் - திரு. த. அன்பானந்தன்
அன்பளிப்புச் செய்தவர்:- அதிபர் A. K. S. நகை மாளிகை, யாழ்ப்பாணம்.

✿ 2ம் பரிசு:- 75 ரூபா - பரிசு பெற்றவர்:- கோப்பாய் சிவம்
பரிசினை அன்பளிப்பு செய்தவர்கள்:- வெளிவாரிகள் பட்டப்படிப்புகள் நிறுவனம், யாழ்ப்பாணம்

▦ 3ம் பரிசு:- 50 ரூபா - பரிசு பெற்றவர்:- கவியரசன்
அன்பளிப்புச் செய்தவர்:- சட்டத்தரணி இ. விஸ்வநாதன், யாழ்ப்பாணம்.

## மாணவர் கட்டுரைப் போட்டி

▦ 1ம் பரிசு:- தங்கப்பதக்கம் பரிசு பெற்றவர்:- செல்வி. அ. யோசபின்
அன்பளிப்புச் செய்தவர்:. திரு. க. கனகராசா அதிபர், மில்க்வைற் நிறுவனம் யாழ்ப்பாணம்.

▦ 2ம் பரிசு:- 100 ரூபா - பரிசு பெற்றவர் திரு. இரா பாலபாஸ்கரன்
அன்பளிப்புச் செய்தவர்:- திரு. குணரத்தினம் அதிபர், சீமாசில்க் நிறுவனம், திருநெல்வேலி.

✿ 3ம் பரிசு:- 75 ரூபா பரிசு பெற்றவர் செல்வி சி. ரதி
அன்பளிப்புச் செய்தவர்கள்:- ''பிறைற் கல்வி நிலையம்'' யாழ்ப்பாணம்.

▦ 4ம் பரிசு:- 50 ரூபா பரிசு பெற்றவர்:- செல்வி க. அருந்தவம்
அன்பளிப்பு செய்தவர்;- அதிபர் கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம்.

இப்போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கும் செவ்வந்தியின் சார்பாக பரிசில் வழங்கி கௌரவித்த சகல தொழில் அதிபர்களுக்கும், தனியாருக்கும் வாசகர்களுடன் சேர்ந்து செவ்வந்தி தனது மனம் நிறைந்த நன்றியை தெரிவித்துக்கொள்ளுகின்றது.

முக்கிய குறிப்பு:- கடந்த 20-5-78ல் நடந்த பரிசளிப்பு விழாவில் வைத்து பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. சமூகந் தராதவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டு விட்டன என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஆசிரியர் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வந்தி பரிசளிப்பு விழா

## செவ்வந்தி பரிசளிப்பு விழாவில் பங்குகொள்ள முடியாமற்போன பல்லாயிரக் கணக்கான வாசகர்களுக்காக விழாபற்றிய சில தகவல்கள்

22-5-78 அன்று ஒரு சஞ்சிகையின் பரிசளிப்பு விழாவுக்கு இப்படியும் மக்கள் வெள்ளமா என்று வந்தோர் வியக்கும்வண்ணம், மிக நீண்ட இடைவெளிக்குப்பின் ஆயிரக்கணக்கில் மக்கள் மனமகிழ்வுடன் கலந்துகொண்ட ஓர் இலக்கிய விழாவாக செவ்வந்தி பரிசளிப்பு விழா பரிணமித்தது. வளர்ந்துவரும் ஓர் சஞ்சிகையின் வளர்ச்சிக்கு அவர்கள் ஆற்றிவரும் பங்களிப்பு எவ்வளவென்பதை அன்றைய விழாவில் வாசகர்கள் காட்டிய க்கறையிலும் மனமகிழ்விலுமிருந்து அறியக் டியதாய் இருந்தது.

சட்டத்தரணி க. சற்குணநாதன் அவர்களின் ரவேற்புரையுடன் விழா ஆரம்பமாகியது. வந் ருந்தோரையும், நிகழ்ச்சிகளில் பங்குபற்றியவர் ளயும், செவ்வந்திக்குப் பரிசில்கள் வழங்கி உதவி ந்தோரையும் வரவேற்றுப் பேசினர்.

விழாவுக்குத் தலைமைதாங்கிய யாழ்ப்பாணம் ந்துக்கல்லூரி அதிபர் திரு. பொ. ச. குமாரசாமி வர்கள் தனது தலைமையுரையில் ஈழத்து வாச ர்கள் தரமான சஞ்சிகைகள் எவற்றிற்கும் ஆதரவு ளிக்கவேண்டும் என்வும், செவ்வந்தி போன்ற றிவு வளர்ச்சிக்குப் பாடுபடும் சஞ்சிகைகள் மக் ள் மத்தியில் அவை ஆற்றிவரும் சேவைக்கேற்ற ளர்ச்சியைப் பெறும் எனவும் குறிப்பிட்டார்.

அடுத்து, யாழ். வளாக விரிவுரையாளர் திரு. நுஃமான் அவர்கள் இலக்கியச் சொற்பொழிவாற்றினர். விழாவின் சிறப்பு நிகழ்ச்சியான வழக்காடு மன்றம் அடுத்து இடம்பெற்றது. ''குற்றவாளிக் கூண்டில் தமிழ் நாட்டுச் சஞ்சிகைகளை விற்பனை செய்யும் ஈழத்து விற்பனையாளர்கள்'' என்ற வழக்கு அன்றைய வழக்காடு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. வாதிகளாக திரு. சொக்கன், திரு. செங்கை ஆழியான், திரு. பி. நடராஜன் ஆகியோரும், பிரதிவாதிகளாக திரு. குமரன், திரு. மகேந்திரன், திரு. வரதராஜன் ஆகியோரும் வாதிட்டனர். இதற்கு நீதிபதியாக திரு. தேவன் கடமை புரிந்தார். மூன்று மணித்தியாலங்கள் வரை பகவும் சுவையாக குற்றச்சாட்டுகளை வாதிகளும், மறுப்புக்களை ஆதாரம் காட்டி பிரதிவாதிகளும் வாதிட்டனர், ஈற்றில் நீதிபதி தனது தீர்ப்பில் ஈழத்து விற்பனையாளர்களை குற்றவாளிகள் எனக் கண்டு 6 மாத கால நன்னடத்தைப் பிணையில் விடுதலை செய்தார்.

அடுத்து, பரிசு பெற்ற எழுத்தாளர்களுக்குப் பரிசுகள் வழங்கிய விழாவின் பிரதம விருந்தினராகிய யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி திரு. எம். எம். அப்துல் காதர் அவர்கள் உரையாற்றுகையில், ''நீதித்துறைக்குச் சொந்தமான என்னை இலக்கியத் துறைக்கு இறங்கவைத்த செவ்வந்தி கலை இலக்கிய வட்டத்திற்கு எனது நன்றியைத் தெரிவிப்பதில் நான் பெருமை அடைகிறேன். ஒவ்வொரு மனிதனின் அன்றாட வாழ்க்கையோடு இலக்கியமும் ஒன்றிப் பிணைந்திருப்பதை எவரும் மறுக்கக்கூடாது.

மேலும் தொடர்ந்து பேசிய அவர் 'நீதித் துறையில் நான் படித்தறியாத பாடங்களை, நீதித் துறை சம்பந்தப்பட்ட பல விடயங்களை இங்கு நடைபெற்ற வழக்காடு மன்றம் மூலம் கேட்டறிந்து கொண்டேன். இப்படியான வழக்குரை மன்றங்களை மாணவர்கள் மத்தியில் நடாத்துவதுமூலம் பல சட்ட நுணுக்கங்களை அவர்கள் தெரிந்து கொள்வதோடு, குற்றச் செயல்களையும் நாட்டில் நடைபெறாது செய்துவிடலாம். எமது ஈழத்துச் சஞ்சிகைகள் இங்கு அதிகம் விற்பனையாவதில்லை என்ற

(15-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வாசகர்களைச் சாடுகிறார் "தினமணிக்கதிர்" ஆசிரியர் கே. ஆர். வாசுதேவன்



தினமணிக்கதிர் ஆசிரியர்

பேட்டி கண்டவர்:
**கணபதி கணேசன்**

தமிழகத்தில் பிரபல்யம் பெற்ற சஞ்சிகைகளுள் ஒன்ருன தினமணிக் கதிர் ஆசிரியரைச் சந்திக்கவேண்டுமென்ற ஆவலுடன் அவரது அலுவலகத்தினுள் நுழைந்தேன். அப்பொழுது அவர் அலுவலகத்தில் இருக்கவில்லை. விசாரித்ததில் அவர் வீட்டில் இருப்பதாகவும், வீட்டுக்குச் சென்ருல் சந்திக்கலாமென்றும் முகவரி தந்து அனுப்பினுர்கள். உடனே மயிலாப்பூரில் உள்ள அவரது இல்லத்திற்குவிரைந்து சென்றேன்.

ஆசானுபாகு, சிவந்தமேனி தொந்தி திருநாமம், நான் சென்று அறிமுகப்படுத்திக் கொண்டதும், ஈழத்து இலக்கியம் பற்றி அதிக அக்கறையுடன் விசாரித்தார். மாத்தளை சோமுபற்றிக் குறிப்பிட்டார். மாலை 4மணிக்கு தினமணிக் கதிர் அலுவலகத்தில் சந்திக்குமாறு வேண்டினுர் பழகுவதற்கு இனிய மனிதர். தற்பெருமை என்பது இஞ்சித்தும் இல்லை. சரியாக 4மணிக்கே அலுவலகம் வந்து எனக்குப் பேட்டியளிக்க ஆயுத்தமானுர்.

கே. இலங்கையில் அளவுக்கதிகமாக இறக்குமதியாகும் தென்னிந்திய சஞ்சிகைகள் தடை செய்யப்பட வேண்டும் என்று இலங்கை வாசகர்கள் கூறுகிருர்கள். இதுபற்றி தங்கள் கருத்து.

ப. இலங்கை வாசகர்கள் அவற்றை விரும்பி வாங்குகின்ருர்கள். எனவேதான் அவற்றை இறக்குமதியாக்கின்ருர்கள். வாசகர்கள் அவற்றை வாங்காவிடில் வியாபாரிகள் அவற்றை இறக்குமதி செய்யவேண்டிய அவசியமேயில்லை. இதில் பத்திரிகை நிறுவனங்களைக் குறை கூற முடியாது.

கே. தமிழகத்துச் சஞ்சிகைகளில் பெரும்பாலும் ஆபாசமே மிஞ்சிக்கிடக்கின்றது என்று கூறுகின்ருர்களே... இது பற்றித் தங்கள் கருத்து யாது?

ப. அதிகம் என்பது உண்மைதான். ஆனல், செக்ஸ் என்பது மிகவும் முக்கியமானவொன்று. கதைகளின் முடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் புதிய தலைமுறைகளை உருவாக்குவதுதான் தவறு. அதாவது அத்தகைய கதைகளைப் படிப்பதினால் கெட்டுப்போகும் தலைமுறையினரைப் பெரும்பாலும் கதைகளின் முடிவைக் கதையைப் படிக்கும் வாசகர்களே ஊகித்தறியும்படி விட்டுவிட வேண்டும். செக்ஸ் அவசியம் தான். ஆனால் அதுவே தனி ஒரு பாத்திரமாகி விடக் கூடாது.

கே. நீங்கள் இலக்கியத் துறையில் எவ்வாறு ஈடுபடலானீர்கள்...?

ப. நான் குழந்தைப் பருவத்திலிருந்தே சமூகத்திற்குச் சேவை செய்ய வேண்டும் என்று ஆவல் கொண்டிருந்தேன். என் குரு ஸ்ரீநிவாசன் அவர்கள். 1915-ம் ஆண்டிலிருந்து சமூக சேவையில் ஈடுபடலானேன். பின்னர் படிப்படியாக இலக்கியத்துறையில் நுழைந்தேன், என்னைப் பொறுத்தவரையில் இலட்சியம்தான் மருவி இலக்கியம் என்று ஆகியது என்பேன்.

கே. மக்களை நல்வழிப்படுத்த சிறந்த சாதனம் சினிமாவா? பத்திரிகையா?

ப. சினிமாதான். படித்த மக்கள்தான்--நான்கு எழுத்துத் தெரிந்தவர்கள் பத்திரிகையைப்படிக்கிறார்கள். ஆனால் அரிச்சுவடியே தெரியாத மனிதன் சினிமா பார்க்கிறான். பத்திரிகை நுழைய முடியாத இடங்களில் எல்லாம் சினிமா காட்டப்படுகின்றது. கிராமத்தின் பட்டி தொட்டி எல்லாம் சினிமாதான். என்றுமில்லாதவாறு சினிமா மோகம் தற்போது அதிகரித்துள்ளது. அதனால் பத்திரிகைகளை விடச் சினிமா மேம்பட்டு நிற்கிறது.

கே. தமிழகத்தில் அடிக்கடி உதயமாகும் புதுக்கட்சிகள்பற்றி...!

ப. உலகம் அழியும் என்று சகல மதங்களும் கூறுகின்றன. உண்மைதான். உலகம் நிச்சயமாக அழியும். ஆயிரமாயிரம் கட்சிகள் உருவாகும். இறுதியில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு கட்சி என்று ஆகினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இப்படி உதயமாகும் கட்சிகளுக்குள் அடிதடி, குத்துவெட்டு இப்படி ஏற்பட்டு உலகமே அழியும். பிரளயம் ஏற்படும்.

கே. தனிப்பட்ட சில எழுத்தாளர்களின் சஞ்சிகைகளைத் 'தத்து' எடுத்து வெளியிடும் பத்திரிகை நிறுவனங்கள் பற்றித் தங்கள் கருத்து யாது? உதாரணமாகத் தமிழ்வாணனின் கல்கண்டு, சோவின் துக்ளக்.

ப. நீங்கள் இப்படியொரு கேள்வியைக் கேட்டதே தப்பு. தனிப்பட்ட எழுத்தாளனுக்காக மட்டும் சஞ்சிகை நடத்தப்பட்டாலும் கடையில் வாசகர்கள் விரும்பி வாங்குகின்றார்கள். எனவே பத்திரிகை நிறுவனங்கள் வெளியிடுகின்றன. இதில் பத்திரிகை நிறுவனங்கள்மீது எந்தத் தவறும் இல்லை.

கே. இலங்கையில் அண்மையில் நடந்த இனக்கலவரம் பற்றி யாதேனும் கூற விரும்புகிறீர்களா?

ப. இலங்கை வாழ் தமிழ் மக்களின் பிரச்சனைகள் பற்றி நான் நன்கு அறிவேன். தமிழ் மக்கள் எவ்வளவு பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டுமோ அவ்வளவு கடைப்பிடிக்க வேண்டும். சிங்கள இனத்தவன் தான் செய்வது தவறு என்று உணரும் வரை நாம் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். அதுதான் வெற்றிக்கு அறிகுறி. அஹிம்சை தோற்றதே இல்லை...

திரு. கே. ஆர். வாசுதேவன் அவர்கள் நல்ல மனதுடன் இலங்கைச் சஞ்சிகை ஒன்றுக்குப் பேட்டி அளித்தமைக்குச் செவ்வந்தி வாசகர் சார்பில் நன்றி கூறி விடைபெற்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ✷ புதுயுகம்

செவ்வந்தியில் எழுத்துலகுக்குப் புதியவர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்னும் ஆவலில் எழுந்த பகுதியே இப் புதுயுகம். பெருமளவில் மாணவ-மாணவியர் பங்கு கொள்வதற்கு இப்பகுதி இடம் அளிக்கும். பெயர் தெரியாதவர்களின் ஆக்கங்கள் தரமுடையதாயினும் குப்பைக் கூடைக்குப் போகும் இக்காலத்தில், இத்தகைய புதுயுகம் பகுதி பல வகையிலும் கனிப் படைப்பாளருக்கு உதவும் என்பது உறுதி. எவ்வகையான ஆக்கங்களாயினும், எத்துறை சார்ந்ததாயினும் புதுயுகத்தில் இடமுண்டு விரும்புபவர்கள் ஆக்கத்துடன் தங்கள் புகைப்படத்தையும் அனுப்பி வைத்தால் அவை பிரசுரமாகும். சிறிய கட்டுப்பாடு, எழுத்துத்தெளிவு, கூடியளவு சுருக்கமான ஆக்கங்கள் மேலும் பலர் இப்பகுதியில் பங்குகொள்ள வழிவகுக்கும் என நம்புகிறேன். எமக்கு கிடைக்கும் ஒழுங்கின்படியே இவை பிரசுரமாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

— ஆசிரியர் —

## ஜனநாயக ஆட்சியில் பத்திரிகைகளின் கடமைகள்

ஆட்சியில் சிறந்தது ஜனநாயக ஆட்சி என்பது எவராலும் மறுக்க முடியாத ஒரு உண்மையே. ஏன்! ஆபிரகாம் லிங்கன் கூற்றை நோக்குவோமானால், "ஜனநாயகமென்பது மக்களை மக்களே ஆள்வது" என்றார். பொதுவாக நோக்குவோமானால் அது சர்வாதிகார ஆட்சிக்கு நேர் எதிரிடையாக உள்ளதே ஆகும். இலங்கையில் நடைமுறையில் இருப்பது ஜனநாயக ஆட்சியே. ஜனநாயக ஆட்சி ஒரு நாட்டில் சிறக்க ஏதுவாகப் பல காரணங்கள் இருக்கலாம். அவற்றில் பத்திரிகைச் சுதந்திரமும் ஒன்றாகும். ஜனநாயக ஆட்சி பூரணமாக இருக்க வேண்டும் என்பதற்காகப் புதினப் பத்திரிகைகள் சுதந்திரமாக இருக்கவேண்டும் எனப் பல அரசியல் வல்லுனர்கள் கூறியுள்ளார்கள்.

பத்திரிகைகள் நாட்டில் நடக்கும் அன்றாடச் செய்திகளை வெளியிடுவதால் மக்கள் நாட்டின் போக்கையும், அன்றாட நிலைமையையும் புரிந்துகொள்ள முடிகிறது. அரசாங்கக் கொள்கைகள், திட்டங்கள் என்பனபற்றி மக்களுக்குத் தெரிவிப்பதுடன் தங்களது கருத்துக்களையும் தெரிவிக்கின்றன. இதனால் அரசாங்கத்தின் கொள்கைகள் சரியானதா? பிழையானதா? என்பதை மக்கள் அறிய முடியும். தேர்தற்காலங்களில்போட்டியிடுவோர் தத்தம் கருத்துக்களையும் உறுதி மொழிகளையும் திடமெனக் கூறி வெற்றி பெற்று தேசியப் பேரவை செல்கிறார்கள். அவர்கள் கூறிய உறுதி மொழிகள் செயற்படுகின்றதா? தங்கள் குறைகளைப் பற்றி அவர்களது பிரதிநிதிகள் கூறுகின்றனரா? என்பது பற்றியும் ஒவ்வொரு பிரதிநிதிகளும் என்னென்ன விடயங்கள் பற்றிப் பேசுகின்றனர் என்பதையும் புதினப் பத்திரிகைகள் உடனுக்குடன் வெளியிடுகின்றன. இதனால் ஒவ்வொரு பிரஜையும் தத்தம் பிரதிநிதியைப் பற்றித் தெரிந்து கொள்ளக்கூடியதாகப் பத்திரிகை இருக்கிறது. அது மாத்திரமல்ல; தங்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முயலுகின்றனரா? அல்லது தேர்தற் கால



செல்வன் சி. பாலேந்திரன்
கொக்குவில்

உறுதிமொழிகள் யாவும் காற்றுகப் பறந்துவிட்டனவா என்பதைப் பத்திரிகை வாயிலாக அறிந்த மக்கள் அரசியல் கற்றதும் அல்லாமல் தலைவன் எப்படி இருக்கவேண்டும் என்பதையும், அரசியல் ஒரு சூதாட்டமாக இருக்கக் கூடாது என்பதையும் நன்கு புரிவர்.

பத்திரிகைச் சுதந்திரமானது உள்ளதை உள்ளவாறு கூறுவதால் பிழை விடுகின்ற கூட்டத்தையும், நடைமுறை அரசையும் தவருன வழிகளில் செல்லவிடாது தடுக்கின்றது. அரசின் செயல்த்திட்டங்கள் முன்கூட்டியே பத்திரிகைகளில் வருவதால் இதைப் புரிந்த மக்கள் தங்கள் சொந்த விருப்பு வெறுப்புக்களில் ஆதரிக்கக்கூடியவற்றை ஆதரித்தும் கண்டிக்க வேண்டியவற்றைக் கண்டித்தும் பத்திரிகைக்கு எழுதும் சுதந்திரம் உள்ளதால் அரசாங்கம் குறிக்கப்பட்ட செயற் திட்டத்திற்கு ஆதரவு உண்டா என்பதை அறிந்து செயற்பட முடியும்.

சர்வாதிகார நாட்டிலே பத்திரிகைச் சுதந்திரம் இல்லை. அரசு சார்பான செய்திகளையே அது வெளிப்படுத்துகிறது. இதனுல் மூடப்பட்டவை மூடப்பட்டும், ஊழல்கள் நிறைந்தும் காணப்படும். ஆனுல் ஜனநாயக ஆட்சியில் தனிப்பட்ட பிரஜைக்குக்கூடப் பத்திரிகைச் சுதந்திரம் உண்டு.

ஜனநாயக நாட்டில் உள்ள பத்திரிகைகள் நாட்டின் உண்மை நிலையை மக்களுக்கு எடுத்துக் காட்டவேண்டிய கடமையை உடையதாக இருக்க வேண்டும். மக்கள் அபிப்பிராயத்தை எழுதுவதைத் தவிர அவை தங்களது அபிப்பிராயத்தை மக்களது அபிப்பிராயமாக மாற்றி எழுத முயலக்கூடாது. அன்றியும் மக்கள் அரசியலில் கூடிய அறிவைப் பெறக்கூடிய முறையில் அவைகளை வெளியிடுவதோடு நாட்டின் அரசாங்கம் சர்வாதிகாரமாகச் செல்லாது தடுத்து நிறுத்தி ஜனநாயக முறையில் செயற்படக் கூடியதாக ஆக்க முயலவேண்டும். அன்றியும் ஜனநாயக நாட்டில் மக்கள் கொள்கைகளுக்கு அரசாங்கம் மதிப்புக் கொடுக்கிறதா? என்பதை எடுத்துணர்த்த வேண்டிய கடமையுடையதாகவுள்ளது. மக்களது சுதந்திரம் சரியான முறையில் பாதுகாக்கப்படுகின்றனவா? என்பதைத் தெளிவுபடுத்தும் முக்கிய கடமைகளைக் கொண்டதாக ஜனநாயக நாட்டில் பத்திரிகைகள் அமைய வேண்டும். ●

---

சிறுகதை



# ✷ ஒரு தீபம் அணைகின்றது ✷

சிவா பரமானந்தன் - மண்டூர்

கலை வளரும் தொழில் வளரும் கவி வளரும் செறிந்து கந்தர்வ லோகமாக மிளிர்கின்றது களுவாஞ்சி நகர். அதனூடே எங்கனை சிக்கல்கள் பரந்து நகரின் சிறப்பைக் குறைக்கின்றன. அத்திருநகரின் ஒரு ஏக சத்திரமான இடம் கந்தர்வமடம். மடத்தைச் சுற்றிப் பல குடும்பங்கள் செறிந்துள்ளன. அதனுள்ளே சீரும் சிறப்புமாக மிளிர்வது நாகராசாவின் குடும்பம் ஒன்றுதான். பல காலம் ஏழ்மையிலே பிறந்து, ஏழ்மையிலே வளர்ந்து முயற்சி என்ற தளையின் கொம்பிலே முன்னேற்றம் கண்டவர் நாகராசா.

முயற்சியின் விளைவே அவரை இன்று நாலு பேர் மதிக்க வாழ வைக்கின்றது. அவருக்கு எத்தனை தடங்கல் இருந்தாலும் பார்த்தாவுக்கேற்ற பதிவிரதையாகத் திகழ்ந்தாள் அவரது மனைவி கனகம் தங்கமான குணம், பரந்த தயாள மனப்பான்மை, இவைகளே அவர்களின் மதிப்புக்குக் காரணம். எனலாம். இருந்தும் ஒரேயொரு மகனை ஆனந்தனைப் பாடுபட்டுப் படிப்பிப்பதோடு கண்ணுக்குக் கண்ணாக வளர்த்தார். தந்தை சொல்லைத் தாரக மந்திரமாக ஏற்று வளர்ந்தான் அத்தனயன். தன் நலம் கருதாது பொது நலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No..........

புரியும் சீரிய தொண்டாகும் உயிர்களின் மீது கொண்டுள்ள அளவற்ற அன்பும் அவனை இன்று வரை நல்லவனாகவே வாழச் செய்தன.

பாடுபட்டுப் படிப்பின் எல்லையைத் தாண்டுகின்ற நிலையில் அவன் மன எண்ணங்களும் சூழ்நிலைகளும் உருமாறி உழலத் தொடங்கின. காலத்தின் கோலம் ஆனந்தனை மாற்றியதில் வியப்பில்லையே. ஆனந்தன் கடந்த ஒரு வருடத்துள்ளே எஸ். எஸ். சி. பரீட்சையைத் தேறிப் பல்கலைக் கழகப் புகுமுகவகுப்பிலே பயின்று வருகிறான். முயற்சி என்ற கொம்பின் விளைவே அவனையும் அவன் குடும்பத்தையும் இன்று இந் நிலைக்குக் கொண்டுவந்தன. பாடுபட்டுப் படித்துப் படிப்பின் உச்சியினைத் தாண்டுகின்ற நிலையில்!

பருவம் மாறியது, காலக் கண்ணாடி ஒரு தரம் ஆடி அசைந்தது. அவன் வாழ்விலும் இன்று வரை காணாத மலர்ச்சியொன்று இழையோடத் தொடங்கியது.

அவன் படித்த வகுப்பில் தான் சகோதரி சோதியும் பயின்று வந்தாள். காலத்தின் கோலம் அவனை மாற்றினாலும் கலை என்ற உணர்ச்சி அவனைப் பற்றிப் பிடித்திருந்தது. கலைப் பித்தனாகவே ஆனந்தன் உதயமானான சல்லூரியிலே சகோதரத்துவம் வளர்ந்தது. அது கால மாற்றத்தின் சூழலில் அன்பாக வளர்ந்து, ஆசையாக மணம் வீசிக் காதலாக முகிழ்ந்துவிட்டதெனலாம். பெயர்க்கேற்றபடி சோதி சோதியாகவே வாழ்ந்தாள். தற்கால உலகியல் அவளைச் சிறிது மாற்றியதே தவிர அவளின் குணங்களும் பண்புகளும் நல்லனவாகவே மிளிர்ந்தன.

''உலகம் என்ற பூஞ்சோலையில் மலரும் மலர்கள் தான் எத்தனை! மணம் பரப்பி வீசும் மலர்களாக எல்லாம் மலரமுடியுமா! மலராத மலர்களும், மலர்ந்தும் வாடாத மலர்களும் மலர இயலாத மலர்களும் எத்தனை! கர்ம தேவன் படைப்பினிலே நாம் காண்கின்ற பொருட்களே ஒரு விதத்தோற்றத்தானே! அவ்வகையில் ஜோதியின் சிலபண்புகளும் அவனைக் கவரத் தொடங்கியதில் வியப்பில்லை. அவனது பரந்த உள்ளமும், தியாகசீலமும் தயாள குணமும், கலைப்பித்தும், அவனை அவள் இடத்து ஆட்படுத்தியதில் தப்பும் இல்லை. ''கல்லூரிக் காதல் படலைவரை'' என்ற மொழியை அறியமுடியாத உள்ளம் இல்லாதவனா ஆனந்தன் அவனும் உணர்ந்துதான் அவளை நேசித்தான். ஆனந்தனின் பண்பை அறிந்துதான் அவளும் நேசித்தாள். ''ஞாவும் யாயும் யாராகியரோ'' என்ற பாடல் அவர்களைப் பொறுத்தவரையில் உண்மையாகவே இருந்தது.

கல்லூரிக் காதல் கனிந்து பல இடங்களிலும் பரவச் சந்தர்ப்பமும், சூழ்நிலைகளும், வழிவகுத்தன. இதுவரை இந்த விடயம் பெற்றோர்களின் செவிக்கு எட்டவில்லை. ஆனால் ஊர் வாயை மூட உலைதேவை இல்லையே! கா......த......ல் என்ற பெயரளவில் பேச்சளவில் கதையளவில் இருந்தே தவிரத் தப்பான வழியில் செல்லச் சந்தர்ப்பம் இடமளித்தபோதிலும் ''மனம்'' என்னும் பேய் அவனை விரட்டிப் பயமுறுத்தியது. ஜோதி அன்று தனிமையிலே ஆனந்தனைக் கல்லூரியில் சந்தித்தாள்.

ஆனால் அவள் மனத்தின் இதயக் கனவுகளை உணர்ச்சிப் பிரதிபலிப்பை வெளியிட முயன்றும் வசதி கிடைக்கவில்லை. ஆனால் அன்றொரு நாள் சந்தர்ப்பம் பிணைக்க வைக்குமாறு சதி செய்துவிட்டது. அன்று ஜோதி மனந்திறந்து வெளியிட்டாள் எண்ணங்களை, ஆனந்தன் காதலைப்பற்றியே விமர்சித்தான். அம்பிகாபதி-அமராவதி, லைலா-மஜ்னு, றோமியோ-யூலியட், அனார்கலி-சலீம், துஸ்யந்தன்-சகுந்தலை ஆகியவர்கள் அவன் பேச்சினிலே கலந்து விளையாட்டினர்.

''ஜோதி காதல் என்பது ஒரு பூங்கொடியாகும். அதனைக் கசக்கி எறியும் புஸ்பமாலையாக நினைக்கக்கூடாது. ஜோதி கா......த......ல் இன்று கடைச் சரக்காக மதிக்கப்படுகின்றது. நான் எங்கோ பிறந்தவன் நீ எங்கோ பிறந்தவள் நம் இருவரிடையே அன்பு, பண்பு என்ற பாசப் பண்பு பரந்தாடுகிறது. நான் உன்னை நேசிக்கின்றேன். நீ என் அன்புக்காகத் தவிக்கின்றாய். இதில் ஏதும் தப்பில்லையே. அவர்களை அறியாது பேச்சுக்கள் கலந்துறவாடின ஆனால் கால நேரம் இடம் கொடுக்குமா? பகலவனும் தன் பரிமாண ஒளியை மங்க வைத்து மலையடியில் துயில் கொள்ளும் வேளை......அத்துடன் இருவரும் விடைபெற்றுச் சென்றனர்.

பல்கலைக்கழகப் பரீட்சையும் நெருங்கியது, காலத்தை விரயமாகக்காது படிப்பனிலே ஈடுபட்டு வந்தான் ஆனந்தன் ஆனந்தனுக்கு எவ்விதத்தும் சளைத்தவளல்ல என்ற உண்மையைக் காட்டுமாறு ஜோதியும் பரீட்சைக்காக விழுந்து விழுந்து படித்தாள். பலன் இதற்கிடையில் ஜோதியின் பெற்றோர் தம் அந்தஸ்த்துக்கும், கௌரவத்துக்கும் ஏற்க அவளுக்கு முறையான அத்தை மகன் பாலுவை மணம் செய்விக்க விரும்பித் திகதியும் குறித்துவிட்டு ஜோதியிடம் கூறினர். இதுவரை தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர்களின் சொல்லையேதட்டி யறியாத ஜோதி இதில் தவறுவாளா? ஆனால் பேச்சைக் கேட்டபோது அவள் உள்ளம் குமுறும் எரிமலையாகக் கொந்தளிக்கும் கடலாக, பயங்கரச் சூறுவளியாக மாறியது.

இன்னும் இரண்டொரு நாளில் என் பிரேதத்தினையாவது அடக்கம் பண்ணும் உரிமையை நீங்கள் ஏற்றுச் செய்தல் வேண்டும் வருகிறேன் என்று கூறியவள் சென்றே விட்டாள். கால ஏடு புரண்டது, சிந்தனைக் குருவி சிறகடித்தது. ஆனந்தனின் மனமும் மாறியது அசையாத நம்பிக்கையுடன் அவள் எண்ணங்களையும் செயலையும் பேனாவும் காகிதமும் காட்டின.

அன்பான சோதிக்கு!

ஆனந்தனின் உளம் கனிந்த நன்றி அன்று நீ கூறியதை நான் சிந்தித்தேன் ஜோதி திடமான முடிவுக்கு வந்துள்ளேன். நான் என் காதலைத் தியாகம் செய்கின்றேன். இது சத்தியம். நீண்ட நாளாக நான் எதையாவது தியாகம் செய்ய வேண்டும் என்று ஆவலாக இருந்தேன் அது இப்படி முடியுமென நான் கனவால் கூட நினைக்கவில்லை. ஆயினும் இதனையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

''வாழ்வில் என்றாவது ஒரு மலர்தான் பலர முடியும் மலர்ந்த மலர் வாடியபின் வாழ்வே கிடையாது என வெறுப்பவர் பலபேர் அது கயமைத்தனம். நாம் யாவரும் வாழப் பிறந்தவர்கள் இடையில் பருவக் கிளர்ச்சி மனிதனைப் பயனின்றி ஆட்டும். நாம் ஆடக்கூடாது ஆடினால் கோழை எல்லாரும் காதலிக்கின்றார்கள். மணம் முடிக்கின்றார்கள் இல்லையே? அவ்விதத்தில் நாமும் அப்படியே... மடுமலையை நாட முடியாது. ஆனால் நான் காதலைத் தியாகம் செய்துவிட்டு உன்னை என் மனத்திரையில் வைத்திருப்பது குற்றமென நீ உனரலாம். ஆனால் நான் எங்கிருப்பினும் உன் நினைவினால் சில ஓவியங்கள். காவியங்கள் படைத்துச் சாந்தமாக இருப்பேன் வருகின்றேன்

இவ்வண்
ஆனந்தன்

ஆனந்தன் மடலை மறுநாளே கையில் சேர்த்துவிட்டு விடைபெறமுயன்றான் ஆனால் அவளின் சில புத்திமதிகள் அவன் வாழ்வையே மாற்றியமைத்தன ஆனந் நீங்கள் காதலைத் தியாகம் செய்தால் ''தியாகதீபம்'' என்ற பட்டம் பெறமுடியாது. எனக்காக நீங்கள் உங்கள் நாட்டுப் பிரயாணத்தை விட்டுக் கல்லூரியில் படித்து முன்னேற வேண்டும் அப்போது தான் என் உள்ளம் சாந்திபெறும்.

மறுவாரம் பாலு ஜோதி திருமணத்தை நிறைவேற்றிவிட்டு வெளியில் வந்ததுதான் அவன் மனம் அவளின் தூயபண்பினையும் ''நீங்கள் என்றும் தியாகச் செம்மலாக வாழுங்கள் என்ற வாய்மொழியையும் நினைந்து நினைந்து இன்ப லாகிரியில் மூழ்கியது.

''ஆனந்'' உங்களைப்போன்ற தியாகிகள் உலகில் பிறக்கவேண்டும் நீங்கள் என்றும் தியாக தீபமாகவே வாழுங்கள் என்ற வாய்மொழியும் ஆசீர்வாதமும் அவனை இன்றுவரை மனிதனாக நடமாட வைத்து இன்று ஒரு பட்டதாரியாகவும் மாற்றி விட்டது. அவன் இன்னும் அந்த (Photo) நிழலுக்குள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறாளா?


## மில்க் வைற் மேலுறைகளின் பெறுமதி!

| | | |
|---|---|---|
| ★ 1. | மாதாந்தச் செய்தி ஒன்று அல்லது வெளியீடுகளில் ஒன்று | நீலசோப் உறை 10 அல்லது நீம் சோப் உறை 2 அல்லது பார் சோப் உறை 2 அல்லது மெடிக்கேட்டட் உறை 2 அல்லது சலவைப் பவுடர் உறை 2 |
| ★ 2. | பொலிதீன் பெரிய பை அல்லது சுவாமிப் படம் ஒன்று | நீலசோப் உறை 100 அல்லது நீம் சோப் உறை 10 அல்லது பார் சோப் உறை 10 அல்லது மெடிகேட்டட் உறை 10 அல்லது சலவைப் பவுடர் உறை 10 |
| ★ 3. | துவாய் ஒன்று | நீல சோப் உறை 500 |

வியாபாரிகளுக்கு விசேட பரிசு

72 சவர்க்காரஞ் சுற்றி வரும் உறை 50 அல்லது
36 சவர்க்காரஞ் சுற்றி வரும் உறை 100 அல்லது
30 சதம் சோப் சுற்றி வரும் உறை 50 அனுப்பி
துவாய் ஒன்று பெற்றுக்கொள்ளலாம்.

முகவரி:-

மில்க் வைற் - யாழ்ப்பாணம்.

MWS
மில்க்வைற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கின் பொருளாதார வளம்

## யாழ் குடாநாட்டின் தரை கீழ் நீர்வளம்

S. T. B. இராஜேஸ்வரன் B. A. Hons. (Cey.)

சூழற்தொகுதியில் காணப்படும் உயிர்க் கூறுகள் உயிரற்ற கூறுகளில் தங்கியிருப்பதைக் காணமுடிகின்றது. உயிரற்ற கூறுகள் என்று கூறும்பொழுது நிலம், நீர், காற்று போன்றவற்றைக் குறிக்கும். உயிரிகள் நீர் இல்லாமல் வாழ முடியாது. உயிரிகள் வாழ்க்கையில் நீர் என்ற அம்சம் அவசிய தேவையாக இருக்கின்றது. உயிரிகளில் மனிதனும் ஒன்றாகும். மிகையான சனத்தொகைப் பெருக்கத்தின் காரணமாக நீர் வளப்பயன்பாடு மிக அதிகமாக அதிகரித்துள்ளது. விவசாயம், கைத்தொழில், வீட்டுத் தேவைகள் போன்றவற்றிற்கு இவற்றின் பயன் அதிகரித்துக்கொண்டு போவதால் மனிதன் தனது தேவையை நிறைவேற்ற அதிக அளவில் நீரைத் தேடுகிறான். தரைக்கு மேலேயும் தரைக்குக் கீழேயும் நீரைப் பெற்றுப் பயன் அடைகிறான். ஆனால் எல்லா இடங்களிலும் இவ்வளம் சமனாகப் பரவியிருக்கின்றதெனக் கொள்ள முடியாது. குடாநாட்டைப் பொறுத்த அளவில் தரையின்கீழ் நீர்வளம் சிறப்பாக அமைந்த தொன்று. இவ்வளம் இயற்கையின் கொடையென்றே கூறலாம். இவ்வளம் இங்குள்ள மக்களின் பயன்பாட்டில் பிரிக்க முடியாத ஒன்று. இங்கு இவ்வளம் எப்படி அமைந்துள்ளது. எவ்வண்ணம் பயன்படுத்தப்படுகின்றது. பயன்களைகள் என்ன? அவை எவ்வாறு தீர்க்கப்படலாம்? என்பதைச் சிறிது ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

இலங்கையின் வடபாகத்தில் குடாநாடு அமைந்துள்ளது. இது ஏத்தாழ 2,60,000 ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்டது. இலங்கையின் காலநிலைப் பிரிவில் வரண்ட பிரதேசத்தில் அமைந்துள்ளது. ஏறத்தாழ 50'' வருடாந்த மழை வீழ்ச்சியைக் கொண்டது. இலங்கையின் ஏனைய பகுதிகளில் காணப்படுவதுபோல உயரமான மலைப் பகுதிகளோ, அவற்றில் இருந்து ஊற்றெடுக்கும் நதிகளோ இல்லை. இது சம தரையான ஆனல் சில குறிப்பிட்ட பகுதிகள் கடல் மட்டத்திலிருந்து நூறு இருநூறு அடிகளைக் கொண்ட பகுதிகளாக இருக்கின்றன. எனவே இங்கு மழையே முக்கியமான நீர் மூலமாகும். நீர்வளம் என்று குறிப்பிடும்பொழுது இங்கு தரைநீர், (Ground water) தரைகீழ்நீர், (Under ground water) என இரு பிரிவுகள் இருப்பதைக்காணலாம் தரைநீர் எனும்போது மேற்பரப்பில் காணப்படும் நீர்நிலைகளைக் குறிப்பிடலாம். தரைகீழ்நீர் எனும்போது மேற்பரப்பிலிருந்து ஊறிச்செல்லும் நீரானது நீர்ப் படுக்கையில் சேமிப்பாக இருக்கும் நீரைக் குறிக்கும். இவை தரையிலிருந்து வெளியேற்றப்படும்வரை தரைகீழ்நீர் எனவே குறிப்பிடப்படும். குடாநாட்டின் வியத்தகு நில அமைப்பே தரைகீழ் நீர் வளத்தின் தோற்றத்திற்குக் காரணமாகும். எனவே தரைகீழ்நீர் வளத்தின் இருப்பிற்குக் காரணமான குடாநாட்டின் தரையமைப்பை அல்லது நிலவியல்பற்றி நோக்குதல் எமக்கு நன்மை பயக்கும்.

குடாநாட்டின் தோற்றம், 'மயோசீன்' பாறைகள் உருவாக்கத்துடன் தொடர்புகொண்டது. இத்தகைய மயோசீன் பாறை படிவுப் பாறையாகும். கோளத்தின் 'வர்க்கால' என்னும் இடத்தில் உள்ள சுண்ணும்புக்கல் போன்று இதுவும் ''ஓபிக்குலினு மலாபிரிக்கா'' (ORBICULINA, MALABRICA) வையும் அதனோடு தொடர்புடையதுமான சுவடுகளையும் கொண்டது. மயோசீன் படிவுகளுக்குக் கீழ் 'கொண்டுவாஞ' (யுருசிக்) பாறைகள் காணப்படுகின்றன என்பதை அப்பகுதியில் நிகழ்த்தப்பட்ட குடைவுகள் சுட்டுகின்றன. இப்பாறைகளில் உயிர்ச் சுவடுகள் காணப்படுகின்றன. இப்பாறைகள் பொதுவாக வெண்மையாகவும் சில பாகங்களில் மட்டும் சாம்பல் நிறமாகவும் காணப்படுகின்றன. இத்தகைய மயோசீன் பாறைகள் மயோசீன் காலத்தில் கடற்கீழ் உயிரின் தாவரவர்க்கத்தின் எச்சங்களின் படிவுகளால் உருவாக்கப்பட்டதாகும். இவை நீண்டகாலம் கடலில் படியவிடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டு இறுகிய அமைப்பை அடைந்ததே இத்தகைய பாறையாகும். நீரை அடிப்படையாகக்கொண்டு பார்க்கும்போது வடக்கின் உயிர் வாழ்க்கை அடித்தளப் பாறையின் தன்மையிலேயே தங்கியிருக்கின்றமையை உணரலாம். இலங்கையின் பிரதான நிலபப்ரப்பில் உள்ள வரண்ட வலயத்தின் அடித்தளப்பாறை போன்று குடாநாட்டின் அடித்தளப்பறையும் அமைந்திருந்தால் இங்கு உயிர்வாழ்க்கை முற்றாக வேறு வகையினதாக அமைந்திருக்கும். குடாநாட்டில் உள்ள அடையற் சுண்ணாம்புக்கற் பாறைகள் நுண் துளைகளை உடையனவல்ல. ஆனால் ஏராளமான மூட்டுக்களையும், வெடிப்புக்களையும், பிளவுகளையும்கொண்டு நீரை உட்புகவிடும் இயல்புடையன. இதனால் இச்சுண்ணாம்புக்கல்லிற்கு நீரைச் சேகரித்துவைக்கும்தன்மை சிறப்பாக அமைந்துள்ளது. எனவேதான் குடாநாட்டின் தரைகீழ் நீர்வளம் சிறப்பாக அமைந்திருப்பதற்கு அதன் நிலவியலே காரணமாகும்.

இனி இத்தகைய நிலவியலில் தரைகீழ்நீர் எவ்வண்ணம் உருப்பெறுகின்றது என்பதை நோக்குவோம். 50''க்கு சற்றுக் கூடிய மழை வீழ்ச்சி பிரதேசத்திற்குக் கிடைக்கின்றது. அவ்வளவு நீரும் நிலத்தில் தேங்கி நின்றால் நிலைமை வேறாகும். ஆனால் நடப்பது வேறு. மழைநீர் நிலத்தில் விழ்ந்ததும் அவை பின்வருமாறு செயன்முறை அமைகிறது.

(அ) நிலத்தில் விழு முன்பே மழை நீரின் ஒருபகுதி தாவரங்களினால் தடுத்து நிறுத்தப்படுகின்றது. இவற்றின் ஒருபகுதி தாவர சேமிப்பாக அமைய ஒருபகுதி தாவரங்களால் ஆவியுயிர்ப்பாக இழக்கப்படுகின்றது.

(ஆ) மழையின் ஒருபகுதி தரையின் மேற்பரப்பில் நீர் பள்ளத்தை நோக்கிப் பாயும் பண்பால் மேற்பரப்போட்டமாக (Surface flow) பாய்ந்து வெளியேறுகின்றது. இதில் மேற்பரப்பில் காணப்படும் பள்ளங்கள், குழிகள் போன்றவற்றில் தேங்கி ஒருபகுதி நீர் மேற்பரப்பு சேமிப்பாக நிற்கும். மேற்பரப்போட்டத்தைத் தீர்மானிப்பதில் பல காரணிகள் பங்கு கொள்கின்றன. தரையின் சாய்வு அமுக்கம், உட்புகவிடும் இயல்பு என்பவற்றிலும், பெய்யும்பொழுது தரை எவ்வளவு ஈரமாக இருந்தது என்பது போன்றவற்றிலும் தங்கியிருக்கிறது. மலைச்சரிவுகளிலும் வெற்றுப்பாறைகளிலும் விழும் மழையின் பெரும்பாகம் இப்படி மேற்பரப்போட்டமகைக் கடலை அடைகின்றது. ஆனால் சமாந்தரமாக உள்ள மணற்பூமியிற் பெய்த பெய்த மழை பெரும்பாலும் நிலத்தில் ஊறிவிடும். ஏற்கனவே பூமி வரண்டிருந்தால் நிலத்தில் ஊறும் பங்கு கூடவாக இருக்கும். வடதாழ் நிலத்தில் மழை விழ்ச்சியில் 1/3 பங்கு இப்படி வெளியேறுகிறது.

(இ) மழை வீழ்ச்சியின் ஒரு பகுதி ஆவியாக மாறி சேதமாகிவிடும். ஆவியாகும்பங்கு வெப்பத்தையும், காற்று எவ்வளவு உலர்ந்திருக்கிறது என்பதையும் பொறுத்திருக்கிறது. வரண்ட பிரதேச வாவிகளில் மாதம் 4'' மட்டம் ஆவியாகி வெளியேறிக் குறைகின்றது.

(ஈ) எஞ்சிய பகுதி நிலத்துள் ஊறி மண்ணிலும் அடிக்கற் பாறைகளில் உள்ள சுல் வெடிப்புக்களிலும் (Fissures) கரைக்குகைகள் ஆகியவற்றிலும் நிறைந்து செறிந்து நிலத்தடி அல்லது தரைக்கீழ் நீராகத் தேங்கி நிற்கும்.

இந்த தரைகீழ்நீர் கணக்கை வரவு-செலவு என்ற ரீதியில் சமப்படுத்தலாம்.

$$[r = E + Et + Ss + Sf + UW]$$

இதில்,

r - மழைவீழ்ச்சி
I - இடைநிறுத்தம்
E - ஆவியாக்கம்
Et - ஆவியுயிர்ப்பு
Ss - மேற்பரப்பு நீர்நிலைகளின் சேமிப்பு
Sf - மேற்பரப்பு ஓட்டம் (Surface flow)
Uw - தரைகீழ்நீர்

இதிலிருந்து தரைகீழ் நீருக்குரிய சமன்பாட்டை வருவிக்கலாம்.

$$[UW = r - E - Et - Ss - Sf - ]$$

எனவே, தரைகீழ்நீர் என்பது நிலத்தில் வடிந்த நீர் எவ்வாறேனும் வெளியேறாமல் அல்லது பயன்படுத்தப்படாமல் இருக்கும் வரை தரைகீழ்நீர் என்று அழைக்கலாம்.

நிலத்தில் வடியும் அல்லது ஊடுபுகும் இயல்புபற்றி நாம் அறிந்தால் நிலத்தில் நீர் எவ்வாறு மறைந்து விடுகின்றது என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது. கடற்கரை மணலில் ஊறவிடும் இயல்பு 30 வீதம் என்றால் ஒரு கன அடி அள்ளி எடுத்த மணலில் 0·3 கனஅடி மட்டும் சிறு சிறு மணற்பளிங்குகளின் தனித்தனிக் கன அளவின் கூட்டுத்தொகை மீதி 0·3 கனஅடி மணற்பளிங்குகளுக்கிடையில் உள்ள இடைவெளிகளின் கூட்டுத்தொகை. இடைவெளிகளிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ற்காறு முழுவதும் வெளியாகி நீர் செறிந்தால் நீர் நிரம்பலடைந்து விட்டது எனச்செ ல்லலாம். இவ் வளவு ஊறவிடும் இயல்புடன் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் அடிப் பாறைக்கு மேல் ஆறடி ஆழத் திற்கு மணல் மேற்படுக்கையாக அமைந்திருந்தால் அந்த ஒரு ஏக் கர் நிலத்திற்குள் 78,000 க.அடி தண்ணீர் தேங்கி நிற்கும். இப்ப டித் தேக்கி வைக்கப்படும் நீர் கடல் மட்டத்திற்குமேல் இருந் தால் கடலை நோக்கி நிலத்துள் ஊடுருவி ஊர்ந்து செல்ல (Percolation) எத்தனிக்கிறது. அப்படி எவ் வளவு நீர் என்ன வேகத்தில் ஊர்ந்து செல்லும் என்பதன் அளவுகோல்தான் ஒவ்வொரு நிலத்தின் உட்புகவிடும் இயல்புக் குணகம் (Permeab lityco efficient) எனப்படும். பின்வரும் அட்ட வணை வடதாழ் நிலத்தில் காணப் படும் சிலவகை நிலவகைகளின் உட்புகவிடும் இயல்புக் குணகங் களைக் காட்டுகின்றது. இதில் இருந்து குடாநாட்டின் தரைகீழ் நீரின் முக்கிய இயல்பை அறிந்து கொள்ளலாம்.

| நிலவகை | உட்புகவிடும் இயல்புக் குணகம் |
|---|---|
| களிமண் | ஒரு அடி அமுக்கத்தின் கீழ் மணிக்கு/ ச. அடிக்கு 3 கலன் |
| கருமண் | ,, 3-4 கலன் |
| மணல் | ,, 12-20 கலன் |
| யாழ்ப்பாண சுண்ணும்புக் கல் | ,, 0.8-8 கலன் |

சுண்ணும்புக்கற் படுக்கை வெடிப் புக்கள், கரை குகைகள், நிறைந் ததினுல் உட்புகவிடும் இயல்பு கூடுதலாக இருக்கின்றது.

மேற்கூறியவைகளிலிருந்து நாம் சில முடிவுகளை எடுககக்கூடி யதாத இருக்கின்றது.

அ. உட்புகவிடும் இயல்பு அதிகமாக உள்ள நிலங்களில் பெறப்பட்ட மழை நீரின் அதிகமான பங்கு நீர் மிக வேகமாக ஊறிச்செல்லும்.

ஆ. இதே போல மிகவேகமாக வடிந்தும் சென்றுவிடலாம்

இ. உட்புகவிடும் இயல்பு அதிகமாக உள்ள இடங்களில் நீரை நாம் எடுப்போமாயின் எமது முயற்சி அதிக பலனைத் தரும்,

இதில் முதலாவதும் மூன்று வதும் நில நீரைத் தேக்கிவைத்து பிரயோசனப்படுத்துவதற்குச் சாதகமானவை. ஆனல் இரண் டாவது இயல்பு பாதகமானது. ஏனெனில் வளம் இழக்கப்படுகின் றது. எனவே, அடிப்புறத்திலும், சுற்றுப் பக்கங்களிலும். உட்புக விடும் இயல்பு கூடிய தரையுடைய சூழ்நிலை அமைந்திருந்தால் அதுவே தரைகீழ் நீர் வளத்தைத் தேக்கிப் பயன்படுத்த சிறந்த சூழலாகும்.

எனவே மேற்கூறப்பட்ட நிலை மைகளிலிருந்து நாம் அறிந்து கொள்ளக்கூடிய முடிவு, குடா நாட்டின் நில அமைப்பு பெறப் படும் மழைநீரை நன்கு கீழே உட் புகவிடும் இயல்புடையது. இந்நீர் நிலத்தின் கீழ் சேமிப்பாக அமை ந்து விடுகின்றது. இந்த நீரில் ஒரு பகுதி கடலில் கிடையாக நகர்ந்து சென்றடைந்தாலும் ஏனைய பகு தியை நாம் மீண்டும் தரைக்கு வெளியே எடுத்து பயன்படுத்த முடியும். எனவேதான் குடாநாட் டிற்குத் தரைகீழ் நீர் நீர் வங்கியாக அமைந்து இருக்கின்றது. குடா நாட்டு மக்களின் தேவையை நிறைவேற்றும் ஓர் ஒப்பற்ற வள மாக அமைந்து இருக்கின்றது.

இந்த நீர்வளம் நிலத்தின்கீழ் எவ்வண்ணம் அமைந்து இருக்கின் றது என்பதை நோக்குவோம். கடல் நீரினுல் சூழப்பட்ட ஒரு தீவை நாம் எடுப்போமாயின் தீவின் நிலத்தினுள்ளும் உவர்நீர் நுழைந்திருக்கிறது. மழை இந்த நிலத்தில் விழும்பொழுது மழை நீரில் ஒருபகுதி நிலத்தின் மேல் ஓடி பள்ளத்தை நாடி ஒரு பகுதி நிலத்திற்குள்ளும் ஏனைய பகுதி கடலுக்குள்ளும் செல்கின் றது. தீவின் நடுப்பகுதியிலென்ன கரையோரத்திலென்ன இவ்வித மாக ஒருபகுதி நீர் நிலத்துள் செல்லும். அப்படிச் செல்லும் நீர் உவர் நீரிலும் கனமற்றதாகை யால் உவர் நீரின் மேல் மிதந்து நிற்கும். ஒன்றுடன் ஒன்று அணு கியுள்ள நீர்ப்பரப்பில் இவை கலந்தும் காணப்படுகின்றன.

மழைநீர் அதிகமதிகமா நிலத்தினுள் செல்லச்செல்ல அந்த நல்லநீர் உவர்நீருக்கு மேலே அதிகமாகிக்கொண்டே வரும் இப்படியாக மிதந்து நிற்கு நிலையை இந்த இரு நீர்களி கனமும் அளவுபடுத்தும். இ நியதியின்படி ஒரு மட்டத்திற் மேல் 1·025' நிலநீரும் 1·0' உ நீரும் ஒரே பாரம் கொண்ட வாக ஏற்றதாழ்வின்றி நிற்பதை காணலாம். மேலும் கணக்கிட்டு பார்க்குப்பொழுது நில நீரின் மட்டத்திற்கும் கடல் மட்டத்திற் கும் 1·0' வித்தியாசம் இருப்பின் 41·0' நில நீர் ''கைபறு ஹேர்ஸ் பேக்'' வடிவத்தின் மத்தியில் அத் தீவின்கண்ணே தேங்கிநிற்பதை நிரூபிக்கலாம். இதே விதமாக கடல் மட்டத்திற்குமேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலநீர் 2·0' உயரமாக இருப்பின் 82·0' ஆழமுள்ள கைபன் ஹேர்ஸ் பேக் வடிவத்திலும், 3·0' வித்தியாசம் இருப்பின் 123' ஆழமுள்ள அதே வடிவத்தையும் நாம் கணக்கிட்டுப் பார்க்க முடியும். இது போன்றே எமது குடாநாட்டு நீர்த்தாங்கியும் அமைந்திருக்கிறது எனலாம். உதாரணமாக நிலாவரையில் நல்ல நீர் உவர் நீருக்கு மேல் மிதப்பதை நாம் அறிகின்றோம். நல்ல நீரின் ஆழம் ஏறத்தாழ 75-80' ஆக சில வேளைகளில் இருப்பதையும் மற்றும் சிலவேளைகளில் கூடியோ குறைந்தோ இருப்பதைக் காணலாம். இதுபோலவே கடலருகில் உள்ள நிலத்தில் தோண்டப்பட்ட கிணறுகளிலும் நல்ல நீர் மேலேயும் உவர் நீர் கீழேயும் இருப்பது கவனிக்கத்தக்கது. சில கிணறுகளில் சோடைகாலத்தில் சாதாரணமாக உவர் நீர் காணப்படினும் மழை காலத்திலோ நல்ல நீர் இருப்பதையும் நாம் கவனிக்கலாம். தீவுப்பற்றுக் கிணறுகளில் இந்த நிலை அதிகமாகவே தென்படுகிறது. மழையுள்ள மாதங்களில் எத்தனையோ கிணறுகள் நீரைத் தருகின்றன. கோடைகாலங்களில் அவை உவர் நீராக மாறிவிடுகின்றன. சுண்ணாகம் போன்ற கடலுககுத் தூரமான பகுதிகளில் நன்னீர் கிடைப்பதற்குக் காரணம் என்ன? ஹைபன் ஹேர்ஸ் பேக் வடிவத்தைக் கூர்ந்து கவனிக்க இதன் காரணம் விளங்கும். எனவேதான் குடாநாட்டில் தரைகீழ் நீர் அமைப்பு விஷேடமாக அமைந்துள்ளது எனப்படுகிறது.

குடாநாட்டின் விஷேட தரை அமைப்பின் காரணமாக நீர் உட்சென்று நீர் வங்கியை உருவாக்குகின்றன. இந்த நீர் வங்கியில் நன்னீர் அமைப்பு மட்டும்தான் காணப்படும் என்று சொல்லமுடியாது. சில இடங்களில் உவர்நீர் மட்டத்திற்கு மேல் நன்னீர் அமைந்திருக்கும். மழைகாலங்களில் இந்த நன்னீர் மட்டம் அதிகமாகக் காணப்படும். தீவுப்பகுதிகளில் கோடைகாலத்தில் உவர்நீர் காணபபடுவதற்கு நன்னீர் மட்டம் குறைவதே காரணம். தரையமைப்பில் பல மைல்கள் ஆழத்தில் தொடர்புடைய குகைகள் காணப்படுகின்றன. இக்குகைகள் சுாணப்படும் இடங்களுக்கு மேலுள்ள கிராமங்களில் தோண்டப்படும் கிணறுகள் நன்னீர் அமைப்புடைய கிணறுகளாக இருக்கும். எனவேதான் குடாநாட்டின் சில பகுதிகள் நன்னீர் உள்ள கிணறுகளாகவும், சில உவர்நீர் உள்ள கிணறுகளாகவும் காணப்படுகின்றன. மேலும் மழைகாலங்களில் நீர் மட்டம் ஏற்றதாழ்வுகளுக்குக்கு உட்படும்.

உயர்மட்டம் காணப்படும் எல்லையில் அமைக்கப்படும் கிணறுகள் சோடைகாலங்களில் தாழ் மட்ட எல்லையாக நீர்மட்டம் மாறும்போது வற்றிவிடுகின்றன. குடாநாட்டின் சில பகுதிகள் நன்னீர் அமைப்பாகவும், சில பகுதிகள் உவர்நீர் அமைப்பாகவும் காணப்படுவதற்குத் தரையமைப்பில் காணப்படும் வேறுபாடே காரணம். உதாரணமாக மாவிட்டபுரம், வீமன்காமம், குரும்பசிட்டி, புன்னாலைக்கட்டுவன், நவக்கிரி போன்ற கிராமங்கள் குடாநாட்டின் வேறு பகுதிகளுடன் ஒப்பிடும்பொழுது நன்னீர் கிடைப்பதில் கஷ்டங்கள் குறைவு என்றே சொல்லலாம். இவ்வண்ணம் குடாநாட்டின் தரைநீர்வள வங்கி அமைந்திருப்பது அங்குள்ள மக்களின் ஜீவாதாரப் போராட்டத்தைத் தீர்க்கும் ஒரு மூலமாக விளங்குகின்றது. மேலே சொல்லியவாறு சுருக்கமாகக் குடாநாட்டின் தரைகீழ்நீர் அமைப்பு எப்படி அமைகின்றது? என்பதைப் பார்த்தோம். இனி இவ்வளம் எவ்வண்ணம் பயனாகின்றது? என்பதை நோக்குவோம்.

வளர்ந்துவரும் குடாநாட்டின் சனத்தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வளமாக இத் தரைகீழ்நீர் அமைந்திருக்கின்றது. விவசாயம், கைத்தொழில், வீட்டுத்தேவைகள் போன்ற தேவைகள் நீரிலேயே தங்கியிருக்கின்றது. தரைகீழ்நீர் எல்லாம் ஒரே இரசாயனப் பண்பினைக் கொண்டது அல்ல- இவற்றின் உப்புத்தன்மை, வன்மை, மென்மை தன்மைகளிலேயே இவ்வளத்தின் உபயோகம் தங்கியுள்ளது. பொதுவாக உப்புத் தன்மையிலேயே அதன் உபயோகம் தங்கியிருப்பதினால் நாம் நீரின் இத் தன்மைபற்றி அறிய வேண்டும். இந்த உப்புத்தன்மை 10 லட்சத்தில் எவ்வளவு "குளோறைட் அயன்கள் உண்டு என்று அளவிடுவதன் மூலம் அறியலாம். இவ் அளவின் மூலம் நீரின் தரத்தைக் கணித்திடலாம். பின்வரும் பிரிவுகள் நீரை அதன் பண்பின் அடிப்படையில் வகுத்திருக்கிறது. எனவே தரைகீழ்நீர் எந்தவகையில் காணப்படுகின்றதோ அதன் அடிப்படையிலேயே அதன் பயன்பாடும் அமையும்.

அ. 100 பங்குக்குக் கீழ் நீரில் குளோறைட் இருப்பின் அந்நீர் மென்னீர் (Soft-water) எனப்படும்.

ஆ. 300 பங்கிற்கு மேல் குளோறைட் இருப்பின் அந்நீர் வன்னீர் (Hard water) எனப்படும்.

இ. 150 பங்கிற்குக் குறைவாக குளோறைட் நீரில் இருப்பின் இந்நீர் அருந்துவதற்கு மிகச் சிறந்த நீர் ஆகும்.

(அடுத்த இதழில் முடியும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4-ம் பக்கத் தொடர்ச்சி]
குறையை இங்கு தெளிவுபடுத்தினார்கள். கூட்டுறவு முயற்சியில் எமது புத்தகங்களை விற்பனை செய்ய வசதி படைத்த ஒவ்வொருவரும் முயற்சி செய்ய லாம். பத்துப் பேர் சேர்ந்து நூறு வீதம் பணத்தை முதலீடு செய்து புத்தக விற்பனை நிலையங்களை நடத்தினால் எமது சஞ்சிகைகள் இங்கு விற்பனையாவதில்லை என்ற குறையை ஓரளவு நிவிர்த்தி செய்ய முடியும் என எண்ணுகிறேன். எனது இந்த ஆலோசனையை ஏற்று நடைமுறைப்படுத்துவீர்களென செவ்வந்தி இலக்கிய வட்டத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

செவ்வந்தி ஆசிரியர் பா. தவபாலன் அவர்கள் தமதுரையில் இலங்கையில் செவ்ந்திக்குக் கிடைத்து வரும் வரவேற்பு, செவ்வந்தி தனது இலட்சியப் பணியை தொடர்ந்து வெற்றிகரமாக வளர்த்துவர வழிவகுத்துள்ளது எனவும், தரமான சஞ்சிகைக்கு இலங்கையில் என்றும் வரவேற்புள்ளது என்பதை சிரித்திரன், மல்லிகை ஆகியவற்றின் பெருவளர்ச்சி எடுத்துக்காட்டுகிறது எனவும் குடாநாடு தவிர்ந்த இலங்கையின் ஏனைய பகுதிகளிலும்கூட செவ்வந்தி மாணவர்கள் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் அறிவுப் பசியைத் தீர்க்கும் ஒரு சஞ்சிகையாக உருப்பெற்றுவிட்டது எனவும் கூறினார்.

மேலும் தொழிலதிபர்கள், வாசகர்கள், குறிப்பாக மாணவர்கள் அளித்துவரும் பேராதரவால் எமது இமாலய வளர்ச்சிக்கும், இத்தகைய ஜனத் திரளுடன் கூடிய ஒரு விழாவை நடாத்தவும் உதவியது. அவர்கள் அனைவருக்கும் எமது நன்றி என்றென்றும் உரித்தாகுக என்றார்.

போட்டியில் பங்குபற்றிய ஆக்கங்கள் பற்றி யாழ் வளாக விரிவுரையாளர் திரு. மு. நித்தியானந்தன் சிற்றுரை ஆற்றினார். திரு. இ. ஓங்கார மூர்த்தி நன்றியுரை வழங்கினார்.

விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாகவும், இறுதி நிகழ்ச்சியாகவும் இன்று இலங்கையின் பிரபல நட்சத்திரமாக விளங்கிவரும் ''வாடைக்காற்று'' புகழ் கே. எஸ். பாலச்சந்திரனின் 'அண்ணை றயிற் நிகழ்ச்சி இடம்பெற்றது.

விழாவில் பங்குபற்றிச் சிறப்பித்த கலைஞர்கள், பேச்சாளர்கள், தொழிலதிபர்கள், வாசகர்கள் அனைவருக்கும் செவ்வந்தி மீண்டும் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றது.

— ஆசிரியர் —

## "பாரதி" முத்திங்கள் இதழ்

பாரதியாரின் முகப்புப் படத்துடன் முத்திங்கள் இதழாக மலையகத்தில் உள்ள பதுளை நகரில் இருந்து உதயமாகியுள்ளது பாரதி. கவர்ச்சியான உடலழகுப் படங்களோ அல்லது ஒரு சிலரின் அல்லது ஒரு கோஷ்டியின் ஊதுகுழலாகவோ அல்லாமல் சமுதாய நல்வளர்ச்சிக்காக பணிபுரிய வந்துள்ள பாரதி சிறப்பாகவுள்ளது. எக்கொள்கையுடையவருக்கும் எழுதவேண்டும் என்ற ஆர்வம் கொண்ட எவரும் பாரதியில் எழுதலாம் என்று இவ்விதழில் கூறப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. தரமான ஆக்கவாளர்களின் சிறுகதைகள், கவிதைகள் என்பனவற்றுடன் வாசகர்களின் சிந்தனைக்கு விருந்தளிக்கும் கட்டுரைகளுடன் மலர்ந்துள்ள பாரதி இதழுக்கு ஈழத்து இலக்கிய உலகில் நல்ல வரவேற்பு இருக்குமென்பதில் ஐயமில்லை. ஆடம்பரமற்ற அமைப்பு முறையுடன் வெளிவரும் பாரதி விரைவில் மாத இதழாக வெளிவர வேண்டுமென்று செவ்வந்தி விரும்புகிறது.

விலை ரூபா ஒன்று — ஆசிரியர்

## சந்தாதாரர்களுக்கு.....

செவ்வந்தி சந்தாதாரர்களுக்கும்
புதிதாக சந்தா சேருபவர்களுக்கும்......

சஞ்சிகையின் அமைப்பு மாற்றம், பக்கங்கள் அதிகரிப்பு; காகிதம், மை மற்றும் அச்சுக்கூலி அதிகரிப்பு இவற்றின் தாக்கங்களுக்கு ஈடுகொடுத்து இலங்கையில் ஒரு தரமான சஞ்சிகை என்று பெயர் பெற்ற செவ்வந்தியைத் தொடர்ந்து வெளியிடும் பொருட்டு செவ்வந்தியின் ஒரு வருட சந்தா 1-50 சதத்தாலும், 6 மாத சந்தா ஒரு ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வருடத்திற்கான சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஒரு வருட சந்தா | — | ரூ. 15-00 |
| ஆறு மாத சந்தா | — | ரூ. 8-00 |

★ தபாற்செலவு இலவசம்
★ ஆண்டுமலர் இதனுள் அடங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டால் தருகிறோம்

பதில் அளிப்பவர் "செவ்வந்தன்"

எஸ். எம். இருபானந்தம்
கோட்டடி வீதி,
கொழும்பு-12

கே. வளர்முகநாடொன்றில்வளர்ந்து வரும் செவ்வந்தியின் முக்கிய பங்கு என்ன?

ப. மக்களின் அறிவுப்பசிக்கு, தாக்கமான ஆக்கங்களை பிரசுரிப்பதன் மூலம் நல்விருந்தளிப்பதும். அறியாமையை விரட்டியடிப்பதும் செவ்வந்தியின் இன்றைய பணி ஆகும்.

கே. யதார்த்த உலகில் செவ்வந்தியின் வளர்ச்சிக்கு எம்மிடம் நீங்கள்எதிர்பார்ப்பதென்ன?

ப. செவ்வந்தியின் குறைகளை மனந்திறந்து சுட்டிக்காட்டுவது ஒன்றே இலங்கையில் மிகச் சிறந்த சஞ்சிகையாக செவ்வந்தி வளர வழி வகுக்கும்.

அ. அரசரெத்தினம்
பிரதான வீதி,
கண்டி.

கே. ஈழத்தில் வெளிவந்த சில படங்கள் ஏன் இந்தியா படங்களை அப்படியே பின்பற்றுவதாய் இருந்தது?

ப. இலட்சியம், திட்டம் எதுவுமில்லாமல் வியாபார ரீதியில் வெற்றிபெறுவதற்கு.

பொ. செல்வராஜா
மட்டுவில்.

கே. நடிகர் திலகம் அவர்கள் புகைப்படத்தை செவ்வந்தியில் பிரசுரித்து கௌரவம் அளித்தீர்களே ஏன்? இலங்கை கலைஞர்கள் சிவாஜி பற்றி செய்த பிரசாரம் சரியா தவறு?

ப. ஒரு துறையில் பூரண வளர்ச்சி கண்டவர்கள் பல்வேறு துறையிலும் உள்ளனர். நடிப்புத் துறையில் ஈடு இணையற்று அறிஞர் அண்ணாவாலேயே உலகின் சிறந்த நடிகர் என்று போற்றப்பட்ட ஒரு 'தமிழ் கலைஞர்' இலங்கைக்கு விஜயம் செய்யும் போது கௌரவிக்கவேண்டிய பொறுப்பு தமிழ் கலை இலக்கிய சஞ்சிகையாகிய செவ்வந்திக்கு உண்டு என்பதால்.

பலர் தமக்கு இந்தியப் படத்தில் சான்ஸ் கிடைக்கவில்லை என்ற வயிற்றெரிச்சலாலும், சிலர் தானும் நடிக்கிறோம் என்பதை வெளி உலகுக்கு காட்ட வேண்டும் என்ற பேராசையாலும், பத்திரிகைகளிலும், இந்திய சஞ்சிகைகளிலும் தங்கள் சவால்கள்பிரசுரமாகும் என்பதாலு நடிகர் சிவாஜிக்கு எதிராக சவால்கள்விட்டும். பிரசாரம் செய்தனர். இறுதியில் மண்டியிட்டு, மன்னிப்பு கேட்டு, மறுப்பு அறிக்கை வீட்டு. நேரில் சென்று சமாளித்து இலங்கை கலைஞர்களெல்லாம் இப்படித்தான் என்ற இழுக்கை ஏற்படுத்திவிட்டது எப்படி சரியாகும்.

சி. செல்வசெளரி
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

கே. செவ்வந்தியில் தோன்ற விருக்கும் 'புதுயுகம்' பகுதியில் மாணவராகிய எமக்கு இடம் கிடைக்குமா?

ப. உங்களுக்கென ஆரம்பமாகும் பகுதி இது. நிச்சயம் பிரசுரமாகும்.

கே. சில சஞ்சிகைகளுக்கு அனுப்பப்படும் தரமான ஆக்கங்கள் பிரசுரமாவதில்லையே காரணம்?

ப. வாங்கி வைத்துள்ள குப்பைக்கூடைக்கும் வேலை வேண்டும் என அச் சஞ்சிகை ஆசிரியர்கள் எண்ணுவதாற் போதும்.

ஈழ அமீர்
ஆமர் வீதி,
கொழும்பு-12

கே. ஐயா, உணர்ச்சி என்பது ஒவ்வொரு மனிதனிடமும் அமைந்திருக்கும் விசித்திரசக்தி' ஆனல் ஒவ்வொருமனிதனிடமும் அமைந்திருக்கும் உணர்ச்சி ஒரே மாதிரி இருப்பதில்லையே ஏன்?

ப. பிரச்சனைகளிலே வாழவிரும்பும் மனித இனத்திற்கு உணர்ச்சிகள் ஒரே மாதிரியாக இருக்கக்கூடாது என்பதாற் போலும்.

தமிழ் செல்வன்
புன்னாலைக்கட்டுவன்.

கே. பிரிவினைக் கோரிக்கையை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

ப. ஏன்! நீங்கள் அதனை எதிர்க்கிறீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி கொலை வழக்கு

அங்கம் — 5

இன்ஸ்பெக்டர் பொன்னுத்துரையு நானும் முதலிரு எதிரிகளும் கட்டைக்காட்டுக்கு ஒருநாளி ரவு சென்றோம். எதிரிகள் ஒரு புதைகுழியைக் காட்டினர். தோண்டி ஒரு சாக்கை எடுத்துத் தந்தனர். அதில் இரத்தந் தோய்ந்த 4 சாக்குகள் கம்பளி தலையணைகள் ஆகியன கிடைத்தன.

— கான்ஸ்டபிள் தயதாசாவின் சாட்சியத்தின் முக்கிய சாராம்சம்.

சட்டத்தரணி க. சற்குணநாதன்

சம்பவம் நடந்த காலத்தில் கிளிநொச்சிப் பொலிசில் கான்ஸ்டபிளாகக் கடமையாற்றிய குமாரகே தனது சாட்சியத்தில், ''காலஞ்சென்றவரின் உறவினரான நாராயணசர்மா பொலிஸ் நிலையத்துக்கு வந்தார் 3ம் எதிரியிடம்மிருந்து 1962ம் ஆண்டின் டிசம்பர் மாதம் 17ந் திகதி யன்று நெடுந்தீவுக்கு வந்த போஸ்ட்காட்டில் காசிலிங்க சர்மா நெடுந்தீவுக்கு வந்துவிட்டார் எனக் குறிப்பிடப்பட்டிருந்ததாகக் கூறினார். தான் நெடுந்தீவில் நன்கு விசாரித்துப் பார்த்த பின் நெடுந்தீவில் அவர் காணப்படாததால் உருத்திரபுரத்திற்குச் சென்றதாகக் கூறினார் உருத்திரபுரத்தில் நன்கு தேடியும் காசிலிங்கசர்மாவைக் கண்டுபிடிக்கமுடியாமையினால் அவர் காணாமற்போனது பற்றி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவதற்காகவேதான் வந்ததாக அவர் கூறினார்.''

அமிர்: இத்தகவலைப் பதிந்த பின்னர் என்ன செய்தீர்கள்!

சாட்சி: மற்றைய பொலீஸ் நிலையங்களுக்கு காணாமற் போனவரின் தோற்றம் வயது முதலிய விபரங்களை அறிவித்து இவரைக் கண்டுபிடிக்க உதவுமாறு கோரிக்கை விடுத்தோம்.

அடுத்து கான்டபிள் பியசேன

''அப்பொழுது நான் இயக்கச்சியில் கடமையாற்றினேன் இன்ஸ்பெக்டர் பொன்னுத்துரையின் உத்தரவுப்படி வட்டக்கச்சியில் வைத்து 1ம் எதிரியைக் கைது செய்தேன். அவரைக்குடியேற்ற அதிகாரி விக்னேஸ்வரன் அடையாளங் காட்டினார். அங்கிருந்து 1ம் எதிரியை உருத்திரபுரங் கொண்டுவந்தேன் இன்ஸ்பெக்டரிடம் பாரங் கொடுத்தேன்.

அமிர்: எத்தனை மணிக்கு 1ம் எதிரியை இன்ஸ்பைக்டர் பொன்னுத்துரையிடம் பாரங்கொடுத்தீர்?

சாட்சி: இரவு 8-15 மணிக்கு

அடுத்து கான்ஸ்டபிள் அலன் மோதி நாயக்கே ஹரத்......

இன்ஸ்பெக்டர் பொன்னுத்துரையின் உத்தரவுப்படி பளைக்குச் சென்றேன். பரமேஸ்வரியின் வீட்டில் வைத்து 3ம் எதிரியைக் கைது செய்தேன். அப்பொழுது நேரம் மாலை 6-30 இருக்கும். உருத்திரபுரங் கொண்டு சென்று இன்ஸ்பெக்டரிடம் பாரங் கொடுத்தேன் அவர் சம்பவம் நடந்த வீட்டில் இருந்தார் ரி. கணேசலிங்கம் அவர்களின் குறுக்கு விசாரணையின் போது......

வழ: கிளிநொச்சியிலிருந்து எத்தனை மணிக்குப் புறப்பட்டீர்?

சா: காலை 10-15 மணிக்கு

வழ: இதை நான் பொய் என்கிறேன்.

சா; இல்லை. உண்மை.

நீதியரசர்: உருத்திரபுரம் போகுமுன்னர் குப்புசாமி ஐயரைக் கண்டீரா?

சா: உருத்திரபுரத்திற்கு அவருடன்தான் சென்றேன்.

நீதியரசர்: எப்படி

சா: காரில்.

வழ: காரைக் கொண்டு வந்தது யார்?

சா: கும்புசாமி ஐயர்

வழ: அப்பொழுது காசிலிங்கசர்மாவின் வீடு பூட்டப்பட்டிருந்தது.

சா: ஆம்

வழ: சனக் கூட்டம் இருந்ததா?

சா: ஆம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூரர் தலைவர்: இறந்தவரின் சடலத்தைப் பற்றிக் கூறியபோது 3ம் எதிரியின் முக த்தில் மாற்றம் இருந்ததா?

சா: அவர் அதிர்ச்சி அடைந்தார்.

ஜூ.த: அழுது புலம்பினுரா?

சா: இல்லை.

2ம் எதிரியின் மனைவியின் தந்தை சின்னத் தம்பி சாட்சியம் அளித்த போது......

''1ம் எதிரி என்மகனை விவாகஞ் செய்தி ருந்தார். திருமணம் முடிந்த 3ம் நாளே உரு ந்நாளே உருத்திரபுரங் கூட்டிச் சென்றுர். தம்பதிகளாகவே சென்றனர். ஒரு மாதத் திற்குப்பின் தனியாக என் வீட்டுக்குத் திரும் பிவந்தார். என்னுடன் 2தினங்கள் தங்கி விட்டு மீண்டும் உருத்திரபுரஞ் சென்றுர். மாதச் கழித்து பழையபடி மகன் என் வீட் டுக்கு தனியாகவே திரும்பி நந்தான் மரும கன் (1ம் எதிரி) வரவிளலை. அன்பின் மரும கன் மகளைத் தேடிவரவில்லை.

இவ் வழக்கில் பல்வேறு சாட்சிகள் சாட்சியம்.

அளித்தார்கள் திரைப்படம் ஒன்றினைத் தயாரிக்கும்போது ஓரே காட்சினை பல்வேறு கோணங்களில் வைத்து படம் பிடிக்கிறுர்கள் பல கோணத்திலிருந்து பார்த்தபோது காட்சி ஒன்றுதான். பல் வேறு கோணங்களிலிருந் தும் பின்புதான் காட்சி தத்திருபமாக அமை கிறது. இவ்வழக்கின் அதிமுக்கிய கோணம் மகனின் சாட்சியம் ஆகும்.

''சம்பவம் எதனையும் நாம் கண்ணுற் றனவில்லை. அன்றைய இரவு நான் படித்து விட்டுப் புத்தகம்வைக்கபோனபோது ஐயா அறையில் படுத்திருந்தார். 15ம் திகதி காலை நெடுந்தீவுக்குப் போவதாக ஐயா ஏற்சனவே எங்களிடஞ் சொல்லியிருந்தார். நெடுந்தீ வுக்கு அவர் அப்படிச் செல்வது வழக்கமான காரியம். அப்படி அங்கு போவதாயிருந்தால் தான் போத்துப்படுக்கும் கம்பளியை வெளி யில் உள்ள கொடியில் போட்டுவிட்டே செல் வார்.

சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படுந் தினத்தில் நெடுந்தீவிலிருந்து அப்பா குப்பு சாமிஐயரின் கடிதம் எமக்கு கிடைந்தது. அதில் ஐயாவை நெடுந்தீவு வரும்படி அப்பா கேட்டிருந்தார்.

எங்களுடைய வீட்டில் இரவு முழுவதும் மேசையில விளக்கு ஒன்று எரித்துகொண்டே யிருக்கும். விடிய எழுந்து பார்த்தபோது ஐயாவை வீட்டில் ஏற்கனவே சொல்லியிருந் ததுபோல் அவர் நெடுந்தீவுக்குப் போய்யிருக் கக்கூடும் என நான் நினைத்திருந்தேன். அம் மாவிடமுங் கேட்டேன். ''ஐயா நெடுந்தீ வுக்குப் போய்விட்டார்'' என அம்மா கூறினுர். அடுத்த நாட்காலை அதாவது 15-12-62 அன்று பலதடவை முற்றத்துக்கும் சென்றேன். இரத்தம் எதனையும் நான் காணவில்லை. ஐயா படுந்திருந்த அறைக்குள் ளுந் சென்றேன். எதனையும் நான் காண வில்லை. சுவரிலும் எதையும் நான் காண வில்லை. ஆனுல் படுக்கை அறையும் விறுந் தையும் நன்றுகக் கழுவப்பட்டிருந்தன.

முடிவழ: ஏன் கழுவப்பட்டது என அம் மாவை நீர் கேட்கவில்லைடா?

சா: கேட்டேன். தம்பிசிறுநீர் கழித்து விட் டதால் கழுவியதாக அம்மா கூறினுர்.

எங்கள் வளவிலுள்ள சாணகக் குவியல் 4அடி உயரமிருக்கும். சாணத்தை நானும் மாட்டுத்தொழுவத்திலிருந்து குவியலில் அள் ளிக் கொட்டுவேன். அடுத்தநாள் சாணம் போடும்போதும் அந்தக் குவியலில் எவ்வித மாற்றத்தையும் நான் காணவில்லை.

முதல் இரு எதிரிகளும் அம்மாவோடு பேசிக்கொண்டிருந்தனத நான் கண்டிருக் கின்றேன். மறுநாட்காலை மண்வெட்டியுடன் ஈட்டுமார்க்கமாக இரு எதிரிகள் வருவதை யுங் கண்டேன். அவர்கள் எங்கிருந்து வருகி றுர்கள் என நான் கேட்கவில்லை.

''அவர்கள் வயலில் இருந்துவருவதாக அம்மா கூறினுர்''

மூடிக்குரிய வழக்கறிஞர் துருவித் துருவி பல கேள்விகளை கேட்கிறுர்.

அம்மாவும் 1ம் எதிரியும் ஐயா இல்லாத சமயங்களின் தனியாக அறையுள் தங்கியிருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தை நான் கண்டிருக்கின்றேன். அதுமட்டுமல்ல நாங்கள் பசியோடு இருந்தபோதும் எம்மைக் கவனிக்காது அம்மா, 1ம் எதிரிக்கு பலகாரங்கள் கொடுத்து சிரித்துக் கதைப்பது வழக்கம்.''

3ம் எதிரியின் குற்ற ஒப்புதல்

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் அன்று நீதவானுகை இருந்தவர், இன்று உச்ச நீதிமன்ற நீதியரசராகக் கடமையாற்றும் மேன்மைக்குரிய திரு. ஏ. வைத்திலிங்கம் அவர்கள் ஆவர். இவர் முன்னிலையில் இரகசியமாக 3ம் எதிரி அளித்த வாக்குமூலம் பின்வருமாறு,

''முதல் நாளிரவு என் கணவரும் மற்றைய எதிரிகளும் சேர்ந்து கள் குடித்துவிட்டு படுக்கைக்குப் போனுர்கள். இரவு 10-30 மணியளவில் நான் மலசலகூடம் சென்று திரும்பினேன். அப்பொழுது 1ம் எதிரி கத்தி ஒன்றைக் கொண்டு வீட்டுக்குள் ஓடினுர். கணவனை வெட்டினுர். கணவர் ஐயோ என்று சத்தம் இட்டார். நான் அப்பால் சென்றுவிட்டேன். பின்னர் சடலத்தைச் சாக்கில் சுற்றி இரண்டு எதிரிகளும் வெளியே எடுத்துச் சென்றனர். சிறிது நேரத்தில் திரும்பவும் வந்து சம்பவம் நடந்த இடத்தில் இருந்து இரண்டு கறை படிந்த பொருட்களைச் சைக்கிளில் கட்டிக்கொண்டு இருவருஞ் சென்றனர். இதுபற்றிச் சொல்லவேண்டாம் என 1ம் எதிரி என்னைப் பயமுறுத்தினுர். அவர் சொன்னபடி நான் சோரன் பற்றைக்குச் சென்றுவிட்டேன்.''

இவ்வழக்கு நடைபெற்றுக்கொண்டிருந்தபோது முடிக்குரிய வழக்கறிஞருக்கும் எதிரிதரப்பு வழக்கறிஞர்களுக்கும் இடையே அடிக்கடி பிரச்சனைகள் எழுந்தவண்ணமே இருந்தன. ஒரு கட்டத்தில்,

அமிர்: கற்றறிந்த என் நண்பர் நான் குரைக்கிறேன் என்ருர். அவர்தான் குட்டிநாய் மாதிரி அடிக்கடி துள்ளுகிருர்

நீதியரசர்; நீங்கள் இருவரும் என் மாணவர்கள் தெருவில் நிற்பவர்கள் அல்ல. பாராளுமன்றம் நீதிமன்றங்கள் ஆகியன ஒரு நாட்டின் முக்கிய நிறுவனங்கள் இங்கு கடமையாற்றுபவர்கள் பொறுப்புடன் நடந்தால் மட்டுமே நாட்டின் நிறுவாகம் சிறந்த முறையில் இயங்கக்கூடியதாய் இருக்கும்.

இருவ்ரும் ஏககாலத்தில் எழுந்து மன்னிக்க வேண்டும் பிரபு.

வழக்கறிஞர்களுக்கிடையே தொடர்ந்து நடைபெற்ற ''லடாய்'' இத்துடன் ஒருவாறு முற்றுப்பெற்றது. அடுத்து தொகுப்புரைகள் தொடங்குகின்றன.

இரண்டாம் மூன்ரும் எதிரிகள் தமது சார்பில் சாட்சிகளை அழைத்தமையினுல் தொகுப்புரைகளை முதலாவதாக இரண்டாம் எதிரியின் வழக்கறிஞரும், இரண்டாவதாக மூன்ரும் எதிரியின் வழக்கறிஞரும் மூன்ருவதாக முடிக்குரிய வழக்கறிஞரும் நான்காவதாக முதலாம் எதிரியின் வழக்கறிஞர் கடைசியாக நீதியரசர் அவர்கள் வழக்கறிஞர் நடத்தினர்.


விஜயம் செய்யுங்கள்

தரமான மணிக்கூடுகள்

★வாங்கவும் ★திருத்தவும்

யாழ் நகரில் புகழ் பெற்றவர்கள்

டில்கா வாச் வேக்ஸ்

(யாழ் பஸ் நிலையத்திற்கு முன்பாக)

DILKA WATCH WORKS

No. 202, Hospital Road :— JAFFNA.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் துறை இயங்கும் நாடுகளில் அரசாங்க நடவடிக்கையின் அவசியம்

சைலா கனகசபாபதி

யாழ் வளாகம்

ஒரு சமுதாயத்தில் உள்ள மனிதர்களின் குறிக்கோளும் அதை அடையும் விதமும் சமுதாயத்திற்குச் சமுதாயம், காலத்துக்குக் காலம் வித்தியாசப் படுகின்றன. ஆதிகால சமுதாயத்தில் மக்களின் பலவித குறிக்கோள்களும் பண்டமாற்று அடிப்படையில் சமுதாயத்திற்குள்ளேயே பூர்த்தி செய்யக் கூடியதாகவிருந்தது. ஆனல் இன்றைய நவீன பொருளாதாரத்தில் இரண்டு வழிமுறைகளில் பூர்த்தி செய்யக்கூடியதாகவுள்ளது. அவை தனியார்துறையின் முயற்சி மூலம் ஏற்படும் சந்தைப் பொறிமுறையாகவும் அரசாங்க நடவடிக்கையின் மூலமுமாகும்.

தலையிடாமைக் கொள்கை செல்வாக்குக் கொண்டிருந்தபோது அரசின் பணிகள் குறைந்த அளவிலேயே அமைந்திருந்தது. ஆனல் இன்றைய புதுமைப் பொருளாதாரத்தில் அரசு ஒரு முக்கிய அமைப்பாகத் திகழ்கின்றது. இனறு அரசு பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் செல்வாக்குக் கொண்டுள்ளது. பொருளாதார முன்னேற்றம் சிறப்பான அரசாட்சியிலேயே அமைந்திருக்கின்றது. விரைவான வளர்ச்சியைப் பெற உதவும் தொடக்க நடவடிக்கைகளை அரசே எடுக்கவேண்டும். ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காகத் திட்டமிடுதலையும் அரசே மேற்கொள்கின்றது. இங்ஙனம் காலப்போக்கில் அரசாங்கத் துறையின் வளர்ச்சி மேம்பட்டுள்ளதற்குக் காரணம் தனியார்துறையின் போதாமையாகும். இங்ஙனம் அரசின் செல்வாக்கும், தலையீடும் பொருளாதாரத்தில் எந்த அளவிற்கு இருக்கின்றன என்பதை பின்வருவனவற்றைக் கொண்டு அறியலாம்.

1. மூலவளங்களை ஒதுக்கீடு செய்தல்
2. தனியார் துறையின் மூலமாகத் தேசிய வளங்கள் உற்பத்திக்குப் பயன்படுத்தப் படுகின்ற நிலை.
3. பொருளாதாரவளர்ச்சியும், நிறை தொழில் மட்டமும்.
4. வருவாய்ப் பங்கீட்டின் வடிவம்.

தனியார்துறையின் நடவடிக்கை மூலம் மூலவளங்கள் உத்தம அளவில் பயன்படுத்தப்படுவதில்லை. தனியார்துறை மூலகங்களை உத்தம அளவில் ஒதுக்கீடு செய்வதற்கு மேற்கண்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும், உற்பத்தியிலோ நுகர்விலோ வெளித்தாக்கம் அற்ற நிலைமை அதாவது மூலவளங்களை உற்பத்திக்குப் பாவிக்கும் நேரத்திலோ அல்லது பொருட்களை நுகரும் பொழுதிலோ உற்பத்தியாளருக்கோ அல்லது நுகர்வோர்களுக்கோ ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் நிலைமை இல்லாதிருக்கவேண்டும் உதாரணமாக ஒரு தனிப்பட்ட நிறுவனத்தின் உற்பத்தியினல் ஏற்படும் செலவு மற்றைய நிறுவனத்தின் உற்பத்திச் செலவைப் பாதிக்கக்கூடாது. தனிப்பட்டவருக்கு ஏற்படும் உற்பத்திச் செலவும் சமுதாயத்திற்கு ஏற்படும் உற்பத்திச்செலவும் ஒன்ருகவிருக்கும் நிலைமை காணப்படவேண்டும். அதேபோன்று பொருட்களை நுகரும் பொழுதும் தனிப்பட்ட நபருக்கு ஏற்படும் பயனும் சமூதாயத்திற்கு ஏற்படும் பயனும் ஒன்ருக இருக்கவேண்டும்.

இந் நிபந்தனைகளையும் காரணச் சந்தை பொருட்சந்தையில் நிறைபோட்டி காணப்படும் நிலைமையிலும் நிறை தொழில்மட்டம் காணப்படும் நிலைமையிலும் மூலவளங்களை முழுமையாகப் பயன்படுத்தவும் இலாபங்களை உச்சமாக்கவும் காரணி உரிமையாளர்களும் தனியார் ஸ்தாபனமும், வீட்டுத் துறையாரும் முற்படும் போது தான் ஏற்மடும்.



Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியார்துறையின் கீழ் அதாவது சந்தைப் பொறிமுறையில் மேற்கூறிய இரு நிபந்தனையு பூர்த்தி செய்யமுடியாத நிலைமை ஏற்படுகின்றது.

அதாவது சமூகப் பொருட்கள் (Public Goods) காணப்படும் சமயங்களில் இந்நிலைமை பூர்த்தி செய்யப்படமாட்டா. இப்பொருட்களிலும் ஒரே சமயத்தில் பலர் பயன் அடையக்கூடியதாக இருக்கின்றது. இப்பொருட்களை தனிப்பட்ட நபருக்கு பகிர்ந்து அளிக்கக்கூடிய நிலைமை இல்லை. அதாவது இப்பொருட்களைப் பிரித்து விற்கமுடியாது. ஒருவர் இன்னொருவரின் நுகர்ச்சியைப் பாதிக்க முடியாது. எந்த தனிநபரையும் நுகராமல் தடைவிதிக்கமுடியாது. எனவே இப்படியான பொருட்களை தயானியார்துறை உற்பத்தி செய்யமாட்டாது. ஏனெனில் ஒரு தனிப்பட்ட நபர் பொருட்களுக்கு பணம் கொடுத்து வாங்காமல் பணம் கொடுக்காமலேயே அனுபவிக்க முடியும் நிலைமை காணப்படுவனுல்தான். எனினும் பலர் சேர்ந்து தன்விருப்ப அடிப்படையில் Voluntar Co-opetation செய்தாலும் தொடர்ந்து செய்ய மாட்டார்கள். உதரரணமாக நகர் பாதுகாப்பு, தீயணைப்பு என்பனவாகும். இவ்வித உற்பத்தியை ஆரசாங்கமே மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து தனிப்பட்ட பொருளை நுகரும் போது அதனுல்வரும் பயன் தனிப்பட்டவருக்கு மட்டுமன்றி வேறும் ஒருவருக்டும் நன்மை ஏற்படலாம். அப்படியான நிலைமையில் தனிப்பட்டவர் அடையும் பயனும், சமுதாயம் அடையும் பயனும் வேறுபடும். உதாரணமாக கல்வியினுல் தனிப்பட்ட ஒருவர் அடையும் பயணிலும் பொருளாதார பண்பாட்டு அடிப்படையில் ஏற்பாடும் சமுதாயத்தின் பயனும் வித்தியாசமாகும். மேலும் தொற்று நோய் ஊசி போடுவதன் மூலம் ஒருவர் அதனுல் பெறும் பயனை விட சமுதாயம் பெறும் நன்மை கூடுதலாக உள்ளது. இப்படியான நுகர்வில் வெளித்தாக்கம் இருக்கும் பொழுது தனியார்துறை தேவையான அளவிலும் குறைவாக ஏற்பத்தி செய்ரும். காரணம் இது வெளிசாக்கத்தை பிரதிபலிப்பதில்லை. இப்படியான பொருட்களை தனி ஒருவர் தன்னலம் மட்டும் கருதும்போது அவரின் பயன் சமூதாயப் பயனைவிடக் குறைவாகும். இவ்வகையான பொருட்களை தனியார்துறை உத்தம பயன் பெறக்கூடியவளவில் எற்பத்திசெம்ய முடியாமல் உள்ளது.

மேலும் குறைந்து செல்லும் செலவு காணப்படும் பொழுதும் சந்தைப் பொறிமுறையில் மூலவளங்கள் உத்தம அளவில் பயன் படுத்தப்படுவதில்லை' (உ+ம்) புகையுரதப் பாதை அமைப்பதினுல் உற்பத்தியைக் கூட்டுவதன் மூலம் செலவு குறைந்து செல்லும். இதனுல் உற்பத்தியைக் கூட்டுவதனுல் ஸ்தாபனத்திற்கு ஏற்படும் செலவிலும் பார்க்கா சமுதாயத்திற்கு ஏற்படும் செலவு மிகக் குறையும். எனினும் அத்தாபனம் சமுதாயச் செலவைக் குறைப்பதன் மூலம் நேரடிப் பயன் அடையாது. இந் நிலையில் அரசாங்கத் தலையிடு அவசியமாகும்,

உற்பத்தியிலும். நுகர்விலும் ஏற்படும் வெளித்தாக்கத்தாலும் சாதன ஒதுக்கீடு உத்தம நிலையை அடைவதில்லை. (உ+ம்) புகைப்பதனுல் அவருக்கு ஏற்படும் திருப்தியிலும், அவ் பஸ்வண்டியில் பிரயாணம் செய்யும் பலரும் அடையும் பயனின்மை கூடுதலாகும். எனவே சமுதாயத்தில் ஏற்படும் தீமை கூடவாகும். அடுத்து ஒரு உற்பத்தி தாபனத்தால் ஏற்படும் மசுபடுத்தல் இன்னொரு உற்பத்திக்குச் செலவைக கூட்டும். இதனுல் முழுசமுதாயத்தினையும் நோக்கின் உர்பத்திச் செலவு கூடுதலாகும். இந்நிலைமையிலும் சாதன ஒதுக்கீடு உத்தமநிலையில் இல்லை.

மேலும் நிறைவற்ற போட்டித்தொழில் இயங்கும்போது அங்கு சாதனங்கள் உத்தம அளவில் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுவதில்லை. இந்நிலையில் சத்தைவிலை எல்லை வருமானம், எல்லைச் செலவிலும் பார்க்க கூடுதலாக இருக்கும். இதனுல் எல்லைச் செலவைவிட விலைகூடுதலாக இருக்கும். எல்லைச் செலவு சராசரிச் செலவைவிட குறைவாக இருக்கும். இங்குசராசரி செலவி இதிதாழ்ந்த புள்ளியில் உற்பத்தி செய்ய முனைவதில்லை உற்பத்தினைக் குறைத்து விலையைக் கூட்டி இலாபத்தை அதிகரிப்பதே நோக்கமாகக் [கொள்வார். அதாவது செய்யக்கூடிய உற்பத்தியினைத் தடுப்பதும் தனி உரிமையில் காணப்படும் அம்சமாகும்.

மேலும் உற்பத்திக் காரணிகளின் விலைகள் காரணிகளின் குகள்வி, நிரம்பற் சமநிலையாக இருக்காது. இவ்வாறு கேள்வி, நிரம்பல் சமநிலையில் இல்லாதிருப்பது நாட்டின் இணைப்புக் கேள்வி போதாயின்மையைக் கரட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான நிலைமை நாட்டில் காணப்படுவதன் காரணமாக தனியார் துறையினர் மூலவளங்களை உத்தம அளவில் ஒதுக்கீடு செய்யாத நிலைமையைக் காட்டும். எனவேதான் இன்று நவீன பொருளாதாரத்தில் அரசாங்க நடவடிக்கைகள் கூடிக் கொண்டு வருகின்றன.

அடுத்து ஒரு நாட்டின் மூலவளங்கள் திறமையாகத் தொழில்பட்டு உற்பத்தி உத்தம நிலையில் இருக்கவேண்டுமாயின்,

1. எல்லைப்பதிலீட்டு விகிதமும், விலை விகிதமும் சமமாகப் பட்டிருக்க வேண்டும். அதாவது ஆகக்குறைந்த அளவில் செலவு இணைப்பு இருக்கவேண்டும்.

2. நீண்டகாலத்தில் சராசரிச் செலவின் இழிதாழ்ந்த புள்ளியில் உற்பத்தி நடைபெறவேண்டும்.

3. புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்த ஆகக்கூடிய தூண்டுதல் இருக்கும் நிலைமை இருக்கவேண்டும்.

இப்படியான சூழ்நிலை நிலவின் மூலவளங்கள் உற்பத்தியில் பயன்படும் நிலை உச்சமாக இருக்க அரசாங்கமே சில உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தனியார்துறையின்கீழ் மேற்குறிய நிபந்தனைகள் திருப்தியாக செயற்படுவதில்லை. காரணம் இப்படியான உற்பத்தியில் தனியார்துறையின் வருமாணத்தைவிடச் செலவு கூடவாக இருக்கும். உதாரணமாக தனியார் துறை வீதி அமைத்து அதன் செலவை வீதியால் செலுலும் வாகனங்களிடம் வசூலிக் முற்படுமாயின் இதனால் ஏற்படும் செயற்பணச் செலவு (Collection Cost) கூடமாக இருக்கும். இந்நிலையில் அரசாங்கம் வரிவிதிப்பதன் மூலம் இலகுவாகச் செலவை வசூலிக்கமுடியும்.

அடுத்து நீண்டகால முதலீடுகளான போக்குவரத்து, நீர்ப்பாசன மின்சாரஉற்பத்தி போன்றவைகளில் தனியார்துறையினர் முதலீடு செய்யமாட்டார்கள். ஏனெனில் இவற்றில் செய்யப்படும் முதலீட்டிற்குக் கிடைக்கக்கூடிய இலாபம் குறைவாகவே இருக்கும். இத்துறைகளில் முதலிடுவதன் மூலம் ஏற்படும் நன்மைகள் மறைமுகமாகவே கிடைக்கின்றன. சமுதாயத்திற்கு நன்மை அளிக்கக்கூடிய இவை நீண்ட காலத்திற்குப் பிறகு மட்டுமே முதலீட்டிற்காக வருவாயைத் தரக்கூடியவை. மேலும் இத்திட்டங்களில் முதலீடு செய்ய அதிக மூலதனம் தேவைப்படுகின்றது. அரசினால் மட்டுமே அந்த அளவிற்கு அதிக மூலதனத்தை எளிதில் பெறமுடியும். வளர்ச்சியடையத நாடுகளில் தொழில் அமைப்பாளர்கள் மூலதனத்தை நீண்ட காலத்திற்கு இத்திட்டங்களில் முடக்குவதற்கு விரும்பமாட்டார்கள். அவர்கள் குறுகிய காலத்திலேயே முதலீட்டிற்கான இலாபத்தை அதிக அளவில் பெறவிரும்புவார்கள்.

கல்வி, தொழில் நுட்ப பயிற்சி வசதிகள், மருந்துவ வசதிகள் ஆகியவற்றைப் பெருக்குவதன் மூலம் பொருளாதார முன்னேற்றத்தை எளிதில் பெறலாம். இப்படியானவற்றில் தனியார் முன்வருவதில்லை. உழைப்பாளருக்குப் பயிற்சி அளிக்க அதிக முடியும். எனவே இவற்றை அரசாங்கமே அளிக்கவேண்டும். அத்துடன் தனியார் ஸ்தாபனம் மூலவளங்களைத். திறம்படப் பாவிப்பதற்கு 'புதிய உற்பத்தி தொழில் நுட்பங்களை அறிமுகம் செய்ய முடியாமலும் இருக்கும் நிலைமையும் உண்டு. தனியார் தாபனங்கள் சிறிதாவன் தேவையான ஆராய்ச்சி செய்யும் நிலைமையில் இல்லை. சிறு விவசாயிகள் ஆராய்ச்சி செய்யமுடியாது. இந்நிலையில் அரசாங்கத் தலையீடு அவசியமாம்.

அடுத்து தனியார்துறை முக்கியம் வகிக்கின்றபொழுது அங்கு பொருளாதார வளர்ச்சியின்மையும், நிறை தொழில் மட்டமின்மையும் காணப்படும் தனியார்துறை இருக்கின்ற மீலவளங்களை முழுமையாகப் பாவிக்காததால் உற்பத்திக் குறையும். அதனால் வேலைவாய்ப்புக் குறையும் எனவே மக்களின் வருமானம் குறையும். எனவே பொருளாதார வளர்ச்சியில்லை. வேலைவாய்ப்பின்மை காரணத்தால் காரணிகளின் சார்பு விலைகள் மாற்றப்பட்டு மூலவலங்களின் ஒதுக்கீடு செய்யும் முறையும் பாதிக்கப்படும். எனவே காரணிகளின் சேர்க்கையில் ஏற்படும்திறன் வீழ்ச்சி அடையும். இறுதியில் இவ் வேலைவாய்ப்பின்மை வருமானம் பகிர்ந்தளிக்கும் தன்மையிலும் மாற்றம் செய்கின்றது. இதனால் நாட்டின் வருமானம் எப்படிப் பங்கிடவேண்டுமோ, அதற்கு எதிர்மாறாக நடக்கும். வேலையின்மையினால் வருமானம் இல்லை. எனவே உற்பத்தியில்லை. எனவே மேலதிக பொருளாதார முயற்சிகளுக்கு அங்கு இடம் இல்லை

[26-ம் பக்கம் பார்க்க]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்களுக்குத் தெரியாத மூல வேர்கள்

முகில் கூட்டங்கள் தழுவிச் செல்லும்படியாக உயர்ந்து நிற்கும் அந்த மலைமுகட்டில் ஏறி மறுபுறத்தில் சற்று இறங்கினால் தோட்டப்பகுதி வந்துவிடும். நினைத்துப் பார்த்தபோதே கனகசபையின் உடல் களைத்துப்போய்விட்டது. நிலமெங்கும் பச்சை விரிந்து கிடந்தது. மொய்த்துக்கொண்டு நின்ற கொக்கோ மரங்களில் சிவப்புப்பிஞ்சுகள் கண்சிமிட்டிக்கொண்டிருந்தன. மரங்களினூடாக சலசலத்து ஓடிவந்த சீதளக்காற்று கனகசபையின் உடலை அரவணைத்து... உண்டான உற்சாகத்தில் அவரது வாய் சிவபுராணத்தில் தெரிந்த சில வரிகளை முணுமுணுத்துக்கொண்டிக்க நடந்து கொண்டிந்தார்.

அவரைச் சுற்றியிருந்த இயற்கையில் தான் பசுமை இருந்ததே தவர அவரது மனம் ஈரமிறிக் காய்ந்துதான் இருந்தது. எப்படியும் முத்து ஒழுங்காகித்தந்து விடுவான் என்ற நம்பிக்கையை மனதில் மீட்டுக்கொண்டு பெருமூச்சுடன் இன்னமும் ஏறிமுடிக்கவேண்டிய தூரத்தைக் கண்களால் அளவிட்டுக்கொண்டார், ஒரு வாரத்துக்கு முன்பே கனகசபை முத்துவிடம் கூறியிருக்கிறார். ''முத்து எனக்கொருபெடியன் பிடிச்சுத் தரவேணும்... ஊரிலை பெண்சாதிக்குத் துணையாகஇருக்கும்'' என்று அவர் கூறியபோது உற்சாகத்துடன் சம்மதித்த முத்து வாரவிடுமுறையில் லயத்துக்கு வரும்படி கூறியிருந்தான். 'ஒரு பத்துப் பன்னிரண்டு வயசிலை...'' எண்ணிப்பார்த்தபடியே அவர் மலை முகட்டுக்கு வந்து சேர்ந்தபோது மாலை ஆறுமணியாகிவிட்டது.

முன்னர் கூறியபடியே சந்தியடியில் முத்து நின்றான் ''பையன் கிடைத்தானா'' ஆவலுடன் கேட்டார் கனகசபை. ''ஆமாங்க சொல்லியிருக்கிறன் ஐயாவும் வந்து பார்த்து பிடிச்சுதென்றால் வாங்கிக்கலாம்'' ஏதோ கடையில் சாமான் வாங்குவது போன்ற மனோபாவத்துடன் தான் முத்து கூறினான். அந்த ஒற்றையடிப் பாதையில் கல்லும் முள்ளும் கால்களை இடற கிரமத்துடன் நடந்தார் கனகசபை. முன்னால் உற்சாகத்துடன் துள்ளிப் பாய்ந்து நடந்துகொண்டிருந்தான் முத்து. அத்தகைய பாறைகளெல்லாம் அவனது கால்களுக்கு பழக்கமானவையல்லவா? நாலாம் நம்பர் லயத்துக்குள் நுழைந்தவர்களை 'வாய்முழுவதும் பல்லாக' ஒரு நடுத்தர வயதுப் பெண் வரவேற்றாள். அவளிடம் முன்னரே முத்து கூறியிருக்கிறான் போலும்,

''ஐயா கூட அனுப்பிறதுக்கு என்னங்கபயன்'' அவளாகவே பேச்சைத் தொடங்கினாள். [விலை பேசம்படும் அந்தப் பையனைப் பெற்றவளாம் அவள். முத்துதான். அவனைக் கனகசபைக்கு அறிமுகப்படுத்தினான். இவ்வளவு சுலபத்தில் காரியம் சித்தியாகும் என்று கனகசபை கனவிலும் நினைக்கவில்லை. பையனைக் கூட்டி வாங்க மணவறைக்கு மணப்பெண்ணைக் கூட்டிவரும்படி குருக்கள் ஆணையிடும் அதெ தொனியில் முத்து கூறினான். 'ராஜா...' என்று அவன் குரல் கொடுத்தும் விவரம் புரியாமல் அவளது மூன்றாவது மகன் முன்னால் வந்துநின்றான. [''நம்ம பெரிய மாஸ்ரர் வீட்டுக்குப் போறியாடா'' முத்துதான் பரிவுடன் கேட்டான்] சிறுவனின் கண்களீல் ஒரு பிரகாசம். கஞ்சித் தண்ணி... காய்ந்த பாண் இவையெல்லாம் மனக்கண்ணில் தோன்றி மறைய இறைச்சிக்கறி... சோறு வயிறு குளிர்வது போல் ஒரு உணர்ச்சி. அவனது கண்களில் மகிழ்ச்சி வெள்ளம். ஓ... இப்பவே போயிக்கிறேன் அம்மா நான் இப்பவே போறன்'' என்று தாயின் முகத்தைப்பார்த்தான். அவளது நெஞ்சத்தில் சம்மட்டிகள் அறைவதுபோல் இருந்தன. ''மகனே'' என்றபடி இறுக்கி அணைத்தாள்.

கனகசபையின் கண்கள் ஆவலுடன் சிறுவனை அளவிட்டன. ஊத்தையேறிப்போன உடல்... இதழ்களின் மேலாக வெளியே நீண்டிருக்கும் பற்கள்... பஞ்சத்தில் அடிபட்ட கோலம். லேசாக கனகசபையின் முகம் சுழித்தது. பையனின் மூக்கில் சழி வடிந்து கொண்டிருந்தது. பசியினால் போலும் கைவிரலைச் சப்புக் கொட்டிக் கொண்டிருந்தான். ''லேடீஸ் கிளப் விருந்து இப்படியெல்லாம் பல 'பெரிய' இடத்துப் பெண்கள் வந்து போகும் வீட்டில் வேலைக்காக இவனைத் தைத்துக் கொள்ள சம்மதிப்பாளோ? கொஞ்சமாவது லட்சணமாக இருக்கக்கூடாதா? 'இப்படி ஒரு நொடி வேகக் கேள்வி கனகசபைக்கு.

கனகசபைக்கிருந்த உறசாகம் எங்குபோனதோ தெரியவில்லை. சலிப்புடன் முத்துவின் பக்கம் திரும்பினார். அவனது காது கனகசபையின் வாய்க்கருகில் தானாகவே நெருங்கியது. முத்து வேற இடத்திலை பெடியன் பிடிக்க ஏலாதோ'' அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன நிலையை முத்து புரிந்து கொண்டான். வாங்க வந்த பொருளுக்குச் சந்தை மானம் இல்லை. ஐயா ஒரு கிழமையிலை சொல்லிஞராம்'' என்று கூறி விட்டு எழுந்து நடந்தான் முத்து கனகசபையரும் விடாாகண்ட ராக [பின்தொடர்ந்தார்] லயத்துக்கு முன்னுல் இருந்த மண் மேட்டில் ஏறியபோது முத்து கேட்டான். ஐயா பொம்பிளைப் பிள்ளையென்ருலும் நல்லது தானுங்களே'' [மௌனமாகவே நடந்தார் கனகசபை. அவரது நினைவு படித்துவிட்டு வீட்டுக்குப் பாரமாக இருக்கும் மகனிடம் ஓடி விட்டது.

பொம்பிளைப்பிள்ளை யெண்டாலும் நல்லதுதானுங்களே'' என்று முத்து மீண்டும் கேட்ட போது சுய நிலைக்கு மீட்டார் கனகசபை. [''ஒன்பது பத்து வயசுக்குள்ள இருந்தால் பரவாயில்லை தயக்கத்துடன் கூறினுர்.] [ஒற்றையடிப்பாதை யொன்றினூடாக முத்துவின் பின்னுல் 'விழுந்தெழும்பி' நடந்தார் கனகசபை இருளின் ஆட்சி தொடங்கி விட்டதால் தட்டுத் தடுமாறி... ஆன்ம் நம்பர் லயத்தை அடைந்து விட்டார்கள். கனகசபையை வெளியே நிறுத்திவிட்டு உள்ளேபோன முத்து சிறிது நேரத்தில் அவரையும் வருமாறு அழைத்தான். எல்லாவற்றையும் பேசி ஒழுங்காக்கி விட்டான் போலும். ''ஐயா வணக்கமுங்க...'' என்று வரவேற்ற அவனுக்கு நாற்பது வயதுக்குமேல் இருக்காது. கனகசபையர் உள்ளே சென்று கிழிந்த பாய்யில் அமர்ந்துகொண்டார்.

''உடம்பை வருத்தி உழைக்கிறதுக்குக்கூட தொழில் இல்லீங்க... தோட்டத்திலைகூட கிழமையிலை ரெண்டு நாளைக்குத்தானுங்க வேலை குடுக்கிருனுக'' தனது பஞ்சப்பாட்டைப் பாடத் தொடங்கிவிட்டான் அவன். முத்து அவசரப் படுத்தியதால் நிறுத்திவிட்டு ''ராணி...'' என்று குரல் கொடுத்தான். [ராஜா... ராணி என்று பெயர் வைக்கிறதுக்குத்தான் அவர்களால் முடிகிறது. அப்படி வாழவைக்க] உள்ளே படுத்துக்கிடந்த ராணி எழுந்து ஓடிவந்தாள். என்னெ கனவுகளுடன்... நினைவுகளுடன் கிடந்திருந்தாளோ?.

கனகசபையின் கண்கள் ராணியை அளவிட்டன. பருவத்தின் நுழைவாயிலில் நின்ருள் ராணி. மலர்கின்ற பருவத்தில் இருந்த அவளை வீட்டில் வேலைக்காக...] அவரது நினைவில் வீட்டில் இருக்கும் வயது வந்த மகன், தயங்குகிருர் கனகசபை. அவனுக்கருகில் பருவமலர் ராணி இருந்தால். தவருக அவன் நடந்து கொள்வான் என்பதில் கனகசபைக்கு துளியும் சந்தேகமில்லை. அவருக்கு மகனுகப் பிறந்தவனல்லவா? [''பொம்பிளேயளைக் கொண்டுபோய் பிறகு வீணை கஸ்ரங்கள் வரும் அதுகளுக்கு வேலிபோட நம்மாலை முடியாது''] தனது மகனுக்கு போட முடியாத வேலியை... அவளுக்காக மாற்றிக்கதைத்தார். பழிகளை அவர்கள் செய்வது பாவங்களைச் சுமப்பதற்கென்று தான் இவர்கள் இருக்கின்ருர்களே. [பேரம்பேசிவிட்டு பொருளைவாங்காமல் கடையை விட்டு வெளியேறும்போது முதலாளி ஏக்கத்துடன் பார்ப்பானே அதுபோன்று கனகசபையைப் பார்த்த படி நின்ருன் ராணியின் தகப்பன்.

இரவாகி பலமணி நேரம் கழித்துவிட்டது. மெல்ல மெல்ல மெல்ல முத்துவின் மீது அவருக்கிருந்த நம்பிக்கெ தளரத் தொடங்கி விட்டது. ''முத்து ஆறுதலாக நல்ல ஒரு பெடியனை ஒழுங்செய்து போட்டு வந்து சொல்லு என்று கூறிவிட்டு நடந்தார். பின்னுலேயே தந்த முத்து 'கடைசியா அந்த முன் லயத்திலையும் பார்த்திடும்' என்று கொஞ்சுவது போல் கூறினுன்.

கனகசபையையும் அழைத்துக் கொண்டே உள்ளே நுழைந்த முத்து பையனின் பெற்ருேர்களிடம் எச்சில் ஒழுகப்பேசினுன். மாஸ்ரரின் வீட்டில் உள்ள வசதிகள், அவரது மனைவியைப்பற்றி தனது கற்பனையில் தோன்றியவைகள் மாதாமாதம் கிடைக்கக் கூடிய பணம் இவையெல்லாம் சேர்ந்து அவர்களைச் சம்மதிக்க வைத்தது. கனகசபை விலைபேசி பையன் அவரது பள்ளிக்கூடத்திலேயே கீழ்வகுப்பு மாணவன் தான். முதல்மாதச் சம்பளத்தை 'அட்வான்ஸ், ஆகவே கொடுத்து என்னட்டை விடுகிறதுக்கு நீங்க கொஞ்சமும் பயப்பிடத்தேவயில்லை என்ருர். அவர்களுக்கு பூரணமான திருப்தி ஏற்பட்டுவிட்டுவிட்டது.

உள்ளே சென்றதாய் உறக்கத்தில் கிடந்த மகனைத் தட்டி எழுப்பினுள். விபரம் புரியாமலே எழுந்தான் சிறுவன். முன்பாக அழைத்து வந்தவள் மாஸ்ரர் வீட்டிலேதான் இனி நீ இருக்கணும் அவங்க வீட்டு அம்மா சொல்லிறபடிதான் கேட்டு நடக்கனும் என்று கூறியபடியே அவனை கனகசபையின் கையில் ஒப்படைத்தாள். [உதறிவிடுவித்துக்கொண்டான் 'அம்மா... அம்மா நான் மாட்டேம்மா... உன்னைவிட்டுப் போகமாட்டேம்மா'' அன்று அலறியபடியே தாயைக் கட்டிப்பிடித்தான். ['காசும்வாங்கியாச்சு...' என்றபடியே அவனது தகப்பன் அதட்டிக்கெபண்டு அவனை இழுத்தான். 'அம்மா...' அவனது வாய் ஓயவில்லை. அவனது பிடியும் நழு

[26-ம் பக்கம் பார்க்க]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Te... ...gy Services
12½, POINT ... ... ROAD
NALLUR, JAFFNA
No.________

## செவ்வந்தி கவிதைப்போட்டி

கோப்பாய் சிவம்

ஓ இளைய சமுதாயமே!!
உங்கள் காதுகளில் ஒலித்து
இதயப் படுதாக்களில் புத்தம்புதிய
ஓவியம் வரைந்து
உதய கீதமாய் முழங்கி வரும்
ஒரு புதிய சமுதாய சித்திரத்தை
இனங் காட்டுவதற்காக
இங்கு நாங்கள் வந்திருக்கிறோம்.

சமுதாய வயல்களிலே
சரிபாதியாக வளர்ந்திருக்கின்ற ஊழற்களைகளை
அகற்றிவிடுவதற்ககா
இன்று நாங்கள் வந்திருக்கின்றோம்

ஓ! மானிட வர்க்கமே!!
இதோ வருகிறது புதியதோர் சங்கநாதம்
எழுந்து பார்!
பூபாள ராகங்களின் புதிய எழுச்சியுடன்
புத்தம் புதிய உலகினைப் படைப்பதற்காக
எங்களோடு நீயும் வருகிறாயா?

# புத்தம் புதுயுகத்தின்

தோழர்களே!
அதோ பாருங்கள் சராசரி மனிதனை!
சீதனக் கயிற்றினால் கால்கள் கட்டப்பட்டிருக்
கின்றன,
சாதி விலங்குகள் கைகளில் பூட்டப்பட்டிருக்
கின்றன
லஞ்சமுள்முடி அவன் தலையில் தரிக்கப்படிருக்கிறது
அந்தோ! பரிதாபம்!!
அவன் ஊழற் சிலுவையிலே அறையப்பட்டு
உணர்ச்சி ள் மாய்ந்து கிடப்பதைப் பாரீர்!!

எதிர்காலத்தின் இளம் சிட்டுகளே!
வெற்றி முழக்கம் செய்கின்ற
எங்கள் சங்கநாதத்தின் இனிய பின்னணியிலே
உங்களது மோனப் புன்னகைகள் மலரட்டும்
உங்கள் புன்னகையில்
ஊழல் அரக்கரின் திரிபுர மண்டலங்கள்
பொடிப்பொடியாக உதிரட்டும்,

ஓ! கன்னி மலர்களே!!
உங்கள் வீரச்சிலம்புகளைக் கழற்றி வீசுங்கள்
சீதன நகரம் தீப்பற்றி எரியட்டும்.
நவீன நளாயினிகளே!
உங்கள் கற்புக் கனலின் திறமையைக் காட்டுங்கள்
'டொனேஷன்' சூரியன்கள் உதிக்காமலே
இருக்கட்டும்'

புத்தம் புதிய சாவித்திரிகளே!
உங்கள் சத்திய வான்களின் இதய சுத்தத்திற்காக
தரகு யமன்களுடன் போராடுங்கள்,
எங்கள் புத்தம் புதிய யுகத்தின் பிறப்புக்காக
ஆயிரமாயிரம் பாஞ்சாலிகளாக
வீரசபதம் முழக்கி நில்லுங்கள்!

ஓ! எமது இளைய சகோதரர்களே!!
உங்கள் காண்டீபங்களின் கர்ச்சனைகளைக் கேட்டு
சீதனத்துச் சாதனர்கள் நடுங்கி ஓடட்டும்.
உ ங்கள் கடா புதத்தின் வீச்சினிலே
லஞ்சத் துரியோதனர்களின் தொடைகள்
பிளக்கட்டும்,
உங்கள் இதய எழுச்சிக்காகப்
பாஞ்ச சன்னியத்தின் முழக்கத்தோடு
புதிய கீதைகளை உபதேசிக்க
பார்த்தசாரதிகளாக நாங்கள் வந்திருக்கிறோம்!!
எங்கள் உபதேசங்கள்
நெட்டுருப் போடுகின்ற
மந்திரங்கள் அல்ல!
புதிய உலகைப் படைத்திடவைக்கும்
புத்தம் புதிய தந்திரம் அவைகள்!
யுகப்புரட்சிக் காலத்து
இலட்சியம் வேள்வியின் சாம வேதங்கள்!!

# பூபாளம் ஒலிக்கிறது

ஓ! எங்கள் இளைய சகோதரர்களே!
புத்தம் புதிய எதிர்காலத்தின்
புகழ் மனம் பரப்பும் பூஞ்சிட்டுக்களே!
உங்கள் புன்னகை களுக்காக
நாங்கள் கண்ணீர் சிந்துவதற்கும்
தயாராக இருக்கிறோம்.
உங்கள் உயர்வை உருவாக்குவதற்காக
நாங்கள் வியர்வை வடித்து உழைத்துக்
கொண்டே இருக்கிறோம்
உங்கள் இலட்சிய மலர்கள் மலர்வதற்காக
நாங்கள் தென்றலாகத் தவழ்ந்து வருவோம்
உங்கள் துயர மேகங்களைத் தகர்ப்பதற்காக
நாங்கள் புயலாகவும் வீசக்காத்திருக்கிறோம்!
மோகன ராகங்களே வடிவெடுத்த இளம்
சிட்டுக்களே!
உங்கள் புதிய கீதத்தின் பூபாளப் பல்லவிகளை
நாங்கள் ஆரம்பித்து விட்டோம்!!

எங்கள் தந்தையர்களான
பழைய தலைமுறையின் பெருச்சாளிகளே
நாங்கள் யாரென்பதை அறிந்துகொள்ளுங்கள்!!
நாங்கள் உங்கள் சீதன வியாபாரத்தின்
செலவில்லா முதலீடுகளல்ல!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் சகோதரிகளின் சீதனத்திற்கான
அடைவு பொருட்களுமல்ல;
நாங்கள் விற்கப்படுவதற்குப் பிறந்தவர்களல்ல!
ஏனென்றால்—
நாங்கள் விலைமதிக்கமுடியாத மாணிக்கங்கள்
புதிய சரித்திரத்தின் செப்பேடுகள்
புதிய காவியத்தின் பிள்ளையார் சுளிகள்
எதிர்கால நெடுங்கணக்கின் அரிச்சுவடிகள்!!

ஓ! எங்கள் தந்தையார்களே!
நீங்கள்
சீதனப் பேயை ஒழிப்பதுபற்றி
மேடை மேடையாய்ப் பேசித்தள்ளினீர்!
சாதிக்கொடுமையைத் தகர்ப்பதுபற்றிப்
பத்தி பத்தியாய்ப் எழுதித் தள்ளினீர்!
இலஞ்சம், பதுக்கல், கடத்தல் இவற்றை
நீக்கப் பற்பல யோசனை செய்தீர்சள்!
ஆனால் அதே வேளையில்
உங்கள் வீட்டு வாசற்படிகளில்
சாதி என்பது காவல் இருந்தது
உங்கள் ஆலய மணிகளின ஓசையில்
சாதி என்பது என்றும் ஒலித்தது.
உங்கள் இதயக் குகைகளின் உள்ளே
சாதிச் சிங்கம் பதுங்கி இருந்தது

பொருளாதாரக் கால்களின் மீது
போடப்பட்ட வாழ்க்கைப் பந்தல்
ஏற்றத் தாழ்வுகளால் சரிந்துகிடப்பதை
நாம் உணர்ந்து விட்டோம்.

எங்கள் புதிய யுகத்தில்—
இனிய வசந்தங்களின் வரவேற்புப் பந்தல்கள்.
ஏற்றத் தாழ்வுகள் அதுவுமற்ற
உறுதியான தடிகளில் நிற்கும்.

ஓ! இளைய சமுதாயமே!
உனது இதயப்பிடிலை இயக்குகின்ற வில்லாக—
உனது நரம்புகளில் எழுச்சிப்பண் இசைக்கின்ற
விரல்களாக—
உனது விழிகளைத் திறக்கவைக்கும் ஒளியாக—
யுகப் புரட்சிக் கீதத்தின்
பல்லவியாக—
புதுயுகத்தின் அதிகாலையைப்
புலர்விக்கின்ற பூபாளமாக—

எமது கீதங்கள் இருக்கும் என்ற நம்பிக்கையுடன்
எங்கள் இதய சக்திகளின்
உதய கீதத்தை
உங்கள்முன் வைக்கின்றோம்!
ஓ! மனித சமுதாயமே!
உனது புதிய பயணத்தை
இன்றே தொடங்குக!!

---

[22ம் பக்கத் தொடர்ச்சி]

பிற உற்பத்திக் காரணிகளும் அங்கு புறக்கணிக்க கப்பட்டிருக்கும்.

இச் சந்தர்ப்பங்களில் அரசாங்கம் தலையிட்டு வேலையின்மையைக் குறைப்பதனால் சமுதாயத்தின் காரணிகளின் இணைப்புத் தேவை கூடும். இதனால் உற்பத்தி கூடி, வருமானம் கூடும். வேலையில்லாதவருக்கு வளங்கப்படும் நிவாரணமும் தேவையில்லை. எனவே அரசாங்கத் தலையீட்டினாலேயே பொருளாதார வளர்ச்சியையும், நிறை தொழில் மட்ட நிலைமையினையும் அடைந்து கொள்ளலாம்.

மேலும் தனியார்துறை முயற்சியின் கீழ் வருமானப் பங்கீட்டுவடிவமும் வேறுபட்டதாகவுள்ளது. வருமானங்கள் காரணிக்கும் கொடுக்கும் விலைவாசியிலேயே தங்கியுள்ளது. தனியார்துறை முக்கியத்துவம் வகிக்கும் நாட்டில் காரணிகளின் பெரும்பகுதி ஒரு சிலரிடமே உள்ளது. எனவே வருமானமும் நாட்டின் முழுச் சனத்தொகையில் சிறிய பகுதியினரிடமே பெரும் பகுதி சென்றடைகின்றது. எனவே இந்நிலையில் அரசாங்கம் காரணிகளைத் தேசிய மயமாக்குவதன் முலம் வருமானப் பங்கீட்டை விரிவாககமுடியுப. தனியார் துறையில் இருக்கும் பங்கீட்டு அமைப்பு சமுதாயம் விரும்புவதிலும் பார்க்க வித்தியாசமாகும் எனவே அரசாங்க தலையீட்டால் வருமானம் சமமாகப் பங்கிடமுடியும், உற்பத்தியும் சமுதாயத்திற்கு நன்மையளிக்கக்கூடிய வகையில் அமையும்.

எனவேதான் சந்தைப் பொறிமுறை இயங்கும் நாடுகளில் அதாவது தனியார்துறை முக்கியத்துவம் பெறும் நாடுகளில் அரசாங்க நடவடிக்கைகள் கூடிக்கொண்டு வருகின்றது.

---

[24ம் பக்கத் தொடர்ச்சி]

வவில்லை. பலாத்காரமாக இழுத்து அவனைத் தாயிடமிருந்து பிரித்த தகப்பனின் கையில் இரு நோட்டுக்கள் சிதறி வீழ்ந்தன) சீறிப்பாய்ந்த சிறுவன் கேட்டான் 'என்னை விக்கிறதுக்குத்தானா பெத்தனீங்கள்? என்று குரல் உயத்திக் கத்தினான். செயலற்று திகைத்து நின்றனர் பெற்றவர்கள். தகப்பனின் கையில் இருந்து சிதறிய பணநோட்டுகள் வானளிமைப் பார்த்துக்கிடந்து நடுங்கின.) கனகசபையும் முத்துவும் மெல்ல வீட்டைவிட்டு வெளியேறினார்கள்.

நிலத்தில் கிடந்த பணநோட்டுக்கள் இரண்டையும் கனகசபை வாத்தியார் திரும்பி எடுக்கவில்லை கேவலம் அவை தீட்டுப்பட்டுவிட்ட நோட்டுக்கள் என்பதல்ல அவையின் பெறுமானம் அவருக்கு மிகமிகச் சிறியது.

மறுநாள் அந்தப் பையன் வாத்தியாரிடம் பாடம் கேட்கப் பாடசாலைக்கு வரவில்லை. அவனை வாத்தியார் எதிர்பார்த்தாரோ என்னவோ அவன் பின்பு அவர் கண்ணில் படவேயில்லை. அதுபற்றிய கவலை அவர்மனதில் அரும்பியதாகவும் இல்லை.

[யாவும் கற்பனை]

காவலூர் எஸ் ஜெகநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறுகள் தண்டனைக்குரியவையல்ல!

**கணபதி கணேசன்**

காலி வீதியில் புஷ்பவிமானம்போல் பறந்து வந்துகொண்டிருந்த கார் அப்துல் கபூர் மாவத்தைக்குள் நுழைகின்றது. அவ்வீதியில் மிகவும் மெதுவாக ஊர்ந்து வந்த கார் பிரமாண்டமான ஒரு மாளிகை ஒன்றினுள் நுழைந்து, போர்ட்டிக்கோவில் நின்றது. காரில் இருந்து அவசரம் அவசரமாக இறங்கிய டிரைவர் பக்கத்து சீற்றில் இருந்த முதலாளி அம்மா இறங்குவதற்குக் காரின் கதவைத் திறந்துவிட ஓடி வரமுன், முதலாளி அம்மாவே காரின்கதவைத் திறந்துகொண்டு மாளிகையுள் பிரவேசிக்கின்றாள் டிரைவர் சோமசுந்தரம் முதலாளியம்மாவுக்கு காக்காபிடிக்க சந்தர்ப்பம் இல்லாமற் போகவே சிறிது சங்கடப்பட்டான் இன்று அவனுக்கு நூறுரூபாய் பணம் உடனடியாக வேண்டும். முதலாளி அம்மாவிடம் எப்படியும் கேட்டு வாங்கிவிடவேண்டுமென நினைத்து வந்தவன் கிடைத்த சந்தர்ப்பம் ஒவ்வொன்றையும் நழுவவிட்டுவிட்டு இப்பொழுது தலையைச் சொறிந்துகொண்டு நின்றான். சோமசுந்தரத்துக்கு நான்கு பிள்ளைகள். திருமணமாகி ஐந்து வருடங்களுக்குள் நான்கு பிள்ளைகளுக்குத் தகப்பனாகிவிட்டான். சோமசுந்தரம் ஏழைகள் விடயத்தில் கடவுள் மிகவும் இரக்கசுபாவம் உடையவர். வருடம் தவறாமல் குழந்தைகள் மட்டும் கொடுத்துவிடுவார். கொடுக்கிற கடவுள் குழந்தையைத்தானா கொடுக்கவேண்டும்? கொடுத்த குழந்தைகளை வளர்க்க முடியாமல் வருமானம் போதாமல் விம்மி வெடித்து நிற்கிறார்களே! இந்தக் கொடுமைக்கு யார் பொறுப்பு? கடவுளா? இல்லை கடவுளின் மேல் பாரத்தைப்போட்டுவிட்டுத் தப்பித்துக்கொள்ளும் மனிதனா?

சோமசுந்தரத்துக்குச் சம்பளம் என்னவோ இருநூறு ரூபாய் அவனும் மற்றக் கார் டிரைவரைப் போல் காருக்கு, பெற்றோல் அடித்தல், கார் திருத்தவேலைகள் போன்ற வற்றில் பணத்தை சுருட்டிக்கொள்வதில்லை. முதலாளி அம்மாவின் தயவில் அவ்வப்போது பணம் கிடைக்கும். ஆனால் அது அவனது மாதாந்தச் சம்பளத்தில் கழிபடமாட்டாது. ஏன் அப்படியென்று மட்டும் கேட்டுவிடாதீர்கள். அவளது ஆடம்பரத்தைப்பார்த்தவர்கள் அவன் ஒரு கார் டிரைவர்தானா? என்று வியந்து மூக்கின்மேல் விரலை வைப்பர்.

''எல்லாம் அம்மா கொடுத்துத்தான் அவங்க துணிக்கடைக்குப்போகும்போதெல்லாம் எனக்கும் எடுத்துக்கொடுப்பாங்க. அவர்கள் மாதிரி எனக்கும் உயர்ந்தரகதுணிதான் எடுத்துக் கொடுப்பாங்க நான் வாங்குகின்ற சம்பளம் என்னவோ நான் குடிக்கின்ற சிகரட்டோட சரி' என்று அடிக்கடி அவனே சொல்லுவதுணடு. அவன் என்னவோ தொழிலாளிதான். தொழிலாளி இனத்திலும் சந்தர்ப்பவசத்தால் இப்படித் துரைபோல் வாழ்பவர்களும் உண்டே.

சுபத்திரா ...இவள் எஜமானி சட்டப்படி அவள் வசிக்கும் பதவி இரண்டாவது ஸ்தானத்தில் இருந்தாலும் சகல அதிகாரங்களையும் கொண்டு விளங்கும் இல்லத்து அரசி அவள். சுயமரியாதையைச் சொந்த மனைவியிடம் எதிர்பார்க்காத நல்லமனிதர் அவள் கணவன்.

சுபத்திரா நாற்பதைத்தாண்டியும் இளைய மகள் நாகரீகத்தின் மூத்த மகள், செல்வத்திருமகள் கொழும்பில் கலந்துகொள்ளாத விழாக்களோ கொண்டாட்டங்களோ இருக்கமுடியாது தொப்புள் தெரிய சேலை உடுத்து வாலைக் குமரிகள் போல் முந்தானையை ஒயிலாக இறுக்கி உடுப்பதுவும். முன்னும் பின்னும் பார்த்து அன்னம் போல் நடப்பதுவும், டிரைவர் அருகில் கைகளைப் போட்டுக்கொண்டு (சில சமயங்கள் டிரைவர் மேலும் போட்டுக்கொண்டு) லாவகமாக காரில் அமர்வதும் அவளால் மறக்கமுடியாத ஒன்று. கொன்வெண்டில் படித்தபடியால் மூன்று பாஷைகளும் சரளமாகப் பேசுவாள். ஆனால் ஆங்கிலம் தான் முன்னுக்குவரும்.

புதுமைகளைப்போலவே சில பழக்க வழக்கங்களும் அவளிடம் உண்டு. மஞ்சள் தோய்த்துக் குளிப்பது, நெற்றியில் குங்குமம் இட்டுக்கொள்வது, வெள்ளிக்கிழமைகளில் கோவில்களுக்குப்

போவது போன்றவைகளாகும் அவை அவனது கைப்பையில் கந்தர் சஷ்டி கவசமும் உண்டு. கருத்தடை மாத்திரையும் உண்டு. எங்கும் எதற்கும் டிரைவரோடுதான் போவாள். சில சமயங்களில் மட்டும் கணவரோடு வெளியே போவது உண்டு. ஆனால் ஒரு சிறப்பு! கணவனுக்கு எந்தப் பணியும் அவன் இருந்து செய்யவேண்டுமென்பதில்லை. அவரும் இதுபற்றி வற்புறுத்துவதுமில்லை, இருக்கவே இருக்கிறாள் இந்திரா.

தியாகராஜன் இவர்தான் வீட்டு எஜமானன் பெயருக்குத்தான் அந்தப் பதவி வயது ஐம்பதைத் தாண்டினாலும், வாலிபத்கென்பு அவரிடம் குறைவதில்லை வழுக்கைத்தலை ஆனால் அதை மறைக்கத் தவறுவதில்லை. அவர் தினமும் சேவ் செய்வதால் முகத்தில் ஏற்படும் நரைமயிரை நாம் பார்க்கமுடியாது. மேல் நாட்டுப் படிப்புக்கு ஏற்வாறு எடுப்பான உடை அணிந்துதான் அவரது கம்பனிக்குப் போவார். அவருக்கு கார் ஓட்டத் தெரியும். ஆனால் மனைவியுடன் வெளியே போகும் போதுதான் அந்தவேலையைச் செய்வார்.

வெளியே போய்விட்டு வீட்டுக்கு வரும் இருவரையும் வரவேற்பது வேலைக்காரி இந்திராதான், உபசரிப்பதுகூட அவள்தான். அவர்களின் பிள்ளைகள் இருவரும் வெளிநாட்டில் படித்துக்கொண்டிருந்ததனால் இங்கே இவர்களுக்கு தொந்தரவில்லாமல் இருந்தது. மாதாமாதம் பணம் அனுப்பு தோடு சரி. இரவுச்சாப்பாடு பெரும்பாலும் இருவருக்கும் தேவையிராது. தியாகராஜருக்கு து இல்லாவிட்டாலும் மது ஒன்று இருந்துவிட்டால் போதும். ஏனெனில் மது அருந்தாவிட்டால் க்கம்கூட அவரை நெருங்காது. இருவரும் படுக்கை அறையைத் தனித்தனியே வைத்துக்கொண்டிருக்கின்றனர்.

சுபத்திராவைப் பொறுத்தவரையில் தான் இந்த விதி மற்றப்படி அவர் ஒன்றும் திருநீலகண்டர் அல்ல பெண் இனத்தையே தொடமாட்டேன் என்று சபதம் செய்ய. குடும்பம் என்ற பொறுப்பில் முதலில் இருந்தவர். சுபத்திரா இப்போது இந்திரா... தியாகராஜன் குடித்துவிட்டுச் சுய நினைவு இழந்து தூங்கும் வரை அருகிலேயே இருந்து பணிவிடை செய்துவிட்டு இரவு பதினொரு மணிக்குப் பின்புதான் தனது அறைக்குப் போவாள். இந்திரா சில சமயங்களில் விடிந்த பின்புதான் போவாள்,

சுபத்திராவிற்கு இது தெரியாதா? என்று கேட்கலாம். தெரியும் தெரிந்தும் தெரியாதுபோல் நடந்துகொள்வாள்—கண்டும் காணாததுபோல் நடந்துகொள்வதுதானே பெரிய இடத்துப் பண்பு உணர்ச்சிவசப்பட்டு உரிமைக்காகக் குரல் கொடுப்பது ஏழை நடுத்தரவர்க்கப் பெண்களோடு நின்றுவிடும்போலும்,

பணக்காரர் விடயத்தில் ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் குடிப்பழக்கம் வந்துவிடும் சுபத்திராவைக் கட்டாயப்படுத்திக் குடிக்கவைத்தார் ஒருமுறை. பின்னர் அதுவே நித்தியமாகிவிட்டது. தேவையேற்படும்போது அந்தப் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்வாள் சுபத்திரா!

அன்று ஆடிவேல் ஆடிவேவ் நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக இந்தியாவில் இருந்து ஒரு நாதஸ்வரமேதை வரவழைக்கப்பட்டிருந்தார். இதை சாட்டாக வைத்துக்கொண்டு கம்பனியில் இருந்து டிரைவரை வரவழைத்து கிளம்பிவிட்டாள் சுபத்திரா... ஐயாவுக்குத்தான் இதெல்லாம் ஈடுபாடே கிடையாதே அன்றும் வழக்கம்போல் போதையை ஏற்றிவிட்டு மாடியில் தனியாக நடைபோட்டுக்கொண்டிருந்தார். தியாகராஜன். இந்திரா லீவில் ஊருக்கு சென்றுவிட்டாள். அவளுக்குப்பதிலாக அன்று சமயலுக்கு வந்திருந்த அன்னம் தியாகராஜன் வீட்டுக்கு வந்ததும்' மார்க்கெட்டுக்சப்போய் வருகிறேன் என்று சென்றுவிட்டாள் ''தியாகராஜப் பற்றி அதிகம் தெரிந்தவளோ என்னவோ.''

மார்க்கெட்டுக்குப்போன அன்னத்தை இன்னும் காணேம், என்றும் இல்லாத உத்வேகமும், உணர்ச்சியும் இன்று தியாகராஜன் உள்ளத்தில் குடிபுகுந்திருந்தது. புரட்சிப் போராட்டம்! மேல் நாட்டான் விஞ்ஞானரீதியிலே போராடி நிலவிலே நின்று புரட்சியை நிலைநாட்டினன். இங்கே மனிதன் தன் உணர்ச்சிக்கு அடிமைப்பட்டு மனத்தோடு போராடுகிறான். தியாகராஜனது மனப் போராட்டம் அன்னம் வந்ததும்தான் அடங்கியது.

''ஐயா நான் கற்புக்கரசி'' என்று கதறவில்லை அவள் அவர் கையில் பணத்தைக் கண்டதும் வாய் அடைத்துவிட்டது அவளுக்கு. அவரது கைகளுக்குள் அடங்கிவிட்டாள்.

மதயானை போன்ற ''பென்ஸ் கார் ஒன்று தியாகராஜனின் போர்ட்டிக்கோவினுள் நிறுத்தப்படுகிறது. காரின் சத்தத்தைக்கேட்டதும் அன்னம் நடுங்கினள் தியாகராஜன் எவ்வளவோ சொல்லி

[33-ம் பக்கம் பார்க்க]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியின் கண்ணன் பாட்டில்

## தத்துவச் சார்பும் ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ போதனைப் பண்பும்

[சென்ற இதழ் தொடர்]

பாரதி உலகுதழுவிய மனிதாபிமானத்தைவெளியிட்டபோதிலும், அந்த மனிதாபிமானத்தைப் பண்டைய இந்தியதத்துவங்கள் பழக்கவழக்கங்கள், இலக்கியங்கள் ஆகியவற்றிலிருந்து சுவீகரித்து அதனைத் தமதாக்கி வளர்த்துக்கொண்டார். இதனால் பண்டைய தத்துவங் ளின் பல்வேறு முரண்பாடுகளையும் அங்கீகரித்துக்கொண்டு அவற்றின் அத்திவாரத்திலேயே தமது மனிதாபிமானத்தைக் கட்டி வளர்த்தார். பழமையினடியாகவும் மரபுவழிவந்த சிந்தனைமரபுகளினின்றும் விடுபடாது இந்தியப்பண்பாட்டினையும் பாரம்பரியத்தினையும் நிலை நிறுத்திய பெருமை பாரதிக்குஉண்டு.

அதிமானுடப் பண்புகள் நிரம்பிய கண்ணனைச் சித்திரிக்கும்பொழுது வெறுமகனே கண்ணன் என்ற பாத்திரத்தை மட்டும் சித்திரித்துவிடவில்லை. அப்பாத்திரமானது பண்பும் செயல்களும் குணமுமுள்ள அனைவரினதும் ஏகபிரதிநிதியாகிவிடுகின்றனர், உலகனுபவம் ஒத்த உணர்வனுபவம் ஆகியவற்றை நிர்ணயிக்கின்ற பான்மையில் அமைந்து விடுகின்றது. உண்மையில் பாரதியார் கண்ணனைப் பல்குணச் சித்திரிப்பினூடே அந்நிலையில் நமக்குள்ளே மானசீகமாகக் கண்டமைத் துணரும் வழியினைக் காட்டியுள்ளார், இக்கருத்து.

> ''உண்மையில் பரபக்திபான்மைச் சாதாரண மனிதனின் உள்ளத்தாபங்களில் ஏற்றிக்காட்டி அவனுக்கும் தெய்வத்தன்மையின் தெவிட்டாத பேரின்பத்தை வழங்கவென்றே இன்பம் ததும்புகின்ற பண்களில் யாருக்கும் விளங்குகின்ற தமிழ்ச்சொற்களில் எல்லையற்ற ஆவலுடன் பிறந்த கவிதைக் கொத்து பாரதியின் கண்ணன்''

என்ற வரிகள் கூர்ந்து அவதானிக்கத்தக்கவை. கிருணஷ்ன் பார்த்த சாரதி மட்டுமல்ல பாரத சாரதியும்கூட.

பாரதியின் கண்ணன் எந்த உருவில் வந்தாலும் சரி மனித உருவில் தான் எப்படி வாழ்ந்தானோ வாழவிழைந்தானோ அந்த நீதியைத்தான் தத்துவத்தைத்தான் பாரதி போதிக்கின்றான்.

கவிஞனனவன் பிரபஞ்சத்திலுள்ள இயற்கைப் படைப்புக்களை நுணுக்கமாகப் பார்த்து இரசித்த தன்னனுபவ உணர்வே டு அக்காட்சிகளை எண்ணும்போது தோன்றும் அதீத பற்று நிலையில் கவிதை சிருஷ்டிக்கிறான் என்பதைக் 'கண்ணன் என் தாய்' என்ற பாடற்பகுதியினூடு மனங்கொள்ள முடிகின்றது.

> ''கவிஞன் என்பவன் ஆகாயத்திலிருந்து குதித்து வருகின்ற அமானுஷ்யப் பிறவியல்ல. தான்பிறந்த சமுதாயத்தில் நிலவும் பல்வேறு சூழ் நிலைகளு கும் அதன் சிந்தனைகளுச்கும்-தேவைகளுச்கும் அவன் கட்டுப்பட்டவன், ஒரு கவிஞன் சமுதாயத்திலிருந்து எட்டி நிற்க முயன்றாலும் அதனோடு ஒட்டிநின்றாலும் சமுதாயத்தில் இந்தச் சூழ்நிலைகளிலிருந்து அவன் தப்பித்துக்கொண்டு விடமுடியாது''

என்ற ரகுநாதனின் எழுத்துக்கள் பாரதியின் சமூகத்தொடர்பு பற்றி விளங்க உதவும். பாரதி ஒரு சமுதாய மனிதராகத்தான் வாழ்ந்தார்.


க. நாகேஸ்வரன்
இலங்கைப் பல்கலைக் கழகம்
யாழ் வளா ம்


தந்தை உருவில் வரும் கண்ணன் வாயிலாகப் பல சீர்திருத்தங்களை முன்வைக்கின்றார். நையாண்டியும் ஏளனமும்; கிண்டலும் ததும்பக் கூறிச்செல்லும் பாாதியார்,

> ''வேதங்கள் கோத்துவைத்தான் - அந்த
> வேதங்கள் மனிதர்தம் மொழியிலில்லை
> வேதங்கள் என்றும் புவியோர் - சொல்லும்
> வெறுங்கதைத் திரளி லவ்வேதமில்லை''

என்று சாடி,

அப்,

> ''போலிச்சுவடியையெல்லாம் - இன்று
> பொசுக்கிவிட்டா லெவர்க்கும் நன்மையுண்
> டென்பான்''

என்று தீர்வு கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மகாகவி கண்ணன் பாடல்களைப் பாடுவதற்கு அனுசந்தனமாக இருந்து உதவியது நாலாயிரத்திவ்ய பிரபந்தம் ''என்று வ. வெ. சு. ஐயர் கூறுகிறார் பலவிடயங்களிலும் 'பாவா' விஷயங்களில் பாரதியின் கண்ணன் பெரியாழ்வாரின் கண்ணனைப் போலத்தான் இருக்கிறான். இருந்தாலும் பாரதியின் கண்ணன் நம்மை அதிகளவு கவர்ந்து விடுவதற்குக் காரணம் கவிஞர் தம்முடைய நிலைக்கு இறங்கிவந்து கவிபாடுவதுதான். அதுமட்டுமன்றி மனிதர்கள் இன்புற்று வாழவேண்டும் என்ற கொள்கையில் ஆழமான நம்பிக்கையும் விருப்புமுடையவர்.

வாலைக் குமரியாகிய கண்ணம்மாவினூடே மாதர்தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்தும் பாரதியார் காதலின்பத்தின் ஒவ்வொரு மென்மையானதுயில்களையும் அச்சொட்டாக வடித்துக் காட்டுவதன் மூலம் பெண்விடுதலை பற்றிய உணர்வோடு 'போதனைப் பண்பினைப்' புகுத்திவிடுகின்றார். ஒப்பாசாரம்; போலி வாழ்க்கையும் வாழ்ந்துகொண்டிருந்த பெண்ணினத்தின் மீது கண்வைத்து அவர்களை மனித மதிப்புக்குள்ளாக்கி இன்புற்று வாழவைத்துவிடுகின்றார்.

''கூடிப் பிரியாமலே ஓரிராவெல்லாம்
கொஞ்சிக் குலவியங்கே
ஆடி விளையாடியே — உன்றன் மேனியை
ஆயிரங் கோடிமுறை
நாடித் தழுவி மனக் குறை தீர்ந்துநான்
நல்ல களி யெய்தியே''
— என்று அவாவுகின்றார்

இந்நிலைதான் ''இன்பமே வேண்டி நிற்கும்'' நிலையாகும். பாரதியார் மனிதர்கள் - எவராயினும் - இன்புற்று வாழவேண்டும் என்ற கொள்கையில் ஆழமான நம்பிக்கையும் - விருப்பும் உடையவர். அதன் சாயல் இவ் வரிகளிலும் உணர்ச்சிமேலிட உந்தி வெளிப்பட்டு நிற்கின்றது.

''ஆதரித்தாற்போதும் அடியேனை,
நெஞ்சிலுள்ள
காதல் பெரிதெனக்குக் காசுபெரிதில்லை''

என்று அறியாமையும் கடமையுணர்ச்சியுமற்ற சேவகர்களின் தன்மைகளையும் பாரதிதான் வாழ்ந்த சமுதாயத்திற் பார்த்ததுபோலவே. வெளிப்படுத்தியிருக்கின்றார்,

''தாழவரு துன்பமதிலும் நெஞ்சத் தளர்ச்சி
கொள்ளாதவர்க்குச் செல்வமளிப்பான்''

என்று பொருளாதார ஏற்றத் தாழ்வுள்ளமையைச் சாடுகின்றான். எனினும் முழுச் சமுதாயமாற்றம் இன்றேல் ஏழைகளின் துன்பங்கள் ஒரு போதும் துடைக்கப்படாதென்பதை நன்கு மனத்திருத்தியபாரதி அத்தகையதொரு சமுதாய மாற்றத்துக்கான அறை கூவலைத் தந்தைவடிவிற் கண்ணன் குறுப்பிட்டதாக விடுத்துள்ளார். சமுதாயப் பிரச்சினையில் பாரதி கொண்டிருந்த வெறுப்பும் சமுதாயப் பாங்கில் சிந்திக்கவேண்டியவை.

பாரதியார் கண்ணன்பாட்டில் மூன்று விடயங்களை அழுத்திக் கூறுகின்றார்.

(1) அவரது காலத்துச் சமூகச் சிக்கல்களையும் - ஏற்றத் தாழ்வுகளையும்-விவரிப்பது

(2) சமுதாயத்தில் பெண்களின் இழி நிலையைப் போக்குவதற்காக மாதர்களைப் போற்றியும், விழிப்புறச் செய்தமை.

(3 ஆத்மீக வாழ்வினடியாகச் சமுதாய முன்னேற்றமும் ஆத்மார்த்த உணர்வும் போதிக்கும் பண்பு.

— என்பனவாகும்

கண்ணனைக் கவிப்பொருளாகக் கொள்ள வேண்டும் 'என்ற விருப்பம் 'பங்கிம் சந்திரர்' எழுதிய ''கிருஷ்ண சபதம்'' என்ற நூலினைக் கற்றுணர்ந்த அருட்டுணர்வில் எழுந்ததாகவும் இருக்கலாம் என்ற கருத்தினைப் பேராசிரியர் க. கைலாசபதி (வளர்மதி: ஆடி 1974) குறிப்பிட்டுள்ளார். இக்கருத்தினை நிறுவுவதற்கு ஆதரமாகக் ஹரிதாஸ் முகர்ஜி, உமா முகர்ஜி, ஆகியோர் பங்கிம் சந்திரர் படைத்த கண்ணன் பற்றிக் குறிப்பிட்டுள்ள சில கருத்துக்களை அவர் மேற்கோள் காட்டியுள்ளார். அது பின்வருமாறு;

''பங்கிம் சந்திரரின் கிருஷ்ணன் கடவுள் அல்ல. ஆனால் எக்காலத்துக்கும் உரிய இலட்சிய மனிதன் அல்லது ஆதிமனிதன் போராடிக்கொண்டிருக்கும் இந்திய மக்கள் அவனது கொடியின் கீழ் ஒற்றுமைப்பட்டுத் தேசிய ஒருமைப்பாடு காணமுடியும் என்று அவர் எண்ணினார். கண்ணன் என்னும் பாத்திரத்தைத் தேசிய ஒற்றுமைக்குச் சின்னமாகப் போற்றி மதித்தார்''

இந்த ஒரு அடிப்படை மையக் கருத்தை (Central Idea) வைத்துக்கொண்டுதான் கண்ணன் பாட்டிற் காணக் கிடக்கின்ற சமுதாய நோக்கை நாம்பார்க்க வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் ஆசிரியருக்கு,

# இதயக் குரல்

★ இஸ்மஹான் மொஹீடீன்
அல் - முபாரக் ம. வி.
மல்வானை.

அன்புள்ள ஆசிரியருக்கு, நாங்கள் வெளியிட்டு வரும் செவ்வந்தி மலர் வாடாமல் மணம் பரப்ப எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன், என் போன்ற க.பொ.த. உயர் தரம் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு இன்றியமையாத சஞ்சிகை செவ்வந்தி. தாங்கள் ஆரம்பிக்கப்போகும் மாணவர் அரங்கு ''புதுயுகம்'' எங்கள் கன்னிப் படைப்புகளை சக மாணவ மாணவிகளுடன் பகிர்ந்து கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம் ஆகும். பல அம்சங்களும் நிறைந்து ஓர் பூரண சஞ்சிகையான செவ்வந்தி வாழ்க. வளர்க அதன் பணி.

★ செ. லூர்த்துநேசன்
நெல்லியடி, கரவெட்டி.

செவ்வந்தி ஆசிரியருக்கு, சுதந்திர வர்த்தக வலயம் பற்றி பலரிடம் ஏன் எனது ஆசிரியரிடம் கூட குறிப்புக் கேட்டேன் தகுந்த பதில் தரவில்லை. இந்த நிலையில் செவ்வந்தி 18-வது இதழ் எனக்கு நிறைவு தந்தது. பெரும் உதவியாகும் இருந்தும் இப்படியான உங்கள் நற்சேவை எமது மாணவ சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் இன்றும் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்.

★ உதுமான் ட. இஸ்மாயில்
மருதமுனை-1

கனம் ஆசிரியருக்கு, நான் சட்ட முதற் பரீட்சைக்குபடித்துக்கொண்டிருக்கிறேன்குற்றவியல் சட்டம் மாத்திர மன்றி ரோமன், அரசியல் சட்டவரலாறு கம்பந்தமான கட்டுரைகளையும் வெளியிட்டு எம் போன்ற மாணவர்களுக்கு, அதுவும் கல்வியில் பின் தங்கிய சட்டப்படிப்பில் மிகவும் பின் தங்கிய எமக்கு உதவுமாறு கேட்டுகொள்கிறேன். இக் குறைகளை நீக்கிவரும் செவ்வந்தி எமக்கு உதவவேண்டுமென அபிமான வாசகனுகிய நான் வேண்டிக்கொள்கிறேன்.

★ நிலா
ஸ்ரேசன் வீதி, சாவ ச்சேரி.

அன்பு நிறைந்த ஆசிரியருச்கு ஈழத் திருநாட்டின் இணையற்ற செல்வங்களான மாணவர்களுக்கு பயன் தரும் பல பாங்கான விடயங்களை உள்ளடக்கியதையிட்டு பெருமையடைகிறேன். ஆனால் மலர்ந்து நிற்கும் செவ்வந்தியில் உயிரியல் கட்டுரைகள் இல்லாதது கவலையளிக்கிறது. ஆனாலும் காலப்போக்கில் செவ்வந்தி மூலம் என் ஆவலைப் பூர்த்தி செய்வீர்கள் என நம்புகிறேன்.

★ சி. இரா. தனபாலசிங்கம்
சுளாவை,
அல்வாய் மேற்கு, அல்வாய்.

நான் நெல்லியடி மகாவித்தியாலயத்தில் கலைப்பிரிவில் பயில்கின்றேன். நான் கொண்டுள்ள இலக்கிய ஈடுபாடு காரணமாக தரமான தங்கள் செவ்வந்தியை விரும்பிப் படிப்பவன். செவ்வந்தியை அதிகம் கடைகளில் காணக்கிடைக்கவில்லை. தாராளமாக கிடைக்க வழிசெய்யுங்கள் புதுயுகம் பகுதியில் நானும் அங்கத்தவனுக சேர விரும்புகிறேன்.

★ செல்வி. கே. இருதயராணி
'ஞானம்' தாழங்குடா-3

தங்கள் வெளியீடான 'செவ்வந்தி' எங்கள் அறிவுக்கு வழிகாட்டுகிறது. தங்கள் மலர் என்போன்ற மாணவர்கள் பல பயனடைய வழிவகுக்கிறது. ஊழியுள்ள காலம் வரை இதனை தாங்கள் வெளியிடுவீர்களென்ற நம்பிக்கை எனக்குண்டு. தங்கள் அபிமான வாசகர்களில் நானும் ஒருந்தி அடுத்த மலரை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். தங்கள் சேவை என்று மாணவர் உலக்குத் தேவை.

★ எம். எம். அப்துல் காதர்
மருதமுனை-1

நான் செவ்வந்தியின் அன்பு வாசகன் என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். க. பொ. த' உயர்தர வகுப்பில் பயின்று கொண்டிருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் எனக்கு செவ்வந்திபெரிதும் உதவி வருகின்றது. வளர்க உங்கள் சேவை.

★ நிர்வாகி, கிருஷ்ணா இன்ஸ்ரிரியூட் ஒப் ஸ்ரடிஸ்,
68, கங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

மாதம் தோறும் மலர் போன்று மலர்ந்து வாசகர்களுக்கு அளவிலாப் பயனையும் அறிவையும் அளித்து வரும் விலை மதிக்க முடியா விடயங்களைகொண்டு வெளியாகும் செவ்வந்திக்கு எனது இதய பூர்வமான வாழ்த்துக்கள். மேலும் உங்கள் சஞ்சிகையில் வட இலங்கை சங்கீதசபை பரீட்சை மாணவர்களுக்கு உதவக்கூடிய கட்டுரைகளை பிரசுரிக்க இடம் தந்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன். கலை என்னும் போது லலித கலையும் உள்ளடக்கும். எனவே செவ்வந்தியில் இடம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

★ எம். கிருபைராசா
7ம் குறிச்சி, அக்கரைப்பற்று.

கல்வியோடு சம்பந்தமான விசேட கட்டுரைகளை உங்கள் சஞ்சிகையில் வெளியிட்டதற்கும், இனிமேல் வெளியிடுவதற்கும் நான் என்றென்றும் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

★ ஏ. ஜே. நஸீஹா
ஸல்மானி, துந்துவை,
ஹபுறுகலை

தொடர்ந்து செவ்வந்தியை வாசித்து வருபவர்களில் நானும் ஒருவர். தொடர்ந்து செவ்வந்தியை எமது பகுதிகளில் கிடைக்கும்படி செய்யவும். இதழ் 14ல் இருந்து இதுவரை வந்த பிரிதிகளை அவசரமாக அனுப்பவும். செவ்வந்தி இதழ் பல்லாண்டு வாழ்ந்து பல்கலை பரப்ப எனது வாழ்த்துக்கள்.

★ கே. பரமானந்தன்
172, குடியிருப்பு
மன்னார்.

சகல செவ்வந்திகளையும் சேர்த்து வைத்து வாசிக்கும் எனக்கு சில இதழ்கள் தவறிவிட்டது. நான் விரும்பும் செவ்வந்தியை எப்படியாவது எனக்கு அனுப்பிவைக்கவும்.

★ ஏ. சம்சுதீன்
கட்டுப்பளை றோட், ஏறுவூர்.

செவ்வந்தியில் வெளியாகும் கட்டுரைகள் அனைத்தும் தரமானவை. சுதந்திர வலய கட்டுரை மிகவும் பயனை வழங்கியுள்ளது. இதற்கு திரு. சின்னத்தம்பிக்கும் அதனை பிரசுரம் செய்த செவ்வந்திக்கும் வாழ்த்துக்கள்

★ செல்வி. இ. அசோகா
'மண்டூர் அசோகா'
ஆசிரியை மண்டூர்.

தாங்கள் சட்டக்கல்லூரி மணவர் என்பதாலோ என்னவோ சட்டத்திற்கு அதிக இடம் கொடுக்கிறீர்கள். சட்டம் கலை, இலக்கியம் மூன்றும் அடங்கிய சஞ்சிகையில் கலைக்கும் இலக்கியத்துக்கும் அதிக அளவு இடம் கொடுக்காததால் என்போன்ற இலக்கிய தாகமுள்ள வாசகர்களைத் திருப்திப்படுத்த செவ்வந்தி தவறிக்கொண்டிருக்கின்றது. இதனால் செவ்வந்தியின் தரத்தை குறைவென்று சொல்லவில்லை. மாணவர்களுக்கு பயன்படும் அரிய விடயங்கள்,சேவை பாராட்டுக்குரியது மாணவ பருவத்தைக்கடந்தவர்களையும் வர்த்தது கட்டுரைகளுக்கு ஒதுக்கும் இடத்தை குறைத்து இரண்டு, மூன்று சிறுகதைகள் இலக்கிய கட்டுரைகள் கலைத்துறைச் செய்திகள், கவிதைகள் போன்ற சுவையான விடயங்களைச் சேர்த்து அட்டைப்படத்தை அடக்கமாக தயாரித்து வெளியிட்டால் நன்று. இவற்றால் செவ்வந்திக்கு இன்னும் ஏராளமான வாசகர்கள் கிடைப்பார்கள். இவை ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் ஆர்வமுள்ள ஒரு வாசகியின் ஆலோசனை என நினைத்து செவ்வந்திக்கு இன்னமும் மெருகூட்டவும்.

---



மழை, வெயில், காற்று ஆகிய வற்றைப் போரின் கவனத்தை தன் வசம் ஈர்க்கும் பொருட்டு ஆடை அணிவதை பெண்கள் தவிர்த்து கொள்ள வேண்டும் மாசு மறுவற்ற இளமை விலை மதிக்க முடியாத ஒரு சொத்து. அதாரித்தனமாக அதனைச் செலவழிக்கக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(27ம் பக்கத் தொடர்ச்சி)

யும் அவள் கேட்கவில்லை "நான் படுத்துவிட்டது தெரிந்தால் அவள் என் அறைக்குள் வர மாட்டாள் குடித்துவிட்டுச் சுய நினைவு இழந்து கும்பகர்ணன் போல் தூங்குவேன் என்பது அவளுக்குத் தெரியும்" என்று அன்னத்திடம் கூறிவிட்டு யன்னல் வழியாக வெளியே பார்த்தார்

அறையில் வெளிச்சம் இல்லாததால் கீழே நடப்பது மேலே உள்ள தியாகராஜனுக்குத் தெரிந்தது ஆனல் கீழே உள்ளவர்களுக்கு மேலே நின்ற தியாகராஜனேயோ அன்னத்தையோ தெரிந்திருக்க நியாயமில்லை இதனை அன்னத்திடம் சொல்லி அவளைத் தேற்றினுன் தியாகராஜன்.

காரின் கதவைத் திறந்து வெளியே வந்த சுபத்திரா மேலே மாடியைப் பார்த்துவிட்டு "ஐயா தூங்குகிறுர் குடித்துவிட்டுத் தூங்குவதனல் காலை எட்டு மணிவரை எழும்பமாட்டார்பயப்படாமல் வாங்க" என்று சொல்லி டிரைவரை வீட்டுக்குள் அழைத்தால் சுபத்திரா

இதை மேலே பார்த்துக் கொண்டிருந்த தியாகராஜனுக்கு இதுவரையும் தனது மனைவியைப்பற்றிப் போட்டிருந்த கணக்கு தப்புக்கணக்கு என்று புரிந்தது தன் முழு உருவத்தையும் கண்ணுடியில் பார்ப்பது போன்ற பிரமை என்று அவனுக்கு ஏற்பட்டது

அன்னத்திற்கு இப்போது சிறிதும்பயமில்லை இகைத்து நின்றதியாகராஜனைப்பார்த்து "அம்மாவும் எங்களை மாதிரித்தான் நீங்கவாங்க" என்று அவர் கையைப்பிடித்து இழுத்தாள்.

(யாவும் கற்பனை)

# கோடுகளும் கோணங்களும்

## 12 வது அத்தியாயம்.

★எமது தொடர் கதை★

வாழ்க்கை எப்போதும் நேர் கோடாக இருந்ததில்லை. அப்படி இருந்திருந்தால் மனிதன் தன்னை வேறு சக்தி இருக்க முடியாது என்று அறிதி இட்டுக்கூற ஆரம்பித்து விடுவான். ஆகவே தான் கடவுள் விதிக்கோடு ஒன்றை வரைந்து அதன் மூலம் பல கோடுகளையும், கோணங்களையும் உருவாக்கி விட்டிருந்தான். இல்லையெனில் இராசேஸ்வரன் மனம் மாறி விட்டிருந்த போதும் விதி தனது விளையாட்டினை மாற்றமுடியாது போய் விட்டது

தொலை பேசியை வைத்து விட்டுத் திரும்பியவர் ரங்கநாதனை வாசலில் பார்த்ததும் வெல வெலத்துப் போனுர். அதே சமயம் தன்னை ஒரு நிலைப்படுத்திய வாறு "வாருங்கள்" என்று அவனை வரவேற்றுர்.

"மோனிங் சார்" என்றுன் ரங்கநாதன்.

'நீங்கள் வருவீர்கள்" என்று ராதா சொன்ஞள் "நல்லது என்னைப் பொறுத்தமட்டில் நான் எதையும் ஒழிவு மறைவு இன்றிப் பேசுபவன் நேரடியாகவே விடயத்திற்கு வருகிறேன்'

"ஆல் ரைட்"

"நான் இங்கே வரும் போது பயந்து கொண்டே வந்தேன் ஆனல் நீங்கள் போனில் கதைத்ததிலிருந்து நான்......

"உண்மை தானப்பா என் மகளின் வாழ்க்கை தான் முக்கியம்" என்று கூறி நிறுத்திக்கொண்டார்

'என்னைப் பொறுத்த மட்டிலும், உங்கள் குடும்பத்தைப் பொறுத்த மட்டிலும் உங்கள் மகள் ராதாவுக்கு எந்தக் குறையும் வைக்க மாட்டோம்" என்று கூறி விடை பெற்றுன்

அவனுக்கு வானத்தில் பறப்பது போன்ற மகிழ்ச்சி எத்தனையோ பயங்கரமான கற்பனைகளோடு வந்தவனுக்கு பழம் நழுவிப் பாலில் விழுந்தது போன்ற பரவச உணர்வுடன் வீட்டுக்குச் சென்றுன்.

★ கே. எஸ். ஆனந்தன் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் நகர்ந்து வாரங்களாகின்றன. கல்யாணம் நிட்சயம் செய்யப்பட்டு விட்டது. திருமணப் பதிவுக்கும் நாட்குறித்தாயிற்று. கிட்டத்தட்ட ஒரு மாத இடை வெளியிருந்தது. ரங்கநாதன் கொழும்புக்குச் சென்று விட்டான்.

காலையில் குளித்து விட்டு முன் ஹோலிருந்து முதல் நாளைய பத்திரிக்கையைப் புரட்டினாள் ராதாலெட்சுமி அவள் பார்வையில் விழுந்தசெய்தி ஒரு பரிதாபத்து குரிய செய்தியாகும். அதைப் படித்து முடித்ததும் ''அயோக்கிய ராஸ்கல் இந்த கேஸ் மட்டும் என்னிடம் வந்தால் அவனைக் கம்பி எண்ண வைக்காமல் விடமாட்டேன், பெண்கள் என்றால் கேலிப் பொருட்கள் என்ற நினைப்பு அவன்களுக்கு'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது இராசேஸ்வரன் வந்து சேர்ந்தார்

''என்னம்மா உன் பாட்டில் நீயே பேசிக் கொள்கிறாய் ?'' என்றார்

''இந்தக் கேசைப் பார்த்தீர்களா?''

''படிச்சேன் இவனைப்போல ஆயிரம் பேர் இருப்பாங்க. அதற்கென்ன? ''

'' எனக்கென்னவோ அந்தப் பெண் ஓர் அப்பாவி என்று தான் எண்ணத் தோன்றுது ஓர் முக்கிய புள்ளிக்காக அவள் உதவி செய்யப்போய் மாட்டிக் கொண்டாள் என்றிருக்கே அது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்''

''கடத்தல் கேஹில் இப்படி ஆயிரம் இருக்கும் அவள் பிடிபட்டதக்காக யபரோவது பெரும் புள்ளியைச் சாட்ட தப்ப முனைந்திருப்பாளில்லையா

''அப்படியும் இருக்கலாம். அவள் கூறுவதிலும் நியாயம் இருக்கலாம் இல்லையா?''

''இருக்கலாம் ஆனல் நமக்கு தேவையில்லாத ஒரு கேஸ் யாரோ பணத்தை அடிச்சிட்டிருப்பான் நாம் ஏன் வாதிட்டு அடிபடுவான்'' என்று சொல்லி அவர் முடித்த சமயம் வெளியே யாரோ அழைக்கும் சப்தம் கேட்டது.

''யாரது?'' என்று வெளியே எழுந்து போனார் ராசேஸ்வரன் சில நிமிடங்களின் பின்பு வந்து உன்னைப் பார்க்கனுமாம்

''வாருங்கள்'' என்று குரல் கொடுத்தாள் ராதாலெட்சுமி

சுமார் முப்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண் அவள் கூட இரண்டு வயது மதிக்கத்தக்க ஒரு பையன். அவள் உள்ளே வந்ததும் உட்காரும்படி கூறினாள் ராதாலெட்சுமி. அவள் இந்த நேரத்திலிருந்து ராசேஸ்வரனையே முறைத்துப்பார்த்துக் கொண்டிருந்தவள்'' அம்மா நேற்றும் இங்கே வந்தேன்'' என்று ஆரம்பித்து கூறிய விடயங்களை கேட்க கேட்க ராதாலெட்சுமி மட்டுமின்றி இராசேஸ்வரனும் திகைத்து நின்றார்

(வளரும்)

▦ ▦ ★ ▦ ▦


# தண்டனை

வாணிகேள்வன்

நிறைமாத
கர்ப்பிணி பஸ்
நாங்கள் சிசுக்கள்
மூச்சுப் பேச்சு
ஒன்றும் இல்லை
பஸ் நெருக்கம்
சிலருக்கு விருப்பம்
சிவப்பு மினிக்காரி
பச்சை மிடிக்காரி
இடையில் நான்
இன்பத்திலும் துன்பம்
துன்பத்திலும் இன்பம்
பெரிய தத்துவம்
வியர்வை ஆறுகள்
என்னில் சங்கமித்த
நீந்தாத குறைதான்
ஆடை காய
வாடை தேவை

அவ்வளவு வியர்வை
என்னிடம் வந்தது
முண்டியடித்து
இறங்கி வந்தேன்
அறிமுக முகங்கள்
என்னைப் பார்த்தன
புன்னகை புரிந்தேன்
ஆனல் அவர்கள்
பெருநகை நகைத்தனர்
ஏன்? என்னை......
நானே பார்த்தேன்
ஆடைகள் எங்கும்
கரும், செம்புள்ளிகள்
பழைய கால தண்டனை
கழுதை ஊர்வலம்
எனக்கு வேண்டாம்
பஸ் இருக்கிறது.

# தீர்ப்புக்கூற முடியுமா?



பிரசுரத்துக்காக எமக்கு அனுப்பிய விடைகளில் சிறந்த விடை இங்கு பிரசுரமாகிறது இதனை எழுதிப் பாராட்டுப் பெறுபவர் சட்டக்கல்லூரி மாணவியான செல்வி ஏ. ஜெயஸ்ரீ. விடைகள் அனுப்பிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

★★★

பத்மினி 20 வயது நிரம்பியவள். இவள் அண்மையில் இலங்கை வங்கியொன்றில் கடமை புரியும் திவாகர் என்ற 25 வயது இளைஞனை மணம் புரிந்தாள். மணம் புரிந்த சில நாட்களிலேயே தன் கணவன் ஒரு குடிகாரன் என்பதை உணர்ந்து விட்டாள். சில நாட்களில் திவாகர் ஏராளமான வெளிநாட்டு மதுப்புட்டிகளை வீட்டிலேயே வைத்து அருந்தத் தொடங்கினான். அவனின் வற்புறுத்தலின் பேரில் அவன் படுக்கைக்குச் செல்லும்போது பத்மினியே மதுவைக் கிளாசில் ஊற்றி அவன் கையில் கொடுப்பாள். அவன் அருந்துவான்.

இளம் வயதிலேயே இப்படியொரு கணவனை அடைந்து வாழ்வையே பாழாக்கி கொண்டதாக சில மாதங்களாகத் தன் மனசிலெண்ணிய பத்மினி, அன்றிரவு படுக்கைக்குப் போகும்போது திவாகருக்கு வழங்கும் மதுவில் விஷத்தைக் கலந்து கொடுத்து அவனைக் கொலை செய்துவிடுவதென்ற முடிவுக்கு வந்தாள். அதேபோல், தான் அன்று பகல் வாங்கிய விஷத்தை இரவில் கொடுக்கும் மதுவில் கலந்து வைத்தாள். இரவு திவாகர் படுக்கைக்குப் போகும் போது அதனைக் கிளாசில் வார்த்துக் கொடுத்தாள். அவ்வேளை திவாகரின் நண்பன் சந்திரன் வந்தமையால் அதனை அருந்தாது வைத்துவிட்டு அவனை வரவேற்றான். பின்னர் அவனைத் தன் அறைக்குள் அழைத்து வந்து பத்மினி வழங்கிய மதுக்கிளாசை சந்திரனுக்குக் கொடுத்தான் அவன் சிறிது அருந்தியதும் அதில் கலக்கப்பட்டிருந்த விஷம் மூச்சைத் திணறடிக்கச் செய்தது. சிறிது நேரத்தில் சந்திரன் துவண்டு துடித்து இறந்தான்.

திவாகரும் பத்மினியும் சந்திரனைக் கொலை செய்த குற்றத்திற்காக ''கொலைக் குற்றம். சாட்டப்பட்டுள்ளனர்.

இதில் குற்றவாளி திவாகரா? பத்மினியா? அல்லது இருவருமா?

உங்கள் தீர்ப்பு என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குற்றத்துக்கான பொறுப்புக்கு இரு முக்கிய அம்சங்கள் தேவைப்படுகின்றன. குற்ற மனம், சட்டத்தால் தடுக்கப்பட்ட செயல் என்பவையே அவை. ஒரு குற்றத்தில் இவை இரண்டும் இணைந்தே செயற்படுகின்றன எனலாம் சட்டத்தால் தடுக்கப்பட்ட செயலைச் செய்யும் அது குற்றப் பொறுப்பை உண்டாக்குகின்றது

சட்டத்தால் தடுக்கப்பட்ட செயல் குற்ற மனத்துடன் இணைந்து செய்யப்படும் பொழுது தான் அது முழுமை பெறுகின்றது. குற்றமனம் இன்றேல் குற்றம் இல்லை என்ற அளவிற்கு குற்ற மனம் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.
ஆங்கிலச் சட்டத்தைப் பொறுத்த வரையில் குற்ற மனத்துடன் செய்யப்படும் ஒரு செயலே குற்றப் பொறுப்பை ஏற்படுத்தும் என்பது அடிப் படைவிதியாகக் கொள்ளப்படுகின்றது எனில் மிகையாகாது. ''BREND VS WOOD'' என்ற வழக்கில் LORD GODDARD C-J அவர்கள் கூறிய கருத்து இங்கே நோக்கற் பாலது ஒரு நீதிமன்றம் எந்த ஒரு மனிதனையும் அவன் குற்ற முள்ளமனதுடன் செய்த செயலுக்கு அன்றி வேறு ஒரு செயலுக்கும் தண்டனை விதிக்கக் கூடாது இக் கூற்றிலிருந்து குற்றமனம் எவ்வளவு முக் கியமானது என்பதை உணரமுடியும் ஆங்கிலச் சட்டத்தை தழுவி எழுதப்பட்ட இலங்கை குற்றவியல் சட்டக் கோவை (PENAL CODE) குற்ற மனத்தை ஆங்காங்கு வலியுறுத்திச் செல் கின்றது என்பது கண்கூடு.

குற்றத்தின் இவ்விரு அம்சங்களையும் கருத்தில் கொண்டு இவ்வழக்கை நோக்கும் போது இவ் விரு செயல்களும் இங்கு இடம் பெற்றிருப்பதை நாம் காணலாம். ஆனல் இங்கு எந்த முறையில் நடந்திருக்கிறது என்பது தான் கேள்வி. சந்திரன் கொலை சையப்பட்டது திவாகர் கொடுத்த நஞ்சு கலந்த மதுவினல் மதுவுக்குள் நஞ்சு கலந் தது பத்மினி. எனவே இருவரும் இதில் பங்கு கொண்டுள்ளனர் ஆயினும் இச்செயல் செய்யப் படும் போது யாருக்கு குற்ற மனம் இருந்துள்ளது என்பதை கவனிப்போமானல் திவாகர் நஞ்சு கலந்த மதுவை சந்திரனுக்கு கொடுத்த போதும் அவனுக்கு நஞ்சு கலக்கப்பட்ட மதுவை தனது நண்பனுக்கு கொடுக்கிறேம் எனத் தெரியாது இதனல் குற்ற மனம் திவாகருக்கு இருக்கவில்லை ஆகவே குற்ற மனம் திவாகருக்கு இருந்திருக்க வில்லை. எனவே குற்ற மனமின்றி திவாகரால் செய்யப்பட்ட செயல் அவனுக்கு குற்றப் பொறு ப்பை வழங்குமா? இதற்கு விடை காண நாம் பின் வரும் உதாரணத்தை நோக்குதல் நல்லது A என்பவன் பற்றை ஒன்றில் ஒழித்திருக்கிறன் இது B க்கு தெரியும் C க்கு தெரியாது. B C யிடம் அந்த பற்றைக்குள் மான் ஒன்று இருப்பதாகவும் அதனைச் சுடும்படியும் கூறுகிறன். பற்றை அசை வை நோக்கிய C அதனை நோக்கிச் சுடுகிறன். பற்றையுள் நின்ற A சூடுபட்டு இறக்கிறன் இங்கு C க்கு குற்ற மனம் இருக்கவில்லை. B க்கு இருந்தது C அச் செயலைச் செய்ய B யே பொறுப்பாளி எனவே B யே குற்றப் பொறுப்புக்கும் உள்ளாகி றன். இவ்வுதாரணத்தை கருத்திற் கொண்டு பார்க்கையில் திவாகரின் நிலை தெளிவாகப் புரி கின்றது. சந்திரனை கொல்ல வேண்டும் என்ற குற்ற மனம் அவனுக்கில்லை. ஆதலால் அவன் குற்றப் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும்.

சந்திரனின் கொலைக்குப் பொறுப்பாளி யார்? மதுவில் நஞ்சு கலந்து கொடுத்த பத்மினியா?
இக் கேள்விக்கான விடையை தேடும் போது பத்மினி தன் கணவனைக் கொல்ல வேண்டும் என்ற குற்ற மனத்துடனேயே மதுவில் நஞ்சை கலந்து கொடுத்தாள். இலங்கை குற்றச்சட்டக் கோவை யின் 294ம் பிரிவின் 1ம் பிரிவு மரணம் விளைவிக் கும் கருத்துடன் ஒரு செயலைச் செய்து மரணம் விளைவித்தால் கொலைக் குற்றத்துக்குப் பொறுப் பாக்கும் எனக் கூறுகிறது. இந்த வகையில் பத் மினி இப் பிரிவிற்குள் பொறுப்பாக்கப்படுகிறன்

எனினும் பத்மினி குற்றக் கருத்துடன் நஞ் சைக் கலந்து கொலை செய்ய நினைத்தாலும் அவள் தன் கணவனையே கொலை செய்ய நினைத்தாளே ஒழிய தன் கணவனின் நண்பனை அல்ல ஆகவே அவள் பொறுப்பாளி அல்ல என்ற வாதம் எழலாம் ஆனல் இது ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஒன்றுகும்.
REX VS EDVIN என்றவழக்கில் ஒருவரை கொல்லும் நோக்குடன் துப்பாக்கியால் சுட்ட போது வேறு ஒருவர் இறந்தார். சுட்டவர் கொலைக்கு பொறுப்பாளி யாக்கப் பட்டார் இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலவே

**REX VS SURIA NARAYANA MOORTHY**

என்ற வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் ஒருவரைக் கொலை செய்து பெருமளவு காப்புறுதிப் பணத்தை பெறும் நோக்குடன் நஞ்சு கலந்த இனிப்புப் பண்டத்தை அவரிடம் கொடுக்கிறார். அவர் சிறிது சாப்பிட்டு மிகுதியை எறிகிறார் அதை குற்றம் சாட்டப்பட்டவரின் சகோதரரின் பிள்ளைகள் உண்டு அதன் காரணமாக இறந்தனர். இதில் குற்றஞ் சாட்டப்பட்டவரே பிள்ளைகளின் இறப்புக்கு பொறுப்பாளி ஆவார் எனக்குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. பத்மினியால் தனது கணவனுக்கு கொடுக்கப்பட்ட நஞ்சு நண்பனின் மரணத்துக்கு ஏதுவானது. குற்றப் பொறுப்பு அவளையே சென்றடையும்.

கணவனுக்கு, படுக்கைக்கு போகும் போது மதுவை கிளாசில் வார்த்துக் கொடுப்பது பத்மினியின் வழக்கமாகும். கணவனின் வற்புறுத்தலின் பேரில் அதை அவள் செய்து வருகிறாள். சம்பவம் நடந்த தினம் வழமை போல் கணவனுக்கு முன் கூட்டியே தன்னால் விஷம் கலக்கப்பட்டது எனத்தெரிந்தும் கிளாசில் வார்த்துக் கொடுக்கிறாள். ஆகவே அவளின் இறுதி செயல் முடிந்தது. எதிர்பாரா வகையில் நண்பன் வந்தமையால் அம்மதுவை நண்பனுக்கு திவாகர் கொடுத்து விடுகிறான் இல்லாவிட்டால் அவனே அருந்தியிருப்பான். எனவே கணவன் குடிக்காவிட்டாலும் பத்மினியின் இறுதிச்செயல் (கொலைக்கான) மதுவை கணவனின் கையில் கொடுத்ததோடு முடிந்து விட்டது. ஆகவே நண்பனின் இறப்புக்கும் அவன் கொடுத்த மதுவே காரணம் உயிரைப் போக்க வேண்டும் என்று பத்மினியின் கருத்துக்கு சந்திரனின் இறப்பு முற்றுப்புள்ளி வைத்து விட்டது.

இந்த வழக்கில் அவள் வாழ்க்கையில் இளம் வயதில் ஏற்பட்ட எந்த கசப்பான நிகழ்சிகளோ கணவன் குடிக்கிறான் என்ற மனக் கசப்போ, வற்புறுத்தலின் பேரில் தினமும் தானே மதுவை வார்த்துக் கொடுக்க வேண்டும் என்ற வெறுப்போ எதுவானாலும் குற்றப் பொறுப்பில் இருந்து அவளை விடுவிக்க பாதுகாப்பளிக்காது. இதனால் அவள் கணவனைப் பிரிந்திருக்க முயற்ச்சி செய்திருக்கலாம் ஆனால் உயிரைப் பிரிக்கும் நோக்குடன் செய்த செயல் பாதுகாப்பு வழங்க மாட்டாது. ஆகவே எனது தீர்ப்பின்படி "சந்திரனின் மரணத்துக்கான குற்றப் பொறுப்பு பூரணமாக பத்மினியையே சேர்கிறது. எனவே அவளே குற்றவாளி திவாகர் மனைவியின் செயலை எந்த வகையிலும் அறியாது இருந்தமையால் பொறுப்பாக மாட்டான். அவனை நிரபராதி என தீர்ப்பளித்து விடுதலை செய்கிறேன்.

## தீர்ப்புக் கூறமுடியுமா ?

ஆனந்தன் மாலா இருவரும் இணைபிரியா காதலர்கள், பள்ளி வாழ்வில் ஆரம்பித்த இவர்களது காதல் பல வருடங்களாகத் தொடர்ந்து இறுதியில் அவர்கள் வேலை செய்யும் இடம் வரை தொடர்ந்தது. ஆனந்தன்-மாலா இருவரும் உல்லாசமாகப் பல இடங்களுக்கும் போய் வருவர். ஆனந்தன் அளித்த நம்பிக்கையின் பெயரில் அவனுடன் கணவன் மனைவி போல் உறவு கொண்டு வந்தாள். சில நாட்களின் பின் மாலா தாய்மையுற்றதை அறிந்த ஆனந்தன் அவளுடன் தொடர்பை நிறுத்தத் தொடங்கினான். ஆனால் மாலா அவன் இருந்த இடத்தை தேடிப்பிடித்து அவன் முன்னிலையிலேயே உயிர் விட முனைந்தாள். இதனால் மனம் குழம்பிய ஆனந்தன் தனது நண்பனான வைத்தியர் சிங்கத்துடன் தொடர்பு கொண்டு மாலாவிற்கு கருச்சிதைவு செய்யும்படி வேண்டினான். முதலில் சம்மதித்த வைத்தியர் பின்னர் மாலாவைக் கூட்டி வந்த போது அவள் உடல் நிலையை பரிசோதித்து விட்டு கருச் சிதைவு செய்ய மறுத்தார் இதனால் ஆத்திரமடைந்த ஆனந்தன் அங்கிருந்த கத்தியை எடுத்து கொலை செய்வதாக பயமுறுத்தி கருச்சிதைவு செய்யும்படி வற்புறுத்துகிறான் உயிர் போகப் போகிறதே எனப்பயந்த வைத்தியர் கருச்சிதைவு செய்தார். கருச்சிதைவின் போது எவ்வளவோ முயற்சி செய்தும் மாலாவை காப்பாற்ற முடியாமற் போய் விட்டது. அவள் இறப்பினால் அதிர்ச்சியுற்ற ஆனந்தன் வைத்தியரைப் பலம் கொண்ட மட்டும் தாக்கினான் இதனால் வைத்தியர் படுகாயமடைந்தார் மாலாவின் இறப்புக்கும் வைத்தியரின் படுகாயத்திற்கும் ஆனந்தனே பொறுப்பாளி என வழக்கு தொடரப்பட்டுள்ளது.

ஆனந்தன் குற்ற வாளியா? நிரபராதியா?

நீங்கள் ஒரு நீதிபதியாய் இருந்தால் உங்கள் தீர்ப்பு ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவான நோக்கம்

## COMMON INTENTION.

குற்றச் சட்டம் பல வகையான சட்டக் கோட்பாடுகளையும் மனக்கருக்களையும் (CONCEPTS) என்னகத்தே கொண்டுள்ளது இக்கோட்பாடுகள் சட்ட ஏற்பாடுகள் அற்ற இடைவெளிகளை நிரப்புவதற்கு பெரிதும் பயன் படுத்தப்படுகின்றன. இவ்வாறான சட்டக்கோட்பாடுகளுக்கு தெளிவான ஒரே அலகாகக் கொடுக்கும் வரைவிலக்கணங்களை சட்டத்தினை ஆக்கும் பராளுமன்றங்களோ அல்லது வேறு சபைகளோ கொடுக்கவில்லையாயினும் அவ்வப்போது சட்ட எழுத்தாளர்கள் (JURISTS) சில வரைவெல்லைகளை வகுத்துள்ளனர் இதே அடிப்படையின் பொதுவான நோக்கம் என்னும் சட்டவிதியினை எடுத்துப்பார்க்கின் குற்றச் சட்டத்தின் மிகமுக்கியமான ஒரு கோட்பாடாக தற்கால குற்றவியல் (CONTEMPORATY CRIMI NAL JURISTRUDENCL) விளங்குகின்றது.

இப்பொதுவான நோக்கம் என்னும் விதி எமது இலங்கையின் தண்டனைச் சட்டக்கோவையின் சில பிரிவுகளில் அதாவது பிரிவு 32 தொடக்கம் பிரிவு 36 வரையிலான பிரிவுகளில் அடக்கப்பட்டுள்ளது. இவ்விதியின் நோக்கம் என்னவெனில் பல பேர் சேர்ந்து ஒரு குற்றத்தினைப் புரியும் போது அவர்கள் எல்லோர் மேலும் பொறுப்பைச் சுமத்துவதாகும். ஏனெனில் குற்ற ஆக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்கள், சில சமயங்களில் அதனால் உருவாகிய குற்றச் செயலில் பங்கு பற்றாமல் போகக் கூடும். குற்றச் செயலில் அவர்கள் பங்கு பற்றவில்லை என்ற காரணத்தினால் அவர்கள் விடுதலையடையக்கூடும் சட்டம் குற்ற ஆக்கத்தில் பங்கெடுத்தவர்களுக்கும் இடையில் ஒரு வேறு பாட்டையோ அல்லது பாரபட்சத்தினையோ காட்ட விரும்பவில்லை ஆதலால் இது இருதிறத்தவர் ளுக்கும் ஒரு பொறுப்பை சுமத்துவதற்காக ஏற்படுத்தப் பட்ட ஒரு சட்டக் கோட்பாடே பொதுவான நோக்கமாம்.

இனி நாம் பிரிவு 32ன் வரை விளக்கத்தினைப் பார்க்கும் போது அது கூறுவதாவது "ஒரு குற்றச் செயல் பலரால் தங்களுடைய பொதுவான எண்ணங்களை நிறைவேற்றும் பொருட்டு செய்யப்படுமாயின் அக் குற்றச் செயலுக்கு அவர்களில் ஒவ்வொருவரும் தானே அந்தச் செயலைத் தனித்துச் செய்தான் என்ற அடிப்படையில் சட்டம் அவர்கள் மேல் பொறுப்பை ஏற்படுத்தும்." மேலும் இப்பிரிவு இயங்க ஆரம்பித்தவுடன் சில சட்ட விளைவுகளையும் நடைமுறை விளைவுகளையும் ஏற்படுத்தும். இங்கு முக்கியமாக வழக்கு தொடுதரப்பினர் அத்தக் கூட்டத்தில் இருந்த எவ்வங்கத்தவன் அக்குற்றத்தினை செய்தான் எனக் காட்டுவதற்குப் பதிலாக அக்கூட்டத்திலுள்ள ஒருவனால் செய்யப்பட்டது எனக் காட்டுதல் போதுமானதாகும். ஆகவே இப் பிரிவு நிரூபித்தற்பொறுப்பில் (BURDEN OF PROOF) சில வேறுபாடுகளை ஏற்படுத்திக் கொள்கின்றது. ஏனெனில் குற்ற வழக்குகளில் வழக்குத் தொடுதரப்பினர் ஒருவன் மேல் குற்றம் சுமத்தியிருப்பின் அவன்தான் அதைச் செய்தான் என்பதனை சந்தேகத்திற்கு இடமின்றி நிறுவுதல் வேண்டும் அந்நேரத்தில் வேறொருவரும் அக்குற்றத்தை செய்ய வாய்ப்பிருந்து அல்லது செய்திருக்கக் கூடும் என ஊகிக்கக் கூடியதா இருப்பின் அது எதிரிக்கு நன்மை பயப்பதாக இருந்து அதில் விடுதலை பெற உரிமையுடையவனாவான். இது டாக்டர் பத்மினி குலரத்தின என்ற வழக்கிலும் கூறப்பட்டது. ஆனால் பொதுவான நோக்கத்தைப் பொறுத்தளவில் குறிப்பிட்ட ஒருவன்தான் குற்றத்தை செய்தான் என நிரூபிக்க வேண்டியதில்லை வேறொருவனாலும் செய்யப்பட்டிருக்கக் கூடும் எனவும் பொது எண்ணமும் இருந்தது எனக் காட்டினாலும் போதுமானதாகும். GOUR என்ற ஆங்கில அறிஞர் பொதுவான நோக்கம் என்ற சட்டக்கோட்பாட்டின் விளைவு எது என்பதை எடுத்துக்கூறியுள்ளார் அவருடைய கருத்துப்படி ஒரு கூட்டத்தில் இருந்த எந்த ஒருவன் குற்றத்தைச் செய்திருக்கின்றான் என்பதை நிரூபிக்க முடியாத சந்தர்ப்பங்களில் இவ்விதி உதவியளிக்கும் எனக்கூறியுள்ளார். மேலும் பொதுவான நோக்கம் என்னும் சடட்கோட்பாடு இயங்குவதற்கு சில முக்கியமான விடயங்கள் அங்கு இருத்தல் வேண்டும் பல பேர்கள் குற்றம் சாட்டப்பட்டிருக்க வேண்டும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் எல்லோரும் ஒரே இடத்தில் இருந்திருத்தல் வேண்டும். அவர்களுக்கிடையில் ஒரு பொதுவான நோக்கம் இருந்திருக்க வேண்டும். என்பதுடன் அப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவான நோக்கத்தினை அடையும் பொருட்டே அக் குற்றச் செயல் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

இலங்கை குற்றச் சட்டத்தொகுப்பின் 32 ம் பிரிவில் அடக்கப் பட்டுள்ள இவ்விதி, இந்தியாவில் குற்றச் சட்டத்தொகுப்பின் 34ம் பிரிவின் அடக்கப் பட்டுள்ளது அதனல் இந்திய நீதி மன்றங்களின் இவ்விதி பற்றிய தீர்ப்பிற்கு இலங்கை நீதி மன்றங்களும் அதிக மதிப்பு அளித்து வருகின்றன NIRMA KONTA ROY என்ற இந்திய வழக்கில் இப்பிரிவுக்கு STEVEN J - பொருட் கோடலை கொடுத்திருந்தார் அவ் வழக்கில் A B என்ற இருவர் ஒரு பொலிஸ் காரனைக் கொலை செய்ததற்காக குற்றச் சாட்டப்பட்டனர் இதில் A யினுடைய குறி தவறிவிட்டது. ஆனல் Bயின் குண்டு பட்டதினலேயே பொலிஸ் அதிகாரி இறந்தான். இவ் வழக்கில் இருவரும் குற்றவாளிகள் என வாதிக்கப்பட்டது. ஆனல் STEVEN J இதை நிராகரித்து 34ம் பிரிவு இலக்க குற்றம் சாட்டப்பட்டவர்கள் எல்லோரும் குற்றச் செயலில் பங்கு பற்றி இருத்தல் வேண்டும் எனக் கூறினர். இதன் படி A குற்றவாளியல்ல எனத் தீர்ப்பளித்தார். ஆனல் இவ்வழக்கு கல்கத்தா உயர் நீதிமன்றத்தாலும் பிரிவுக் கவுன்சிலாலும் BARENDRA KUMAR GHUSE என்ற வழக்கில் நிராகரிக்கப்பட்டது. அவ் வழக்கில் 34ம் பகுதியின்படி பல பேர்கள் சேர்ந்து குற்றச் செயலைச் செய்யும் போது அவர்களில் எவன் அக்குற்றத்தைச் செய்தான் என்று நிரூபிக்க வேண்டியதில்லை என பிரிவுக்கவுன்சிலில் கருத்துத் தெரிவித்தது. அவர்கள் எல்லோரும் குற்றச் செயலை நேரடியாகச் செய்திருக்காவிடினும் அவர்களுக்குள் ஒரு பொதுவான நோக்கம் இருந்தது எனக் காட்டப்பட்டால் போதுமானதாகும் என்றும் அந்த ஒரு அம்சமே மற்றைய எல்லோர் மீதும் பொறுப்பை சுமத்துவதற்குப் போதுமானதாகும் எனவும் மேற்கண்ட வழக்கில் கூறப்பட்டது இதனல் NIRMAL KONTA ROY பிழையாகத் தீர்க்கப் பட்ட வழக்கு என்ற முடிவுக்கு நாம் வரக்கூடியதாகவுள்ளது.

பொதுவான நோக்கம் என்று கட்சிக்காரர்களுக்கிடையே இருந்தது என்பதற்கு முன்கூட்டியே அவர்கள் ஒன்று சேர்ந்து திட்டமிட்டு இருந்தனர் என்னும் மூலகத்தினை காட்டுதல் வேண்டும் பொதுவான நோக்கம் என்பதையும் ஒரே நோக்கம் என்பதையும் வேறுபடுத்துதல் வேண்டும் இவ்வித்தியாசம் இந்திய வழக்கான MAHALUBSHA என்ற இந்திய வழக்கில் எடுத்துக் காட்டப்பட்டது. இவ்விரண்டு நோக்கங்களின் வித்தியாசத்தினை எடுத்துக் காட்டுவதற்காக அவர்களுக்கிடையில் முன் கூட்டியே ஒரு திட்டம் இருத்தல் வேண்டும் எனக் கூறி அம் முன்திட்டம் இருதாலேயே அது பொதுவான நோக்கம் எனக் காட்டலாம் என MAHALUB SHA என்ற வழக்கில் எடுத்துக் கூறப்பட்டது. ஆனல் இதன் பின் வந்த வழக்குகளில் MAHALUBSHA என்ற வழக்கில் கூறப்பட்ட விதி குறுக்கி கூறப்பட்டது. அவ் வழக்கில் கூறப்பட்டது என்னவெனில் பொதுவான நோக்கம் ஏற்படுத்துவதற்கு முன் திட்டம் இருக்கவேண்டிய அவசியம் இல்லையெனவும் அவுர்களுக்கு அச்சமயமே ஒரு மன ஐக்கியம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் கூறப்பட்டது. மேலும் MADRAS உயர் நீதி மன்றம் கூறியதாவது முன் திட்டம் என்னும் மூலகம் 34ம் பகுதியை இலகுவாக இயங்கப் பண்ணும் என்பது உண்மையெனினும் முன் திட்டம் இல்லாத காரணத்தினல் 34ம் பிரிவு இயங்காது எனக் கொள்வது தவறு என்று கூறப்பட்டது.

திரு. அரவிந்தன் *L. LB (cey)*

இலங்கையில் BARENDRA KUMAR GHOS என்ற வழக்கில் கொடுக்கப்பட்ட தீர்ப்பை இலங்கை நீதிமன்றங்கள் REX VS SOMAPALA என்ற வழக்கிலும் REX VS RANASINGHE என்ற வழக்கிலும் ஏற்றுக் கொண்டது, இலங்கையிலும் ஒரு காலத்தில் MAHALUB SHA என்ற வழக்கின் தீர்ப்பைப் பின் பற்றி பொதுவான நோக்கம் இருந்தது என்பதனைக் காட்ட முன்திட்டம் என்னும் மூலகம் இருக்க வேண்டும் எனற கருத்தைக் கொண்டிருந்தது. இதனல் REX VS ASSAPPU REX VS PIYADASA என்ற வழக்குகளிலும் இக் கருத்து ஏற்றுக் கவனிக்கப்பட்டது ASSAPPU வழக்கில் DIAS நீதியரசர் மேல்முறையீட்டின் போது

வளரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வந்தியின் புதிய முடிவு

எமது அன்பு வாசகப்பெருமக்களே! செவ்வந்தி சஞ்சிகை உங்களையும் கேளாது ஒரு முடிவைச் செய்து விட்டது அம்முடிவை நீங்கள் எல்லோரும் செவ்வந்தியின் வளர்ச்சி கருதி ஏற்றுக் கொள்வீர்கள் என்ற திடமான நம்பிக்கையே அதற்குக் காரணம்.

நீண்ட காலமாக எமது கட்டுப்பாட்டையும் மீறி செவ்வந்தி இதழ்கள் மாதம் தவறியும் சிலவேளை இரண்டு மாதங்கள் கழிந்தும் வெளிவருதாலும் நாம் மாத ஒழுங்கையும் மனதில் கொண்டு தவறிய இதழ்களை மாதம் பிந்தாமலும் வெளியிட்டு வந்துளோம் அந்த இடைவெளியை மாதம் இரு இதழ்களாக வெளியிட்டு நிரப்பலாம் என்ற நப்பாசையே அதற்கு காரணம். இலங்கையைப் பொறுத்தவரையில் அது முடியாது. எனவேதான் நாம் பின்வரும் முடிவை மேற் கொண்டுள்ளோம் கடந்த ஆண்டு நாம் ஆண்டு மலராக 13 வது இதழையும் 14-15 ஆக இணைத்து இரு இதழ்களையும் 16,17,18,19 தனித்தனி இதழ்களாகவும் இவ்விதழ் 20-21 இரு இதழ்களை இணைத்து ஆக மொத்தம் ஒன்பது இதழ்களை வெளியிட்டுள்ளோம் தவறிய இதழ்கள் மூன்று இம்மூன்று இதழ்களையும் ஆகஸ்ட் மாதத்திக்குள் வெளியிடலாம் என்பது முடியாத காரியம் ஆனால் எமது இலக்க ஒழுங்கைக் கருத்திற் கொண்டு அடுத்த இதழாக வரும் ஆண்டுமலர் மிக அதிகமான பக்கங்களில் குறைந்த விலையில் 22,23,24,25 இதழ்களையும் உள்ளடக்கி செப்டெம்பர் மாதம் வெளிவரவுள்ளது. இதனால் செவ்வந்தியின் மாத இதழ்கள் மூன்றாவது வருட ஆரம்பத்தில் இருந்து அவ்வவ் மாதங்களில் வெளிவரும் குறிப்பாக மாத ஆரம்பத்திலேயே செவ்வந்தியை நீங்கள் பெற்றுக் கொள்ள வழிவகுக்கும்.

## சந்தா தாரருக்கு

சந்தா தாரர்களுக்கு மாத்திரம் அவர்கள் அனுப்பிய பணத்துக்கான மேலதிக பிரதிகள் அனுப்பி வைக்கப்படுமென்பதை உறுதியுடன் கூறி வைக்கிறோம் தவிர மூன்றாவது ஆண்டு ஆரம்பத்தில் இருந்து இவ் இதழ்கள் முன்னர் ஒரு பக்க விளம்பரத்தில் கூறப்பட்டது போல் சந்தா தாரர்களிடமிருந்து பணம் அறவிடப்படும். சகல சந்தா தாரர்களுடனும் இது பற்றி தனித்தனி தபால் தொடர்பு கொள்ளப்படும்.

அடுத்த இதழ் புதுமையும் பொலிவும நிறைந்து ஆண்டு மலராக வெளிவரவுள்ளது செப்டெம்பர் நடுப்பகுதியில் இலங்கை முழுப்பகுதியிலும் இதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்று கூறிவிடைபெறுகிறோம்

ஆசிரியர்

Appropriate Te n ogy Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No .........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.
ராணி
சினிமாவில்

தினசரி
4
காட்சிகள்

சிவாஜி
மஞ்சுளா
நாகேஸ்
பாலாஜி
மற்றும் பலர்
நடித்த

யாழ் நகரில் திரையிடப்பட்ட சகல
படங்களினதும் வசூல் சாதனைகளை
முறியடித்து 100-வது நாளை நோக்கி
வெற்றிநடை போடுகிறுன்
59 நாட்களில் 4 லட்சம் ரூபாவை
வசூலாக்கிய ஒரே வர்ணச் சித்திரம்

# உத்தமன்



இப்பொழுது
நடைபெறுகிறது!

ஸ்ரீதர்
யாழ்நகர்
தினசரி 4 காட்சிகள்

★ ஜெய்சங்கர்
★ நாகேஸ்
★ லட்சுமி
★ விஜயலலிதா
மற்றும் பலர் நடித்த

கே. பாலசந்தரின்

# "நூற்றுக்கு நூறு"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SEVVENTHI** APRIL–MAY 1978

*Registered as a Newspaper in Sri lanka.*

முதுமைக்கு இளமை தரும்
இளமைக்கு கவர்ச்சி தரும்
கவர்ச்சிக்கு நளினம் தரும்
ஆடைக்கு வெண்மை தரும்
"அஸ்கொட் நீலம்"




எமது தயாரிப்புப் பொருட்களைக் கூடுதலாக கூட்டுறவுக் கடைகளில் பெற்றுக்கொள்ளலாம். பெரிய வியாபாரிகளுக்கு எமது தயாரிப்புப் பொருட்கள் குறித்த தவணையில் அனுப்பிவைக்கப்படும்.

இதில் வெளியாகும் ஆக்கங்களின் கருவுக்கு ஆக்கவாளர்களே பொறுப்பாகும். கதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. இச்சஞ்சிகை யாழ்ப்பாணத்தில் 185/4, கில்னர் லேனில் வசிக்கும் பா. தவபாலன் என்பவரால் செட்டியார் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org